இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 123 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 27 – புதன்கிழமை 13 டிசம்பர் 2023 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 123 : Thiruvalluvar Year - 2054 - Karthigai 27 - Wednesday 13 December 2023 - Chennai 12 Pages ₹ 5.00


# உறவு வேலி உறுதிப்பட திரண்டு வாரீர்!



**நெல்லைச் சீமையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாபெரும் மாநாட்டை - அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் - தற்போதைய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக பிரம்மாண்டமான முறையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். இம்மாநாட்டிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 'இளைஞர்களுக்கு வழி விடுவோம்' எனும் தலைப்பில் முரசொலி'யில் 2007 நவ.7-ந் தேதி முதல் டிச.2-ந் தேதி வரை தொடர்ச்சியாக 25 'கலைஞர் கடிதங்கள்' எழுதி உடன்பிறப்புகளுக்கு அழைப்பு விடுத்தார். தற்போது சேலத்தில் 2023 - டிச.24 அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்த விருக்கும் கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாட்டையொட்டி, அக்கடிதங்களை இங்கே எடுத்து வெளியிடுவதில் மகிழ்கிறோம்.**

**உடன்பிறப்பே,**

திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியின் மாநில மாநாடு நெல்லையிலே நடைபெறும்போது, தமிழக இளைஞர்கள் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக பல்வேறு தகவல்களையும், செய்திகளையும் தொகுத்தளித்துக் கொண்டிருக்கும் நிலையில், நேற்றைய கடிதத்தில் நெல்லைச் சீமையிலே முதன் முதலாக வெள்ளையரை எதிர்த்துப் போர்க் குரல் எழுப்பிய பூலித் தேவனைப் பற்றி குறிப்பிட்டு, தி.மு.கழக ஆட்சியில் அந்த மாவீரனுக்கு சிலை அமைத்ததையும், அவர் வாழ்ந்த நெற்கட்டும் செவல் கிராமத்தில் அவரது இல்லத்தை வரலாற்றுச் சின்னமாக ஆக்கியதையும் குறிப்பிட்டிருந்தேன்.

"நேர்மையில் வீரம் நிமிர்ந்து காட்டும் நெற்கட்டும் செவல் கோட்டையன்றோ?" என்று புகழ்ந்து பாடப்படும் அந்த ஊருக்கு நான் நேரில் சென்று பூலித்தேவன் மாளிகையின் திறப்பு விழாவிலும் கலந்து கொண்டேன். அப்போது நான் ஆற்றிய உரையின் சில பகுதிகளை வருங்கால இளைஞர் சமுதாயம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தோடு இங்கே தந்துள்ளேன்.

"இப்போது நடைபெறுகின்ற நிகழ்ச்சி சுதந்திரப் போராட்ட மாவீரன் பூலித் தேவனுடைய வீரத்தை நினைவுபடுத்த, அவன் வீரம் மிக்கவன் மாத்திரமல்ல, விவேகம் மிக்கவன் மாத்திரமல்ல, கருணை உள்ளவன், அன்பு உள்ளவன், பகைவரையும் மன்னிக்கக் கூடிய பண்பாளன் என்ற இந்தச் செய்திகளையெல்லாம் எடுத்துச் சொல்லி, அதைப்போல நாமும் வீரம் மிக்கவர்களாக, விவேகம் மிக்கவர்களாக, நம்முடைய தாய் நாட்டுப் பற்றுள்ளவர்களாக, மண்ணின் மைந்தர்களாக, எதிரிகளுக்கு இடங்கொடுக்காதவர்களாக, அதே நேரத்தில் பகையைக் கூட பண்போடு மன்னிப்பவர்களாக இருந்திட வேண்டும் என்ற அந்தச் செய்தியை சொல்கின்ற நிகழ்ச்சிதான் இந்த நிகழ்ச்சி.

இந்தியாவிலே, குறிப்பாகத் தமிழ்நாட்டிலே,

17 ஆண்டு காலம் போரிட்ட ஒரு பாளையக்காரன் உண்டென்றால் அது மாவீரன் பூலித்தேவன்தான். அவன் கட்டிய கோட்டையை இன்றைக்கு அதன் அடையாளம் மாறாமல் புதுப்பித்து ஏறத்தாழ, 3 இலட்ச ரூபாய் அந்தப் பூலித்தேவனின் உறவினர்களுக்கு அந்த மனையைப் பெறுவதற்காக அரசு சார்பில் வழங்கி, மேலும் ஐம்பது இலட்ச ரூபாய் செலவிட்டு திருமண மண்டபம், தர்பார் மண்டபம், பூலித்தேவனுடைய சிலை, நூலகம், காட்சியகம் அத்தனையையும் இங்கே அமைத்திருக்கிறோம்.

இந்தப் பூலித் தேவனுடைய பெயரை அடிக்கடி நினைவூட்டி பூலித் தேவனுக்கு சிலை எழுப்ப வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டி, இந்த மாளிகையை முன்பிருந்தவாறே மீண்டும் புதுப்பித்துத் தர வேண்டும் என்று என்னை வலியுறுத்தியவர் எல்லாம் இங்கே அமர்ந்திருக்கிறார்கள்.

## கலைஞர் கடிதம்

குறிப்பாக அருமை நண்பர் சீனிச்சாமி தேவர், டாக்டர் ராமகிருஷ்ணன், நண்பர் எல்.சந்தானம், நண்பர் வல்லரசு மற்றும் தி.மு.கழகத்தைச் சேர்ந்த தம்பி ஆலடி அருணா போன்றவர்கள், தம்பி தங்கவேலு போன்றவர்கள் - அத்தனை பேருமே தேவர், தேவர் அல்லாதோர் என்கிற பாகுபாடு இல்லாமல், பூலித் தேவனுடைய மாளிகையை இங்கே புதுப்பிக்க வேண்டும், இந்தக் கோட்டையை மீண்டும் கட்டித் தர வேண்டும், சிலை எழுப்ப வேண்டும் என்று என்னை பல முறை வற்புறுத்தியிருக்கிறார்கள்.

வீரபாண்டியக் கட்டபொம்மனுக்கு முன்பே வெள்ளையனை எதிர்த்துப் போரிட்டு வீர மரணமடைந்த பூலித் தேவன், 1715ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 16ஆம் நாள் பிறந்தார். 1715 முதல் 1767 வரை 53 ஆண்டுகள் வாழ்ந்தார். அதற்குள்ளாக சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு அவர் உயிர் துறந்தார். அவருடைய இயற் பெயர் காத்தப்ப துரை. ஆறு வயது சிறுவனாக இருந்த போது திண்ணைப் பள்ளிக்கூடத்திலே படித்தார். 12வது வயதிலேயே குதிரையேற்றம், மல்யுத்தம், சிலம்பு விளையாட்டு, வாள் வீச்சு, அம்பு எறிதல், கவண் எறிதல், வல்லயம் எறிதல் ஆகிய போர்ப் பயிற்சிகள் பெற்றார். ஆறடிக்கு மேற்பட்ட உயரமும், வைரச் சிலை போன்ற உடற்கட்டும் கொண்டவர் பூலித்தேவர் என்று வருணிக்கப்படுகிறார்.

வீரம், நேர்மை, தன்மான உணர்வு இவற்றின் வடிவம்தான் பூலித் தேவர். அது மாத்திரமல்ல, கொடை உள்ளம் கொண்டவர் என்பதற்கு அடையாளமாக ஏழை, எளியோர்களுக்கு அடிக்கடி அன்னதானமும், புத்தாடைகளும் வழங்கும் பழக்கவழக்கமுடையவர். சாலை வசதிகளைச் செய்து மக்கள் பணியாற்றினார்.

ஏழையெளியவர்கள் தங்கிட மண்டபங்கள் பல கட்டி, அந்த மண்டபங்களிலே ஏழை எளியவர்களுக்கு உணவளித்தார்.

குளங்கள், கிணறுகள், ஏரிகள் அமைத்து வேளாண்மையை வளர்த்தார். பல கோயில்களுக்குத் திருப்பணியும் செய்துள்ளார்.

ஆர்க்காட்டு நவாபுதான் ஆங்கிலேயர்களுக்கு அடிமைப்பட்டு முதன் முதலாகக் கதவைத் திறந்து விட்டவர். அந்த நவாபின் முதல் ஆங்கிலத் தளபதியின் பெயர் அலெக்சாண்டர். அவர் நெல்லைச் சீமைக்கு வரி வசூல் செய்ய வந்தார். அப்போது "கப்பம் என்ற பெயரால் ஒரு சல்லிக் காசும் கட்ட முடியாது" என்று அடித்துச் சொன்னவர்தான் பூலித் தேவர்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## இரவு பகல் பாராது உறக்கமின்றி ஓயாது உழைத்த

# தூய்மைப் பணியாளர்களுக்கு ஊக்கத் தொகை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி மனமார்ந்த பாராட்டு!

**சென்னை, டிச.13-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.12.2023) பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேங்கிய குப்பை மற்றும் தோட்டக்கழிவுகளை அகற்றும் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு மாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட 3449 தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட பிற பணியாளர்களுக்கு தலா 4 ஆயிரம் ரூபாய், என மொத்தம் 1 கோடியே 37 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கும் அடையாளமாக 15 தூய்மைப் பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.**

தமிழ்நாட்டில் 'மிக்ஜாம்' புயல் காரணமாக ஏற்பட்ட வரலாறு காணாத பெருமழையால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் பலத்த சேதங்கள் ஏற்பட்டது. இந்த இயற்கைப் பேரிடரால் ஏறத்தாழ 1 கோடிக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டார்கள்.

பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மேற்பார்வையில் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தேவையான நிவாரணம் வழங்கப்பட்டு வருவதுடன், சீரமைப்புப் பணிகளும் போர்க்கால அடிப்படையில் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் சிக்கிய மக்களை மீட்டு பாதுகாப்பாக முகாம்களில் தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்குத் தேவையான உணவு, குடிநீர், மருந்து, போர்வை, பாய் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டதுடன், மழைக்காலங்களில் ஏற்படக்கூடிய நோய்த் தொற்றிலிருந்து பாதுகாக்க மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டு வருகிறது.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.12.2023) பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேங்கிய குப்பை மற்றும் தோட்டக்கழிவுகளை அகற்றும் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு மாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட 3449 தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட பிற பணியாளர்களுக்கு தலா 4 ஆயிரம் ரூபாய், என மொத்தம் 1 கோடியே 37 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கும் அடையாளமாக 15 தூய்மைப் பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், ஜோசப் சாமுவேல், ஆர். மூர்த்தி, ஜே.ஜே. எபினேசர், துணை மேயர் மு. மகேஷ் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 13-12-2023

# பத்திரிக்கைகளால் பாராட்டப்பட்ட அரசு

மிக்ஜாம் புயல் பாதிப்பில் இருந்து மக்களைக் காக்க தமிழ்நாடு அரசும், முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களும் எடுத்த முயற்சிகளை ஊடகங்கள் மனம் திறந்து பாராட்டி உள்ளன.

* கடந்த 7 ஆம் தேதியன்று ‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் வெளியிட்டுள்ள செய்தி கட்டுரையில், “செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து முறையாக திட்டமிட்டு தண்ணீர் திறந்து விடப்பட்டதால் பெருமளவு வெள்ளச்சேதம் தவிர்க்கப்பட்டுள்ளது. கடந்த டிசம்பர் 4 ஆம் தேதி, செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து அதிகபட்சமாக 8 ஆயிரம் கன அடி நீர் திறக்கப்பட்டது. பின்னர் மழைப்பொழிவு குறைந்ததும் படிப்படியாக அதனை இரண்டாயிரத்து 500 கன அடியாக குறைத்தார்கள். இதனால் அடையாறு ஆற்றில் வெள்ளப் பெருக்கு கட்டுக்குள் இருந்தது. பெரும் வெள்ளச்சேதம் தவிர்க்கப்பட்டது” என்று குறிப்பிடப்பட்டு இருந்தது.

* மிக்ஜாம் புயலின்போது, தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறைகளும் சீரிய முறையில் செயல்பட்டதாக ‘தி டைம்ஸ் ஆஃப் இந்தியா’ ஆங்கில நாளிதழ் பாராட்டியுள்ளது. வேளச்சேரியில் திடீர் என ஏற்பட்ட 60 அடி பள்ளத்தில் விழுந்த 3 பேரை போக்குவரத்து காவலரான பிரபாகரன் என்பவர் காப்பாற்றியதையும், மாதவரம் ரெட்டை ஏரியில் இருந்து வெளியேறிய தண்ணீரில் தத்தளித்த இரண்டு முதியவர்களை தமிழ்நாடு பேரிடர் மீட்பு பணியாளர் சதீஷ் குமார் காப்பாற்றியதையும் ‘டைம்ஸ் ஆஃப் இந்தியா’ நாளிதழ் பாராட்டியுள்ளது.

மாநகர போக்குவரத்துக் கழகத்தில் 600 பேர் கடந்த 4 ஆம் தேதி பணியாற்றியதாகவும், இவர்களில் தாமோதரன் என்பவர் ஒரே ஒரு பயணிக்காக மந்தைவெளி செல்லும் பேருந்தை சாந்தோம் நோக்கி இயக்கியதாக ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ புகழாரம் சூட்டியுள்ளது. சென்னை ரிப்பன் மாளிகையில் இயங்கி வரும் உதவி கட்டுப்பாட்டு அறைக்கு வரும் புகார்களை, அங்கு பணியாற்றும் ஊழியர்கள் இன்முகத்துடன் ஏற்று அதற்கான தீர்வுகளை உடனுக்குடன் செய்ததாக ‘டைம்ஸ் ஆஃப் இந்தியா’ பாராட்டியுள்ளது. தமது வீட்டில் தண்ணீர் புகுந்த நிலையிலும், ரமேஷ் என்ற இளைஞர் வீட்டிற்குச் செல்லாமல் அலுவலகத்திலேயே தங்கி பணியாற்றினார். இப்படி, தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறைகளும் சீரிய முறையில் செயல்பட்டதாக “டைம்ஸ் ஆஃப் இந்தியா” ஆங்கில நாளிதழ் பாராட்டியுள்ளது.

**“மிக்ஜாம் புயல் வெள்ளத்தின் போது தமிழ்நாடு அரசு மேற்கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் காரணமாக பெரும் சேதங்கள் தவிர்க்கப்பட்டது” என்று கடந்த 10 ஆம் தேதி அன்று ‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் பாராட்டு தெரிவித்துள்ளது.**

**‘சென்னை வெள்ளம் - 2015-ம் 2023-ம்’ என்ற தலைப்பில் ‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் வெளியிட்டுள்ள கட்டுரையில், “ஏரிகளில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்படுவது இந்த முறை, முறைப்படுத்தி மேற்கொள்ளப்பட்டதால், 2015-ம் ஆண்டு, நூற்றுக்கும் மேற்பட்டவர்களின் உயிரிழப்பு மற்றும் பொருட் சேதங்கள் போன்ற கடும் பாதிப்புகள் தவிர்க்கப்பட்டதை சுட்டிக்காட்டி உள்ள ‘தி இந்து’ நாளிதழ், 2015-ம் ஆண்டு செம்பரம்பாக்கம் ஏரி எந்த முன்னறிவிப்பும் இல்லாமல், நள்ளிரவில் திறந்துவிடப்பட்டதும், அடையாற்றின் கொள்ளளவுக்கு மிக அதிகமாக தண்ணீர் திறந்துவிடப்பட்டதும், அன்றைய தினம் பெய்த அதிகன மழையும் உயிரிழப்புகளையும் சேதங்களையும் அதிகமாக்கி விட்டது” என்று தெரிவித்துள்ளது.**

தற்போது, பெருமழை பெய்த மறுநாள், சென்னையில் பெரும்பாலான சாலைகளில் தேங்கியிருந்த தண்ணீர் வடிந்துவிட்டதாகவும், 45 சென்டி மீட்டர் வரை மழை பெய்த போதும், முறையான மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் சென்னை மாநகராட்சியின் துரித நடவடிக்கைகள் இதற்கு காரணம் என்றும் ‘தி இந்து’ கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் சமூக ஊடகங்கள் மற்றும் அரசின் அவசர கால கட்டுப்பட்டு அறை மூலம் கண்காணிக்கப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டதால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நேரத்தில் உதவிகள் கிடைத்ததாகவும், சில இடங்களில் இணைய சேவை முடக்கம் மற்றும் மின்தடை தவிர பெரிய நெருக்கடிகள் ஏதும் ஏற்படவில்லை என்றும், இந்த தடைகளும் வெகு விரைவில் சீரமைக்கப்பட்டதாகவும், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் தன்னார்வலர்கள் உரிய முறையில் ஒருங்கிணைக்கப் பட்டதாகவும் ‘தி இந்து’ கட்டுரை தெரிவித்துள்ளது.

கடலில் சீற்றம் அதிகமாக இருந்ததால், ஆற்றின் வழியாக வெள்ளநீர் கடலுக்குள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. அதேநேரத்தில் மழையும் தொடர்ந்து பெய்ததால் சாலைகளில் தாழ்வானப் பகுதியில் தண்ணீர் தேங்கியது. இருப்பினும், மழை நின்ற சில மணி நேரங்களில் அரசின் போர்க்கால நடவடிக்கைகளால் தண்ணீர் அகற்றப்பட்டதாகவும் ‘தி இந்து’ வெளியிட்டுள்ள கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*** சென்னையில் வெள்ள மீட்புப் பணிகளில் காவல்துறையினருடன் இணைந்து பணியாற்றிய மீனவர்களை நாளிதழ்கள் பாராட்டி எழுதி உள்ளன.**

**குழந்தைகள், கர்ப்பிணி பெண்கள், மூத்த குடிமக்கள், நோயாளிகள் என ஆயிரக்கணக்கானோரை வெள்ளத்தில் இருந்து மீட்டதில் மீனவர்களின் பங்கு அளப்பரியது என்று நாளிதழ்கள் பாராட்டி உள்ளன.**

*** ‘டெக்கான் கிரானிக்கல்’ நாளிதழ், மிக்ஜாம் புயலை எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளிலும், நிவாரண பணிகளிலும் தமிழ்நாடு மின்சார வாரிய அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் பங்கு சிறப்பானது என பாராட்டியுள்ளது. அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் மின்சாரம் துண்டிக்கப்பட்ட இடங்களில் தங்கள் உயிரை பணயம் வைத்து பணியாற்றி, பழுது பார்க்கும் பணியில் ஈடுபட்டதாக கூறியுள்ளது. புயலுக்கு பின்னர், எண்ணூர் மற்றும் கொசஸ்தலை ஆற்று பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த உயர் மின்னழுத்த கோபுரம் பழுதடைந்ததாகவும், இதனால் எண்ணூர், மணலி, மீஞ்சூர் மற்றும் சில இடங்களில் மீண்டும் மின்சாரம் வழங்க, மின்வாரிய அதிகாரிகளும் ஊழியர்களும், படகில் ஏறிச்சென்று, உயரமான கோபுரத்தின் மீது ஏறி தங்களது உயிரை பணயம் வைத்து பழுது நீக்கி மீண்டும் மின்சாரத்தை வர வழைத்ததாக ‘டெக்கான் கிரானிக்கல்’ குறிப்பிட்டுள்ளது.**

**நெஞ்சில் நஞ்சில்லாத வகையில் சில ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன. பத்திரிக்கைகளின் பாராட்டுதல்களுக்காக அல்ல, உண்மையான அக்கறையுடன் செயல்பட்டு வருகிறார் மாண்புமிகு முதலமைச்சர்.**

எழும்பூர் தொகுதி, ஓசான்குளம்:

## 300 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள்!

தமிழ்நாடு செஞ்சிலுவை சங்கத்துடன் இணைந்து இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., வழங்கினார்!

*சென்னை, டிச.13-*

*எழும்பூர் தொகுதி, 99 (அ) வட்டத்தைச் சேர்ந்த ஓசான்குளம் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பைச் சேர்ந்த 300 குடும்பங்களுக்கு, தமிழ்நாடு செஞ்சிலுவை சங்கத்துடன் இணைந்து எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் நிவாரண உதவிகளை வழங்கினார்.*

*மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் நேரில் சென்று மீட்புநிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்க, எழும்பூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினரும் தி.மு.கழகச் சட்டத்துறை இணைச் செயலாளருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் எட்டாவது நாளாக, எழும்பூர் தொகுதிக்குட்பட்ட 99 (அ) வட்டத்திலுள்ள ஓசான்குளம் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்குமாடிக் குடியிருப்பைச் சேர்ந்த 300 குடும்பங்களுக்கு தமிழ்நாடு செஞ்சிலுவை சங்கத்துடன் இணைந்து மளிகைப் பொருட்கள் மற்றும் புடவை, பெட்ஷீட் உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கினார்.*

*இந்நிகழ்வில் இந்திய செஞ்சிலுவை சங்கம், தமிழ்நாடு கிளையின் சார்பில் நிதி நிர்வாக அலுவலர் வேதவியாஸ், நிவாரணப் பொருட்கள் மேலாளர் கர்ணன், நிர்வாக அலுவலர் நமச்சிவாயம் மற்றும் சுந்தர், புகழேந்தி, சரவணன், குகானந்தம், பாலு, சாந்தகுமார், காவேரிப்பட்டிணம் துணைக் கிளையைச் சேர்ந்த செந்தில்குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.*

*இதில் ஜெ.விஜயகுமார், ஆர்.புருஷோத்தமன், புரசை எஸ்.குமார், மா.காந்தி, மு.கமலக்கண்ணன், யு.விஜயபோஸ், ந.கலையரசன், வெ.மருதன், கே.சீனிவாசன், ரா.வெற்றிவேல், ஜெ.சிலம்பரசன், பு. சதிஷ்குமார், எல்.சுகுமாரன், இளஞ்செழியன், எழும்பூர் சி. ரமேஷ், கி.புஷ்பராஜ், பாலாஜி அன்புமணி, கவிதா மற்றும் 99 (அ) வட்டக் கழகச் செயல்வீரர்கள் உடனிருந்தனர்.*



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (12.12.2023) தலைமைச் செயலகத்தில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் நிதியிலிருந்து 2 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு கடல்சார் வாரிய துணைத் தலைவர் மற்றும் தலைமை செயல் அலுவலர் சி.நடராசன், மாநில துறைமுக அலுவலர் கேப்டன் ம.அன்பரசன் ஆகியோர் உள்ளனர்.

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் பிறந்த நாள்:

## உச்சநட்சத்திரமாக மக்களை மகிழ்விக்க விழைகிறேன்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, டிச. 13 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களின் பிறந்த நாளையொட்டி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.**

**முதல்வர் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் பல வெற்றி படங்களைத் தந்து உச்சநட்சத்திரமாக மக்களை மகிழ்விக்க விழைகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.**



இது குறித்து முதல்வர் அவர்களின் வாழ்த்துச் செய்தியில்,

“அன்பிற்கினிய நண்பர் ‘சூப்பர்ஸ்டார்’ ரஜினிகாந்த் அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்!

மகிழ்ச்சியோடும் மனநிறைவோடும் பல வெற்றிப் படங்களைத் தந்து உச்சநட்சத்திரமாக மக்களை மகிழ்விக்க விழைகிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

**தொலைபேசி மூலம் வாழ்த்து!**

தொடர்ந்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 'சூப்பர் ஸ்டார்' ரஜினிகாந்த் அவர்களை தொலைபேசி வாயிலாகவும் தொடர்பு கொண்டு தனது பிறந்தநாள் வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு

## ரூ.6000 நிதி உதவி அறிவித்த முதல்வருக்கு பாராட்டு!

### தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கே.எஸ்.அழகிரி பேட்டி!

*தருமபுரி, டிச. 13 -*

*மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.6000 நிதிஉதவி அறிவித்துள்ள தமிழக அரசின் செயல்பட்டை காங்கிரஸ் கட்சி வரவேற்கிறது என்று தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.எஸ்.அழகிரி தெரிவித்துள்ளார்.*

*தருமபுரியில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.எஸ்.அழகிரி தலைமையில் சாதிவாரி கணக்கெடுப்பு எடுக்க கோரி மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம் தருமபுரி வன்னியர்குல மண்டபத்தில் நடைபெற்றது.*

*இதில் அகில இந்திய காங்கிரஸ் ஓ.பி.சி. தலைவர் அஜய் சிங் யாதவ் கலந்து கொண்டார்.*

*கூட்டத்திற்கு பின் செய்தியாளர்களை சந்தித்த தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கே.எஸ். அழகிரி தெரிவித்ததாவது:-*

*மோடி தலைமையிலான அரசு அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிராக செயல்பட்டு வருகிறது என்பதை உச்சநீதி மன்றம் தெளிவுபடுத்தி உள்ளது.*

*ஜம்மு - காஷ்மீர் மாநிலத்திற்கு விரைவில் மாநில அந்தஸ்தை மத்திய அரசு வழங்க வேண்டும். வருகிற 2024ம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் சட்டசபை தேர்தலில் நடத்தி முடிக்கவேண்டும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.*

*நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி பற்றி பேச அனுமதிக்கிறார்கள். ஆனால் அதானி பற்றி பேசினால் பதவி நீக்கம் வரை செல்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட எம்.பி.யை பணம் பெற்றுக் கொண்டு அதானி குறித்து பேசினார் என்ற பொய்யான குற்றச் சாட்டை சொல்லி தகுதி நீக்கம் செய்வது கொடுமையானது.*

*ராஜஸ்தான், மத்திய பிரதேசம், சட்டீஸ்கர் ஆகிய 3 மாநிலத் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சிக்கு பின்னடைவு ஏற்பட்டதாக கருதவில்லை. இந்த தேர்தலில் 40 சதவீதத்திற்கும் அதிகமான வாக்கு காங்கிரசுக்கு கிடைத்துள்ளது.*

*பா.ஜனதாவை விட அதிக வாக்குகளை பெற்று இருக்கிறோம். மக்கள் மனதில் ராகுல் காந்தி இருக்கிறார். காங்கிரஸ் இயக்கம் இருக்கிறது என்பது இதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.*

*சென்னையில் மேக வெடிப்பு ஏற்பட்டு 17 மணி நேரம் தொடர்ந்து மழை பெய்துள்ளது. இது இயற்கை பேரிடர். மழை பெய்த பின் தமிழ்நாடு அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.*

*மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் ரூ. 6000 நிதியுதவியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.*



*இவ்வளவு விரைவாக மீட்பு நடவடிக்கை மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருவதை காங்கிரஸ் கட்சி வரவேற்கிறது. தமிழ்நாடு அரசின் செயல்பாட்டை விமர்சிப்பவர்கள் அரசியல் காரணங்களுக்காக மட்டுமே விமர்சிக்கிறார்கள்.*

*காஷ்மீர் விஷயத்தில் நேரு தவறு செய்ததாக நாடாளுமன்றத்தில் அமித்ஷா பேசி இருப்பது தவறான செயல். இந்தியா பாகிஸ்தான் பிரிவினையின்போது அங்கு வசித்த 99 சதவீத முஸ்லிம் மக்கள் மதத்தின் அடிப்படையில் பாகிஸ்தானுடன் சேரவில்லை நேரு கூறிய கருத்தை ஏற்று இந்தியாவுடன் இணைந்தனர். சாதி வாரி கணக்கெடுப்பை மத்திய அரசு நடத்த வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். பேட்டியின் போது தருமபுரி மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் மற்றும் முன்னாள் எம்.பி.தீர்த்தராமன் மற்றும் காங்கிரஸ் கட்சியினர் உடனிருந்தனர்.*





தலைமைச் செயலகத்தில், நேற்று (12.12.2023) வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் 2024–25ஆம் ஆண்டிற்கான வரைவு வேளாண்மை நிதிநிலை அறிக்கை தொடர்பாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் / அரசு முதன்மைச் செயலாளர் செல்வி. அபூர்வா, சர்க்கரைத் துறை ஆணையர் / முதன்மைச் செயலாளர் சி. விஜயராஜ் குமார், அரசு சிறப்பு செயலாளர், முனைவர்.பொ.சங்கர், வேளாண்மைத் துறை ஆணையர் முனைவர்.எல்.சுப்பிரமணியன், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை இயக்குநர் முனைவர்.ச.நடராஜன், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் ஆர். பிருந்தா தேவி, சர்க்கரைத் துறை கூடுதல் ஆணையர் த.அன்பழகன், தலைமைப் பொறியாளர்கள்(வே.பொ) ஆர்.முருகேசன், டி.சந்திர சேகர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# உறவு வேலி உறுதிப்பட திரண்டு வாரீர்!

## கலைஞர் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

“வரிக்குப் பதிலாக நெல்லாவது கொடு” என்று கேட்ட போது, “வரி என்று நீ கேட்டால், ஒரு மணி நெல்லைக் கூட நான் உனக்குத் தர முடியாது” என்று பூலித் தேவர் மறுத்துக் கூறினார். ஒரு மணி நெல் கூட தர முடியாது - கட்ட முடியாது என்று சொன்ன காரணத்தால்தான், “நெல் கட்டான் செவல்” என்று இந்த ஊருக்கே பெயர் வந்தது. நெல் கட்டான் செவல் என்பதுதான் திரிந்து, நெல் கட்டும் செவல் என்று ஆகிவிட்டது என்பார்கள்.

1750 முதல் 1767 வரை ஏறத்தாழ 17 ஆண்டுகளில் பலமுறை வெள்ளைக்காரர்களோடு பூலித் தேவன் யுத்தம் செய்திருக்கிறார்.

★ திருச்சியில் ராபர்ட் கிளைவ் உடன், போர் புரிந்ததாகப் “பூலித் தேவன் சிந்து” கூறுகிறது.
★ அலெக்சாண்டர் கெரானுடன், 1755இல் போர் நடத்தியிருக்கிறார்.
★ களக்காட்டில் மாபுஸ்கானுடன், 1755இல் போர் நடத்தியிருக்கிறார். அந்தப் போரில் மாபுஸ்கான் தோல்வியுற்றார். மாபுஸ்கானை அழைத்துவந்து தன்னுடைய மாளிகை யிலேயே விருந்தாளியாக வைத்து மரியாதையோடு நடத்தினார் என்று வரலாறு கூறுகின்றது.
★ திருவில்லிப்புத்தூரில் ரகீமுடன், 1755இல் போர் நடத்தினார்.
★ திருநெல்வேலியில், 1756இல் போர் நடத்தினார்.
★ நெல்கட்டும் செவலில், 1759இல் யூசுப்கான் என்று சொல்லப்படுகின்ற கான்சாகிப்போடு போர் நடத்தியிருக்கிறார்.
★ வாசுதேவநல்லூரில் 1759 மற்றும் 1760 ஆகிய ஆண்டுகளில் யூசுப் கானுடன் மீண்டும் போர் நடத்தியிருக்கிறார்.
★ 1761இல் நெல்கட்டும் செவல், வாசுதேவ நல்லூர் கோட்டைகளில் அதே யூசுப்கானுடன் மறுபடியும் போர் நடத்தினார்.
★ 1767இல் வாசுதேவநல்லூரில், ஆங்கிலத் தளபதி டோனால்டு காம்பெல் உடன், நடத்திய போர்தான் இறுதிப் போராகும்.

இவற்றைத் தவிர கங்கை கொண்டான், ஆழ்வார் குறிச்சி, சேத்தூர், கொல்லங் கொண்டான், ஊத்து மலை, சொக்கம்பட்டி, தலைவர் கோட்டை ஆகிய கோட்டைகளில் நடைபெற்ற போர்களிலும் பூலித் தேவன் பங்கு பெற்றார்.

கட்டபொம்மனின் தளபதிகளிலே ஒருவர் வெள்ளையத் தேவன் - அவருடைய ஆருயிர் நண்பன் சுந்தர லிங்கம். சுந்தரலிங்கம் ஆதி திராவிடச் சமுதாயத்தைச் சேர்ந்தவர். வெள்ளையத் தேவனும், வீரன் சுந்தர லிங்கமும் இணைந்து பல போராட்டங்களை வெள்ளைக் காரர்களை எதிர்த்து நடத்தி இருக்கின்றார்கள். கட்டபொம்மனைக் காப்பாற்றுவதற்காக, வெள்ளையத் தேவனைக் காப்பாற்றுவதற்காக, தன்னைத் தானே மாய்த்துக் கொள்கின்ற தற்கொலைப் படை வீரனாக மாறி உயிர் நீத்தான் வீரன் சுந்தரலிங்கம்.

கட்டபொம்மனுக்கு நான், கோட்டை கட்டியவன் மாத்திரமல்ல. அந்தச் சுந்தரலிங்கத்திற்கும், சுந்தரலிங்கம் நகர் என்ற ஒரு நகரை நிர்மாணித்து அண்மையிலே திறந்து வைத்தவன் தான் நான். ஏன் சொல்கிறேன் என்றால், அந்தப் போராட்டத்திலே வெள்ளையத் தேவன், சுந்தரலிங்கம் எனும் ஆதி திராவிடத் தோழன் ஆகிய இருவரும் ஒன்றாக இணைந்து நின்று உரிமைப் போராட்டத்தை நடத்த முடிந்தது.

அதைப்போலத்தான் பூலித் தேவனுக்கு உதவியாக முன்னணியில் இருந்தவர்கள் பகடை ஒண்டி வீரன், வெண்ணிக்காலாடி - இவர்கள் இருவரும் ஆதி திராவிடச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். அதுமாத்திரமல்ல, இவர்களுடன் ஆதி திராவிடச் சமுதாயத்தைச் சேர்ந்த தளபதிகள் 350 பேர், பூலித் தேவனுக்கு உதவியாக இருந்தார்கள் என்றெல்லாம் சொல்லப்படுகிறது.

அந்தக் காலத்தையும் எண்ணிப் பாருங்கள், இந்தக் காலத்தையும் எண்ணிப் பாருங்கள். சமுதாய நல்லிணக்கத்திற்கு அன்று சாட்சியாக இருந்த நிகழ்வுகளையும் எண்ணிப் பாருங்கள். ஒரு வெள்ளையத் தேவனும், சுந்தரலிங்கமும் ஒன்றாக இருக்க முடிந்தது. அதைப் போல ஒரு பூலித் தேவனும், பகடை ஒண்டி வீரனும், வெண்ணிக்காலாடியும் ஒன்றாக இருக்க முடிந்தது. இன்றைக்கு முடியவில்லையே? என்ன காரணம்?

என்ன சதி இடையிலே குறுக்கிட்டது? அந்தச் சதியை முறியடிக்க வேண்டாமா? நாமெல்லாம் தமிழர்கள். நடப்பது தமிழ்நாட்டு மக்களுக்கான அரசு என்கின்ற அந்த உணர்வைப் பெற வேண்டாமா? உண்மையை அறிய வேண்டாமா?”

உடன்பிறப்பே, என்னுடைய இந்த உரை தற்போது இளைஞர் அணியின் மாநாடு நடைபெறும் இதே திருநெல்வேலி சீமையில் நெற்கட்டும் செவலில் 28.12.1998 அன்று நிகழ்த்தப்பட்ட தாகும். இதனை நான் பேசி ஒன்பதாண்டுகள் ஆகின்றது. ஆம், உடன்பிறப்பே, வெல்ல இயலாது என விரோதிகளால் கருதப்பட்ட வீரபாண்டிய கட்டபொம்மன், வெள்ளை கம்பெனியாரால் வீழ்த்தப்பட்டுக் கயத்தாறில் தூக்கிலிடப்படவும், அந்தக் கட்டபொம்மனின் பெரும் படை வீழ்ச்சியுறவும், வெள்ளையர் ஆதிக்கத்திற்கு இந்த மண்ணில் விதை ஊன்றப்படவும் காரணமாக அமைந்தது, நம்மிடையே ஒற்றுமை என்ற வேலி உறுதியாக இல்லாதது தான் என்பதையும் - அதே குறை, புலியொத்த வீராதி வீரர், போர் எனிலோ தோள் தினவெடுத்து பாய்ந்திடும் தீரர் பூலித் தேவர், வீழ்ச்சிக்கும் காரணமாயிற்று என்பதை மறக்க முடியுமா?

இவ்வாறு விடுதலைப் போராட்டம் நடத்திய பூலித் தேவனைப் போன்று - கட்டபொம்மனைப் போன்று நாட்டுப்பற்று மிக்க நாயகர்கள், தாங்கள் கொண்டிருந்த மான உணர்வின் காரணமாக - இந்த மண்ணின் பெருமையை நிலை நாட்டினார்களே தவிர, மாற்றாரிடமிருந்து இந்த மண்ணை மீட்க இயலாதவர்களாக ஆகி விட்டார்கள் என்பதற்குக் காரணமே - கூடவே இருந்து குழி பறித்தோர் செயலும், சமயம் பார்த்து காட்டிக் கொடுத்தோர் துரோகமும் - நாமனைவரும் இந்த மண் மாதா பெற்றெடுத்த மைந்தர்கள்தான் என்ற உணர்வின்றி, ஒருவருக்கொருவர் யார் மேலோர், யார் கீழோர் என்று மோதிக் கொண்ட நிகழ்வுகளும்தான் சரியான காரணங்கள் என்பதை, சரித்திரம் ஒருவேளை குறிப்பிடத் தவறினாலும், ஒளித்து வைக்க முடியாத அந்த நிகழ்வுகளை உள்ளத்தில் பதிய வைத்தே சரித்திர ஆசிரியர்கள் குமுறியிருப்பார்கள் என்பதை நம்மால் உணர முடிகிறது. எனினும் புதையுண்ட பூலித் தேவனின் நெற்கட்டும் செவல்களின் சரித்திரத்தை - பாழடைந்து புதுப்பிக்கப்பட்ட பாஞ்சாலங் குறிச்சிகளின் வரலாற்றை - பூலித் தேவனையும், கட்ட பொம்மனையும் எண்ணிப் பார்த்து, புரிந்து கொண்டு ஒற்றுமைக்கு உரமளிப்போம் என்று ஒரே குரலில் முழங்க ஓராயிரம் - ஈராயிரம் - ஒரு இலட்சம் - பல இலட்சமென நெல்லைச் சீமையிலே கூடிட இருக்கின்ற ஒப்பற்ற இளைஞர் அணியின் தம்பிமார்கள், உறுதி மேற்கொள்ள வாரீர், வாரீர் என்று உங்கள் அன்பு அண்ணன் அழைக்கின்றேன்.

**அன்புள்ள,**

**மு.க.**

(முரசொலி 26.11.2007)

‘மிக்ஜாம்’ புயல் வெள்ள

## பாதிப்புகளிலிருந்து மக்கள் மீள சிறப்பான நடவடிக்கை!

### வெள்ளச்சேதங்களைப் பார்வையிட்ட ஒன்றியக் குழுவினர் - தமிழ்நாடு அரசுக்கு பாராட்டு!

சென்னை, டிச. 13-

மிக்ஜாம் புயல் வெள்ளச் சேதத்தை ஆய்வு செய்ய சென்னைவந்துள்ளஒன்றிய அரசு குழுவினர், இரண்டு பிரிவுகளாகப்பிரிந்துசென்று பல்வேறுஇடங்களில்ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.அக்குழுவினர் செய்தியாளர்களிடத்தில் கூறுகையில்வெள்ளப்பாதிப்புகளை தமிழ்நாடு அரசு சிறப்பான முறையில் நடவடிக்கை எடுத்துள்ளதுஎன்றுகூறியுள்ளனர்.

மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டுமாவட்டங்களில்ஏற்பட்டபாதிப்புகளை சரி செய்ய, இடைக்கால நிவாரணமாக5ஆயிரத்து60 கோடி ரூபாய் நிதியை ஒன்றியஅரசுவழங்கமுதலமைச்சர்மு.க.ஸ்டாலின்,பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதினார். மழை பாதிப்புகளை பார்வையிட ஒன்றியக்குழுவை அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொண்டார். மழை பாதிப்புகளை பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் பார்வையிட்டார்.

இந்நிலையில், மிக்ஜாம் புயல் மழை பாதிப்புகள் குறித்துஆய்வுசெய்யதேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் ஆலோசகர் குணால் சத்யார்த்தி தலைமையில் 6 பேர் கொண்ட ஒன்றிய அரசின் குழு சென்னைவந்துள்ளது.தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனாவுடன், ஒன்றிய அரசின்குழுவினர்ஆலோசனை நடத்தினர். இதைத்தொடர்ந்து ஒன்றிய அரசின் குழுவினர் இரண்டு குழுக்களாகப்பிரிந்து சென்று வட சென்னை மற்றும் தென் சென்னையில்ஆய்வுநடத்தி வருகின்றனர். சென்னை பட்டாளத்தில் ஆய்வை தொடங்கிய ஒன்றியக் குழுவினர், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பல்வேறு இடங்களைபார்வையிட்டு ஆய்வு நடத்தினர்.

தென்சென்னையில் வேளச்சேரியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்ட ஒன்றியக் குழுவினர் செய்தியாளர்களிடத்தில் பேசுகையில் புயல் வெள்ள பாதிப்புகளில் இருந்து மக்கள்மீளதமிழ்நாடுஅரசு சிறப்பான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

2015 பெருவெள்ளத்தை விட சிறப்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்துள்ளது.இதனால்உயிரிழப்புகள் பெருமளவில்குறைக்கப்பட்டுள்ளன. என்று பாராட்டு தெரி வித்துள்ளனர்.

ஒன்றியக் குழுவினர் இன்று,திருவள்ளூர்,காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் மிக்ஜாம் புயல் சேதங்களை ஆய்வு செய்கிறது. அதன் பின் 14ம் தேதி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை ஒன்றியக் குழு சந்தித்து பேசிவிட்டுடெல்லிசென்றுபுயல் சேதம் குறித்தும் தமிழ்நாட்டிற்கான நிவாரணம் குறித்தும் அறிக்கை தாக்கல் செய்யும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

கலைஞர் நூற்றாண்டு விழா! ‘சட்டமன்ற நாயகர் கலைஞர்’ குழு வாயிலாக - கடலூர் கல்லூரிகளில்

## ‘கலைஞர் சமூக முன்னேற்றத்துக்கு ஆற்றிய சாதனைகளில் மாணவர்களை ஈர்த்தது’ - கருத்தரங்கம்!

### அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் - கு.பிச்சாண்டி பங்கேற்பு!

கடலூர், டிச.13-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள் தொடர்பாக பல்வேறு நிகழ்ச்சிகள் தமிழ்நாடு முழுவதும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன. அதன்படி கடலூர் மாவட்டத்தில் சட்டமன்ற நாயகர் கலைஞர் குழுவின் வாயிலாக, கலைஞர் அவர்கள் சட்டமன்றத்தின் மூலம் சமூக முன்னேற்றத்திற்கு ஆற்றிய சாதனைகளில் மாணவர்களை ஈர்த்தது” என்ற தலைப்பின்கீழ் கருத்தரங்கம் இன்று (13.12.2023) பிற்பகல் 2.30 மணியளவில் பள்ளிக் கல்வித் துறை சார்பில் கடலூர் புனித அன்னாள் மேல்நிலைப் பள்ளியிலும், உயர்கல்வித் துறை சார்பில் பிற்பகல் 4.00 மணியளவில் கடலூர் கிருஷ்ணசாமி பொறியியல் கல்லூரியிலும் நடைபெற உள்ளது,

இக்கருத்தரங்கில் வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், விழாக் குழு இணைத் தலைவர் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் சி.ஞான சேகரன் (விழாக் குழு உறுப்பினர்), கூடுதல் செயலாளர். இணைச் செயலாளர், துணைச்செயலாளர் சட்டமன்றப் பேரவைச் செயலகம், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பி னர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் பங்கேற்றுச் சிறப்பிக்கின்றனர்.

## ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிராக - தமிழ்நாடு அரசு கூடுதல் மனு!

புதுடெல்லி, டிச.13-

தமிழ்நாடு அரசு சார்பில் அனுப்பப்பட்டுள்ள மசோதாக்களைக் கிடப்பில் வைத்திருக்கும் தமிழக ஆளுநர் ஆர்.என். ரவியின் செயல்பாட்டிற்கு எதிராகவும், கிடப்பில் வைத்திருக்கும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க ஆளுநருக்கு உடனே உத்தரவிடக் கோரியும் உச்சநீதிமன்றத்தில் கடந்த அக்டோபர் 31 ஆம் தேதி அவசர வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இது தொடர்பான வழக்கு விசாரணை உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இதற்கிடையே தமிழ்நாடு அரசு சார்பில் இரண்டாவது முறையாக 10 மசோதாக்களை சட்டமன்ற சிறப்பு கூட்டத் தொடரில் நிறைவேற்றி அனுப்பிய மசோதாக்களைக் கடந்த நவம்பர் 28 ஆம் தேதி ஆளுநர், குடியரசுத் தலைவருக்கு அனுப்பியிருந்தார்.

இந்நிலையில் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவிக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு கூடுதல் மனுத் தாக்கல் செய்துள்ளது.

அந்த மனுவில், “சட்ட மன்றத்தில் நிறைவேற்றிய 10 மசோதாக்களை குடியரசுத் தலைவருக்கு அனுப்பியது சட்ட விரோதமானது. எனவே 10 மசோதாக்களுக்கும் ஆளுநர் ஒப்புதல் அளிக்க உத்தரவிட வேண்டும்” எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

100 நாள் வேலைத் திட்டம்

## தமிழ்நாட்டுக்கான நிலுவைத் தொகை எவ்வளவு?

### மக்களவையில் கனிமொழி கருணாநிதி கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!



புதுடெல்லி, டிச. 13 -

“நாடு முழுவதும் செயல்படுத்தப்படும் மகாத்மா காந்திஊரகவேலைஉறுதித் திட்டத்தின் கீழ் (100 நாள் வேலைத் திட்டம்) பயனாளிகளுக்குவழங்கவேண்டிய ஊதிய நிலுவைத் தொகை மற்றும்இத்திட்டத்துக்கான உபகரணங்களுக்கான நிலுவைத் தொகை ஒவ்வொரு மாநில வாரியாக விவரம் தேவை. குறிப்பாக தூத்துக்குடி மாவட்டத்தில் ஊதிய நிலுவைத் தொகை எவ்வளவு உள்ளது?

இத்திட்டத்துக்காகஒதுக்கப்பட்ட நிதி 2023 அக்டோபர் மாத நிலவரப்படி முழுமையாக செலவிடப்பட்டு விட்டதா?

அப்படியென்றால்அடுத்தடுத்த நிதி ஒதுக்கீடுகள் உரிய நேரத்தில் பயனாளிகளுக்குகிடைக்கமேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நிலுவைத் தொகை வைக்கப்படும் போது அதுபற்றி அவர்களுக்கு முறைப்படி தெரிவிக்கப்படுகிறதா? நிலுவைத் தொகை பற்றி இத்திட்டத்தின்பயனாளிகளுக்குஎவ்விதத்தில் தெரிவிக்கப்படுகிறது?” என்ற கேள்விகளை தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், மக்களவை திமுக துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எழுத்துபூர்வமாக டிசம்பர் 5 ஆம் தேதி எழுப்பியிருந்தார்.

இதற்கு ஒன்றிய ஊரக வளர்ச்சித் துறை இணை அமைச்சர் சாத்வி நிரஞ்சன் ஜோதி அளித்துள்ள பதிலில் கூறப்பட்டிருப்பதாவது:-

“மகாத்மா காந்தி ஊரக வேலைஉறுதித்திட்டம்என்பது அந்தந்த பகுதிகளில் தேவைக்கேற்பசெயல்படுத்தப்பட்டு வரும் திட்டமாகும்.இத்திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு என்பது தொடர் நடவடிக்கை.

இத்திட்டத்துக்காக ஒன்றியஅரசுஊதியநிதியையும், உபகரணங்களுக்கான நிதியையும்,நிர்வாகநிதியையும் மாநில அரசுகளுக்கு ஒதுக்குகிறது. மாநில அரசுகள் மூலமாக மாவட்ட நிர்வாகங்களுக்கு நிதி செல்கிறது. மாவட்டங்களுக்கு நேரடியாகஒன்றிய அரசுநிதிஒதுக்குவதில்லை.

2023 அக்டோபர் மாதப்படி ஒதுக்கப்பட்ட நிதி இன்னமும்முழுமையாகசெலவிடப்படவில்லை.

29.11.2023 தேதி வரையிலான இத்திட்டத்துக்கான நிலுவையில் இருக்கும் நிதி பற்றிய மாநில வாரியான விவரங்கள் அரசிடம் உள்ளன.

அதன்படி தமிழ்நாட்டுக்கு இத்திட்டத்துக்கான ஊதிய நிலுவைத் தொகை 261 கோடியே 85 லட்சத்து 91 ஆயிரம் ரூபாயாக இருக்கிறது.

தமிழ்நாட்டுக்கான உபகரணநிலுவைத்தொகை (material funds) 106 கோடியே 22 லட்சத்து 48 ஆயிரம் ரூபாயாக இருக்கிறது.

மகாத்மா காந்தி ஊரக வேலைஉறுதித்திட்டத்தின் பயனாளிகள் பணியாற்றிய 15 நாட்களுக்குள் ஊதியம் பெற தகுதி பெற்றவர்கள். இத்திட்டத்தில்பணியாற்றுபவர்தனக்குசேரவேண்டிய ஊதிய நிலுவைத் தொகை எவ்வளவு இருக்கிறது என்பதை சம்பந்தப்பட்ட கிராமப் பஞ்சாயத்து அலுவலகத்தில் இதெற்கன வைக்கப்பட்டிருக்கும் பதிவேட்டு அறிக்கை மூலமாக அறியலாம். மேலும் இத்திட்டத்தின் பயனாளிகள் தங்களது ஸ்மார்ட் போனில் Janmanrega App என்ற செயலியை பதிவிறக்கி அதில் தங்களது வேலை எண்ணைப் பதிவு செய்துதங்களுக்கானஊதிய நிலுவைத் தொகை விவரங்களைஅறியமுடியும்”என்று ஒன்றிய ஊரக வளர்ச்சித் துறை இணை அமைச்சர் பதிலளித்துள்ளார்.



மிக்ஜாம் புயல் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு மதிப்பீடு செய்வதற்காக வந்த ஒன்றிய குழு நேற்று (12.12.2023) பெருநகர சென்னை மாநகராட்சி, ஒக்கியம் மடு காரம்பாக்கம் பாலம் பகுதியில் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் கொள்கை மற்றும் திட்டமிடல் ஆலோசகர் குணால் சத்யார்த்தி தலைமையில் ரங்கநாத் ஆடம், திமான் சிங் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலர் ககன்தீப் சிங் பேடி, சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலாளர் தாரேஸ் அகமது, இணை ஆணையர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், மண்டல கண்காணிப்பு அலுவலர்கள் தொழில்நுட்ப கல்வி இயக்ககத்தின் ஆணையர் கொ.வீரராகவராவ் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்தின் கூடுதல் இயக்குநர் பிரசாந்த் உட்பட பலர் உடனிருந்தனர்.



ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட இரண்டாம்கட்டளை ஊராட்சியில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நிவாரண பொருட்களை வழங்கினார். அருகில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ. மனோகரன், ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஊராட்சி மன்ற தலைவர் சாந்தா தேவி சுகுமார் உள்ளிட்டோர் உள்ளனர்.

# தூய்மைப் பணியாளர்களுக்கு ஊக்கத் தொகை!

## முதல்வர் வழங்கினார்!... முதல் பக்கத் தொடர்ச்சி

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 30.11.2023 முதல் 10.12.2023 வரை 162 நிவாரண முகாம்களில் 1,35,681 நபர்கள் தங்கவைக்கப் பட்டனர். நிவாரண மையங்களில் தங்கிய பொதுமக்கள் மற்றும் வெள்ளம் பாதித்த பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு மூன்று வேளைகளுக்கு 49,59,351 உணவுப் பொட்டலங்கள் வழங்கப் பட்டுள்ளது.

கனமழையால் ஏற்பட்ட குப்பைகள் மற்றும் தோட்டக் கழிவுகளை அகற்றிட தாம்பரம் மாநகராட்சி, ஆவடி மாநகராட்சி, கூடுவாஞ்சேரி, மறைமலைநகர், பொன்னேரி, திருநின்றவூர், மாங்காடு, பூந்தமல்லி மற்றும் திருவேற்காடு பகுதிகளில் 841 தூய்மைப் பணியாளர்களும் நியமிக்கப்பட்டு, குப்பைகள் மற்றும் தோட்டக் கழிவுகள் அகற்றப்பட்டன.

**பாராட்டுச் சான்றிதழ்!**

கடினமான இச்சூழ்நிலையில் தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களிலிருந்து வந்து குப்பைகளை அகற்றிடும் பணிகளை மேற்கொண்ட 3449 தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட பிற பணியாளர்களை முதலமைச்சர் அவர்கள் பாராட்டி ஊக்கத்தொகையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் இ. பரந்தாமன், ஜோசப் சாமுவேல், ஆர். மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர், துணை மேயர் மு. மகேஷ் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ. ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மஹூவா மொய்த்ரா எம்.பி. பதவி நீக்கம்!

# பா.ஜ.க.வின் பழிவாங்கும் அரசியல் மீண்டும் அரங்கேற்றம்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, டிச. 13 -

மேற்கு வங்க திரிணாமுல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மஹூவா மொய்த்ரா எம்.பி.யை பதவி நீக்கம் செய்து பா.ஜ.க. தனது பழிவாங்கும் அரசியலை மீண்டும் அரங்கேற்றியுள்ளதாக ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சித்துள்ளது.

இது குறித்து 12.12.2023 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:



தினகரன்
டிசம்பர் 12, 2023 செவ்வாய்க்கிழமை
பழிவாங்கும் நடவடிக்கை
அதானியின் ₹13,000 கோடி முறைகேட்டை பற்றி கேள்விகேட்ட மேற்குவங்க திரிணாமுல் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த மஹூவா மொய்த்ரா எம்பியை பதவி நீக்கம் செய்தது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.
கடந்த 2019ம் ஆண்டு மக்களவை தேர்தலின்போது கர்நாடக மாநிலத்தில் நடந்த பிரசார கூட்டத்தில் பிரதமர் மோடியை அவதூறாக பேசியதாக இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரும் எம்பியுமான ராகுல் காந்தி மீது குஜராத்தை சேர்ந்த பாஜ எம்எல்ஏ புர்னேஷ் மோடி, குஜராத் மாநிலம் சூரத் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் கடந்த மார்ச் மாதம் அவருக்கு 2 ஆண்டு சிறை தண்டனை விதித்தது.

அதானியின் ரூ.13,000 கோடி முறைகேட்டை பற்றி கேள்விகேட்ட மேற்குவங்க திரிணாமுல் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த மஹூவா மொய்த்ரா எம்.பி.யை பதவி நீக்கம் செய்தது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. கடந்த 2019ம் ஆண்டு மக்களவை தேர்தலின்போது, கர்நாடக மாநிலத்தில் நடந்த பிரசார கூட்டத்தில் பிரதமர் மோடியை அவதூறாக பேசியதாக இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரும் எம்பியுமான ராகுல் காந்தி மீது குஜராத்தை சேர்ந்த பாஜ எம்எல்ஏ புர்னேஷ் மோடி, குஜராத் மாநிலம் சூரத் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் கடந்த மார்ச் மாதம் அவருக்கு 2 ஆண்டு சிறை தண்டனை விதித்தது. இந்த தீர்ப்பு வந்த 26 மணி நேரத்தில் மக்களவை தலைவர் ஓம் பிர்லா அறிவுரையின்படி, ராகுல் காந்தியின் எம்பி பதவி பறிக்கப்பட்டது. சூரத் நீதிமன்றம் விதித்த தீர்ப்பை ஆகஸ்ட் மாதம் உச்ச நீதிமன்றம் ரத்து செய்ததை அடுத்து மீண்டும் மக்களவை செயலகம் எம்பி பதவியை வழங்கியது. அப்போது பா.ஜ. அரசை, எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்தன.

நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி-அதானி உறவு குறித்து ராகுலும், மேற்கு வங்க திரிணா முல் காங்கிரசை சேர்ந்த மஹூவா மொய்த்ராவும் அனல் தெறிக்கும் வாதத்தை முன்வைத்து வந்தனர். மஹூவா எழுப்பிய 61 கேள்விகளில் 50 கேள்விகள் பிரதமர் மோடி, தொழிலதிபர் அதானிக்கு எதிரான கேள்விகளாகும்.

இந்த கேள்விகளை எழுப்ப ரியல் எஸ்டேட் தொழிலதிபர் ஹிரா நந்தானியிடம் இருந்து மொய்த்ரா பல கோடி ரூபாயை லஞ்சமாக பெற்றதாக பா.ஜ. எம்.பி. நிஷிகாந்த் துபே மக்களவை தலைவர் ஓம் பிர்லாவிடம் புகார் அளித்தார். நாடாளுமன்ற நெறிமுறைகள் குழு விசாரணை நடத்தியது. கடந்த 8ம் தேதி இக்குழு 500 பக்க அறிக்கையை மக்களவையில் தாக்கல் செய்தது. இதை எதிர்க்கட்சி எம்.பி.க்கள் ஆட்சேபித்து அமளியில் ஈடுபட்டனர். திரிணாமுல் எம்.பி.க்கள் பேசும்போது, 500 பக்க அறிக்கையை சில மணி நேரங்களில் படிக்க முடியாது. 3 நாட்கள் அவகாசம் வேண்டும் என்று கோரினர். இதை அவைத்தலைவர் ஓம் பிர்லா ஏற்கவில்லை. இதற்கு நாடாளுமன்ற விதிகளில் இடமில்லை” என்று தெரிவித்தார்.

சுமார் 30 நிமிட விவா தத்துக்கு பிறகு அவரது எம்.பி. பதவியை பறிப்பது தொடர்பான தீர்மானம் மீது வாக்கெடுப்பு நடத்தி பறிக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சி எம்.பி.க்கள் வெளிநடப்பு செய்தனர். எதிர்க்கட்சிகள் எழுப்பும் கேள்விகள் நியாயமானது. அவரது மீதான குற்றச்சாட்டுகளுக்கு எவ்வித ஆதாரங்களும் கிடையாது. நெறிமுறைகள் குழு முழுமையாக விசாரிக்காமல் ஒருதலைப்பட்சமாக அறிக்கை அளித்துள்ளது. 500 பக்க அறிக்கையை உடனடியாக எப்படி படிக்க முடியும்? அறிக்கையை படிக்க போதிய கால அவகாசம் வழங்கப்படவில்லை.

அவையில் 30 நிமிடங்கள் மட்டுமே விவாதம் நடந்துள்ளது. பா.ஜ.வின் பழிவாங்கும் அரசியல் மீண்டும் அரங்கேறி உள்ளது என எதிர்க்கட்சிகள் பகிரங்கமாக குற்றம் சாட்டுவதை நிராகரிக்க முடியாது.

ஒன்றிய அரசை எதிர்க்கும் மாநில கட்சிகளின் அமைச்சர்கள், கட்சி பிரமுகர்களின் வீடு, அலுவலகங்களை அமலாக்கத்துறை, வருமான வரித்துறை, சிபிஐ ஆகிய துறைகளை ஏவி ரெய்டு நடத்தி மிரட்டுவது ஒரு புறம், நாடாளுமன்றத்தில் பகிரங்கமாக மோடியை விமர்சனம் செய்பவர்களை சஸ்பெண்ட், எம்பி பதவி பறிப்பு போன்ற பழிவாங்கும் நடவடிக்கை மறுபுறம் என ஒன்றிய அரசின் பழிவாங்கும் நடவடிக்கையை எதிர்க்கட்சியினரும், அரசியல் நோக்கர்களும் கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

இவ்வாறு அத் தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.



மிக்ஜாம் புயல் மழையில் பாதிக்கப்பட்ட மக்கள் 3 ஆயிரம் பேருக்கு அசைவ உணவு வழங்கியதுடன் மாமன்ற உறுப்பினரின் மூன்று மாத ஊதியத்தையும் விஜயலட்சுமி விஜயகுமார் எம்.சி.வெள்ள நிவாரண நிதிக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபுவிடம் வழங்கினார். உடன் மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா, சட்ட மன்ற உறுப்பினர் ஐடிரீம்ஸ் இரா.மூர்த்தி, பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், வட்டசெயலாளர் இரா.பாலன், உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தொழிலாளர் நலன் எப்படி மேம்படுத்தப்படும்?

# இந்திய தொழிலாளர் மாநாட்டை கூட்டாதது ஏன்?

## மாநிலங்களவையில் மு.சண்முகம் கேள்வி!

புதுடெல்லி, டிச. 13 -

“இந்திய தொழிலாளர் மாநாட்டைக் கூட்டாதது ஏன்?” என்று நாடாளுமன்ற மாநிலங்களவையில் கழக உறுப்பினர் மு.சண்முகம் கேள்வி எழுப்பினார்.



மாநிலங்களவையில் இந்திய பொருளாதார நிலை குறித்து குறுகிய நேர விவாதத்தில் கழக உறுப்பினரும் தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளருமான மு.சண்முகம் கலந்து கொண்டு பேசியதாவது:

பொருளாதார வளர்ச்சிக்கும் அதேபோல் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும், பொருளாதாரத்தை ஊக்குவிப்பதற்கும் தொழிலாளர்கள் ஒரு முக்கியமான கருவியாகும். அதுவும் திறனுள்ள தொழிலாளர்கள், உடலுழைப்புத் தொழிலாளர்கள் போன்றவர்களுடைய ஒத்துழைப்பு இல்லாமல் இந்தப் பொருளாதார வளர்ச்சியை எட்ட இயலாது. தொழிலாளர்களுடைய பிரச் சினைகளை தீர்த்து வைப்பதற்கு முத்தரப்பு பேச்சு வார்த்தை மிகவும் அவசியமாகும். இந்தியாவில் மிக உன்னதமான முத்தரப்பு குழுவாக கருதப்படும் இந்திய தொழிலாளர் மாநாடு 1940லிருந்து தொடர்ந்து ஆண்டுதோறும் கூட்டப் பட்டு விவாதிக்க ப்பட்டு ள்ளது. அதில் பல பிரதமர்கள் கலந்து கொண்டு உரையாற்றியுள்ளார்கள்.

பா.ஜ.க. ஆட்சி வந்த பிறகு 2015 ஆம் ஆண்டில் மாநாடு கூட்டப்பட்டு, அந்த மாநாட்டில் பிரதமர் மோடி முதன் முதலில் கலந்து கொண்டார். அதன் பிறகு இன்று வரை இந்த மாநாடு கூட்டப்பட வில்லை. தொழிலாளர்களின் பிரச்சினைகளை பேசித் தீர்க்க வேண்டுமென இந்தியாவில் உள்ள தொழிற்சங்கங்கள் பல ஆண்டுகளாக போராடி வருகின்றார்கள். ஆனால் இந்திய தொழிலாளர் மாநாட்டையும் கூட்ட வில்லை. தொழிற்சங்கங்களையும் அழைத்து இந்த அரசு பேசவில்லை. இப்படி இருந்தால் தொழிலாளர் நலனும் வளர்ச்சியும் எப்படி மேம்படுத்தப்படும்.

ஒன்றிய அரசு 4 சட்டத் தொகுப்புகளை கொரோனா பெருந்தொற்று காலத்தில் அவசர அவசரமாக கொண்டு வந்து அதனை நாடாளுமன்றத்தில் எவ்வித விவாதமும் இல்லாமல் நிறைவேற்றியது. ஆனால் இன்று வரை பல மாநிலங்கள் (மூன்று மாநிலங்களைத் தவிர) அதற்குரிய விதிகளை இறுதிப்படுத்தவில்லை. தொழிலாளர் நலன் என்பது மத்திய மாநில அரசின் தொகுப்பில் வருவதால் ஒன்றிய அரசு சட்டத்தை இயற்றினாலும் அதனை நிறைவேற்ற மாநிலத்தின் ஒத்துழைப்பு தேவை. இந்த சிக்கலில் மூன்று ஆண்டுகளாக பழைய சட்டமும் பயன்படவில்லை. புதிய சட்டமும் அமலுக்கு வரவில்லை. அரசுக்கு ஒரு கையறு நிலை ஏற்பட்டுள்ளது. எனவே எந்தவித கௌரவமும் பார்க்காமல் இந்த சட்டத் தொகுப்புகளை திரும்பப் பெற்று மீண்டும் புதிய சட்டங்களை தொழிற்சங்கங்களின் ஆலோசனையுடன் கொண்டு வர வேண்டுகிறேன்.

தொழிலாளர் வைப்பு நிதியில் பெறுகின்ற ஒய்வூதியத்தை உயர்த்தி வழங்கக் கேட்டால் அதற்குப் பொருளாதாரத்திற்கு எங்கு போவது என்று கேள்வி கேட்டார்கள். 1972 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட குடும்ப ஒய்வூதியத்தின் தொகைகள் அனைத்தும் இந்த பென்ஷன் திட்டத் தில் இணைக்கப்பட்டுள்ளது. இ.பி.எப்.பிற்காக பொதுகணக்கு எண் 2014 ஆம் ஆண்டு முதல் கொண்டு வரப்பட்டது. அதற்கு முன் இருந்த கணக்குகளில் திரும்பப் பெறாத நிதிகளை மத்திய அரசு வைத்துள்ளது. அந்த பல லட்சம் கோடி ரூபாயை இத்துடன் சேர்த்து ஒய்வூதியத்தை மேம்படுத்த வேண்டும். அதேபோல் இந்த பொதுத்துறை நிறுவ னங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் தொழிலாளர்களுக்கு ஓய்வு கால பலன்க ளாக 12 சதவிகிதம் வைப்பு நிதிக்காகவும், 4.5 சதவிகிதம் பணிக்கொடைக்காகவும், 4.5 சதவிகிதம் வயோதிக மருத்துவ உதவிக்கா கவும் மற்றும் உள்ள தொகையை இ.பி.எப்.95 பென்ஷன் அல்லாத வேறு பென்ஷனுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் இந்த பொதுத்துறை நிறுவனமோ அல்லது தனியார் நிறுவனமோ மூடி விட்டால் தொழிலாளர்கள் யாரிடம் போய் தங்களுடைய பங்கை கேட்க முடியும். இது குறித்து ஒன்றிய அரசு சிந்தித்து நல்ல ஒரு திட்டத்தை கொண்டு வந்து தொழிலாளர்களுக்கு ஓய்வு கால பலன்களை பாதுகாக்க வேண்டுகிறோம்.

அடுத்து சமூகப் பாதுகாப்புத் திட்டமான தொழிலாளர் காப்புறுதி திட்டத்தில் தொழிலாளர்கள் மாத ஊதியம் ரூபாய் 21000/க்கு மேல் பெற்றால் அவர்களுக்கு இந்த திட்டம் அமல் பெறாது. எனவே இந்த திட்டத்தை அநேகம் பேர் பயன்பெறும் வகையில் இ.பி.எப். போல இ.எஸ்.ஐ.க்கும் ரூபாய் 21000/வரை பெறும் ஊதியத்திற்கு கட்டாய இ.எஸ்.ஐ. பங்கு தொகையை வசூலிக்க வேண்டும். இதனால் இந்த நிறுவனத்திற்கு பொருளாதார நிலை உயரும். இ.எஸ்.ஐ. திட்டத்தில் பங்கு கொள்ளும் தொழிலாளர் எண்ணிக்கையும் அதிகப்படுவதற்கு வாய்ப்பு உண்டு. அதேபோல் இ.எஸ்.ஐ. திட்டத்தின் விதி எண் 52 ன் படி குறைந்த ஊதியம் பெறுபவர்களுக்கு தொழிலாளர்களுடைய பங்குத் தொகையை செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. எனவே, அரசு அமைப்புசாரா தொழிலாளர்களுக்கும், இ.எஸ்.ஐ. திட்டத்தை கொண்டு வர வேண்டும்.

சிறு குறு தொழில்கள் அரசின் பொதுத்துறை நிறுவனங்களையும், அரசுத் துறையையும் நம்பி உள்ளது. பெல் (Bell) போன்ற நிறுவனங்கள் ஒரு காலத்தில் அவர்களுக்கு வேண்டிய மூலப் பொருள்கள் மற்றும் தொழிலை நடத்த வேண்டிய கடன் தொகையையும் வங்கியில் இருந்து பெற்றுத் தந்தார்கள். ஆனால் தற்போது அந்த நிலை இல்லை. எனவே நிதியமைச்சர் கடன் வழங்குவதில் சிறு குறு தொழில்களுக்கு தாராளமாக இருந்த போதிலும் அவர்கள் உற்பத்தி செய்த பொருள்களை அரசே வாங்கவில்லையென்றால் தொழில்கள் நசிவதற்கு வாய்ப்புகள் உருவாகிறது.

ஒன்றிய அரசு சி மற்றும் டி பிரிவுகளான ஊழியர்களை நியமனம் செய்வதில் சுணக்கம் காட்டி வருகிறது. அதேபோல் மாநில அரசிலும் அந்த கடைநிலை ஊழியர்களை நியமனம் செய்வதில் தடை செய்து வருகிறது. இவைகள் அனைத்தையும் ஒப்பந்த முறையில் கொண்டு வந்து புகுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். இது ஒரு கலாசாரமாக மாறி வருகின்றது. ஒப்பந்தத் தொழிலாளர்கள் ஒழித்தல் மற்றும் முறை ப்படுத்துதல் சட்டப்படி நிரந்தரப் பணியில் ஒப்பந்தத் தொழிலாளர்களை நியமிப்பதை தடை செய்தும், அப்படி அவசியம் ஏற்பட்டால் அவர்களுக்கு நிரந்தர தொழிலாளர்களுக்கு உள்ள சலுகைகளை வழங்கவும் ஆவன செய்து, தொழிலாளர் சுரண்டலை தவிர்க்க வேண்டுகிறோம்.

பி.எஸ்.என்.எல். என்பது மிகப் பெரிய ஒரு சேவை நிறுவனம் ஆகும். அந்த தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு, பென்ஷன் உயர்வு போன்றவை பல ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. அடுத்து போனஸ் சட்டத்தில் போனஸ் வழங்குவதற்கான ஊதிய உச்ச வரம்பை கடந்த பல ஆண்டுகளாக பா.ஜ.க. அரசு மாற்றாமல் உள்ளது. இவை அனைத்தையும் சீர்திருத்தம் செய்து கொண்டு வந்தால் பொருளாதார வளர்ச்சி மேம்படும் என கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு மாநிலங்களவையில் கழக உறுப்பினர் மு.சண்முகம் உரையாற்றினார்.

அ.தி.மு.க. சார்பில் வழங்கப்படுவதாக பொய்ப் பிரச்சாரம் செய்து

# மாதவரத்தில் மாநகராட்சி நிவாரணப் பொருட்களை பதுக்கி வைத்த அ.தி.மு.க. கவுன்சிலர்!

## கழகத்தினர் முயற்சியால் மீட்கப்பட்டு அரசு சார்பில் வழங்கப்பட்ட நிவாரணம் வீடு வீடாக அதிகாரிகளால் வழங்கப்படுகிறது!

மாதவரம் டிச. 13 -

கனமழையால் புழல் ஏரியிலிருந்து உபரி நீர் திறக்கப்பட்டதை தொடர்ந்து மணலி மண்டலம் 17வது வார்டுக்குட்பட்ட வடபெரும்பாக்கம், கொசப்பூர், செட்டிமேடு ,டாக்டர் அம்பேத்கர் நகர், சின்ன தோப்பு, அரியலூர், தியாகி விஸ்வநாத தாஸ் நகர், வி .எஸ். மணி நகர் ஆகிய குடியிருப்பு பகுதிகளில் வெள்ள நீர் சூழ்ந்து மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் பேரில், மாநகராட்சி சார்பில் நிவாரண உதவி பொருட்கள் அந்தந்த மண்டலங்களில் அதிகாரிகள் விநியோகித்து வருகின்றனர். அதன்படி மாதவரம் தொகுதி,மணலி மண்டலம் 17 வது வார்டில் அரிசி, பால் பவுடர், ரொட்டி, தண்ணீர் போன்ற நிவாரண பொருட்கள் அடங்கிய தொகுப்பு வழங்கப்பட்டது.

இதில் 17 வது வார்டு அதிமுக கவுன்சிலர் ஜெய்சங்கர் மாநகராட்சி சார்பில் வழங்கப்பட்ட நிவாரண பொருட்களை அதிமுக சார்பில் கொடுக்கப்படும் நிவாரண பொருட்கள் என மக்களிடம் பிரச்சாரம் செய்ததுடன், மாநகராட்சி அதிகாரிகள் இல்லாமல் தன்னிச்சையாக எடுத்துச் சென்று பொது மக்களுக்கு அதிமுக நிர்வாகிகளு டன் விநியோகித்ததாக குற்றச்சாட்டு எழுந்தது.

மேலும் பொதுமக்களுக்கு வழங்க வேண்டிய பொருட்களை தனது அலுவலக அறையில் பூட்டி சாவியை தன் கையில் வைத்துக் கொண்டு பொருட்களை பதுக்கி அவர் விருப்பப்பட்டவர்களுக்கு அவைகளை வழங்கப்படுவதாகவும் குற்றச்சாட்டு எழுந்தது .இதனை அறிந்த திமுகவினர் மற்றும் பொதுமக்கள் வடபெரும்பாக்கம் 17வது வார்டு உதவி பொறியாளர் அலுவலகத்தை நேற்று முற்றுகையிட்டனர்.

அப்போது அலுவலகம் அருகே நின்று கொண்டிருந்த அதிமுக கவுன்சிலர் ஜெய்சங்கரை முற்றுகையிட்டு வாக்குவாதம் செய்தனர்.

தகவல் அறிந்த மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன், வட்ட செயலாளர் கே. கருணாகரன் சி.மூர்த்தி சீ.பாலாஜி எம்.மைக்கேல் இ.கார்த்தி டி.மாதவன் டி பூபாலன், எம் என் தளபதி பி.செந்தில் ஆகியோர் மற்றும் நிர்வாகிகள் அங்கு வந்து பொதுமக்களை சமாதானம் செய்தனர்.

பின்னர் திமுக அரசின் பெயரை மறைத்து அதிமுக கொடுக்கும் நிவாரணம் என பொதுமக்களிடம் பொய் சொல்லக்கூடாது. இது பாதிக்கப்பட்ட அனைவருக்கும் கொடுக்க வேண்டிய நிவாரண பொருள். இதில் கட்சி பாகுபாடு பார்க்க கூடாது என்று அதிமுக கவுன்சிலரை புழல் நாராயணன் மற்றும் திமுகவினர் எச்சரித்தனர்.

இதனால் அங்கு சிறிது நேரம் வாக்குவாதம் ஏற்பட்டு பரபரப்பு ஏற்பட்டது. பின்னர் உதவி பொறியாளர் திருமாறன் என்பவரை வரவழைத்து அதிமுக கவுன்சிலர் ஜெய்சங்கரிடமிருந்து சாவியை வாங்கி அலுவலகத்தில் பூட்டி வைக்கப்பட்டிருந்த சுமார் 1000 நிவாரண பொருட்கள் தொகுப்பை வடபெரும்பாக்கம் தீயம்பாக்கம் பெரியார் நகர் தியாகி விஸ்வநாததாஸ் நகர் கொசப்பூர் ஆகிய பகுதிகளில் வீடு வீடாக சென்று மாநகராட்சி அலுவலர்கள் விநியோகிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

அதன் அடிப்படையில் தொடர்ந்து பிள்ளையார் கோயில் தெரு ஒன்றாம் பகுதி ஆகிய பகுதிகளில் மாநகராட்சி அதிகாரிகள் வீடு வீடாக சென்று நிவாரண பொருட்களை விநியோகித்து வருகின்றனர்.

ஒரு மாநகராட்சி கவுன்சிலராக இருக்கக்கூடியவர் தன்னுடைய அறையின் சாவியை தவிர வார்டு அலுவலகத்தில் வேறு எந்த அறையின் சாவியையும் வைத்திருக்கக் கூடாது என்பது விதி ஆனால் அதை மீறி அதிமுக கவுன்சிலர் மாநகராட்சி அலுவலகத்தின் பொருட்கள் இருப்பு அறை சாவியையும் வைத்திருந்தது பொதுமக்களிடத்திலேயே பெருத்த அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

அதிமுக கவுன்சிலர் மாநகராட்சி கொடுத்த நிவாரண பொருட்களை பதுக்கி வைத்து பொதுமக்களுக்கு வழங்காமல் இருந்ததை கண்டுபிடித்து பொதுமக்களுக்கு வழங்க உதவிய திமுகவினருக்கும் நிவாரணத் தொகுப்பை அனைவருக்கும் வழங்க உத்தரவிட்ட மாண்புமிகு தமிழ்நாடு அமைச்சருக்கும் அப்பகுதி மக்கள் நன்றி தெரிவித்துக் கொண்டார்கள்

புயல் - பெரும் மழையால் பாதிக்கப்பட்ட

# இராயபுரம் தொகுதியில் 10 ஆயிரம் பேருக்கு நல உதவிகள்!

## அமைச்சர் எஸ்.ஆர். ராஜகண்ணப்பன் தலைமையில் வழங்கல்!

சென்னை, டிச. 13 -

புயல் பெரும் மழையால் பாதிப்புக்குள்ளான இராயபுரம் தொகுதி வாழ் மக்களுக்கு அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் தலைமையில் 10 ஆயிரம் குடும்பங்களுக்கு நல உதவிகள் வழங்கப்பட்டது.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இராயபுரம் தொகுதி மேற்கு பகுதி மூலக்கொத்தளம், போஜராஜநகர், அட்டில் கிரவுண்ட், தர்மராஜா கோவில் தெரு, கிழக்கு பகுதிக்குட்பட்ட பனைமரத் தொட்டி, ஜி.எம்.பேட்டை மற்றும் ஆண்டியப்பன் தெரு, (ஜி.ஆர்.டி. அருகில்) உள்ளிட்ட இடங்களில் 11.12.2023 12.12.2023 ஆகிய இரு தினங்களில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ் இராஜகண்ணப்பன் ஏற்பாட்டில் மிக்ஜாம் புயலில் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு சுமார் 10,000 நிவாரணப் பைகள், நலத்திட்ட உதவிகளை வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி, சென்னை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தா.இளைய அருணா ஆகியோர் முன்னிலையில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் இராயபுரம் மேற்குப் பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், கிழக்குப் பகுதிச் செயலாளர் இரா. செந்தில்குமார், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் உடனிருந்தனர்.



மாதவரத்தில் மாநகராட்சி சார்பில் மழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க வைத்திருந்த நிவாரணப் பொருட்களை அ.தி.மு.க. கவுன்சிலர் பதுக்கி வைத்ததை அறிந்து கழகத்தினர் முற்றுகையிட்டு நிவாரணப் பொருட்களை மக்களுக்கு வழங்கச் செய்தனர்.

### மிக்ஜாம் புயல் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட

# மக்களுக்கு ரூ.6,000 நிவாரணம்!

## முதல்வர் அறிவிப்புக்கு பெண்கள் மத்தியில் பலத்த வரவேற்பு!

சென்னை, டிச. 13 -

மிக்ஜாம் புயல் - வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூபாய் 6000 வழங்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு பெண்கள் மத்தியில் பலத்த வரவேற்பு பெற்றுள்ளது.

சென்னையில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மூதாட்டி ஒருவர் கூறியதாவது:

சென்னை தெருக்களில் மழை வெள்ளம் ஓடியபோது நான்கு பக்கமும் பெரிய மோட்டார் பம்பு வைத்து தண்ணீரை வெளியேற்றி நன்றாக செய்தார்கள். எங்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் அறிவித்தது எங்களைப் போன்ற ஏழை மக்களுக்கு பெரும் உதவியாக இருந்தது என்றார்.

மற்றொரு மூதாட்டி கூறுகையில், நாங்கள் ஸ்கூலில் தங்க வைக்கப்பட்டோம் எங்களுக்கு பெட்ஷீட், சாப்பாடு என்று எல்லா வசதிகளும் செய்து கொடுத்தார்கள். இப்போ 6 ஆயிரம் கொடுத்தது பெரிய புயலில் நாங்கள் கஷ்டப்பட்டதற்கு இது பெரிய காசுதான். எங்களுக்கு இது ரொம்ப சந்தோஷம்தான் என்று குறிப்பிட்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (12.12.2023) மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இம்ப்காப்ஸ் நிறுவனத்தின் சார்பில் நிலவேம்பு குடிநீர் மற்றும் நிலவேம்பு குடிநீர் பாக்கெட்கள் 50 ஆட்டோக்கள் மூலம் சென்னை முழுவதும் பொது மக்களுக்கு வழங்குவதற்கான நிகழ்வினை கொடியைசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை ஆணையர் திருமதி.மைதிலி கே.ராஜேந்திரன், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்க திட்ட இயக்குனர் ஹரிஹரன், மண்டல குழுத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, இம்ப்காப்ஸ் மருத்துவர்கள் கண்ணன், காதர் முகைதீன், சுரேஷ் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

### கைதிகளை முன்கூட்டியே விடுதலை செய்யும் விவகாரம்:

# எப்போதுதான் முடிவு எடுப்பீர்கள்?

## ஆளுநர் ரவிக்கு உச்சநீதிமன்றம் சரமாரி கேள்வி!

புதுடெல்லி, டிச. 13 -

கைதிகளை முன்கூட்டியே விடுதலை செய்யும் விவகாரம் தொடர்பாக எப்போது தான் முடிவெடுக்கப்படும்? என்று தமிழக ஆளுநருக்கு சரமாரி கேள்வியெழுப்பிய உச்ச நீதிமன்றம், இந்த விவ காரத்தில் பிப்ரவரி 2ம் தேதிக்குள் பதிலளிக்க ஆளுநர் தரப்புக்கு உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் வெவ்வேறு குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டு நீண்ட நாட்களாக சிறையில் உள்ள சிக்கந்தர், ரியா சுதீன் உள்ளிட்டோரை முன்கூட்டியே விடுதலை செய்ய வேண்டும் என தமிழ்நாடு அமைச்சரவை கடந்த 2021ல் முடிவு செய்தது. அதற்கான ஒப்புதலை பெற கோப்புகள் அனைத்தும் ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் தற்போது வரையில் அதற்கு எந்த பதிலும் தெரிவிக்காமல் ஆளுநர் ஆர். என்.ரவி கிடப்பில் போட்டு வைத்துள்ளார்.

இந்த நிலையில் இது தொடர்பான வழக்கானது உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகள் சஞ்சய் கிஷன் கவுல் மற்றும் சுதன்சு துலியா ஆகியோர் அமர்வில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தபோது, "கடந்த 25 ஆண்டுகளாக சிறையில் உள்ள சிக்கந்தர், குண்டாஸ் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ரியா சுதீன் உட்பட மூன்று கைதிகளை முன்கூட்டியே விடுதலை செய்யக்கூறி தமிழ்நாடு அரசு அனுப்பிய கோப்புகளின் தற்போதைய நிலை என்ன?, ஏன் இத்தனை காலதாமதம்? எப்போதுதான் முடிவெடுப்பீர்கள் என தமிழ்நாடு ஆளுநருக்கு சரமாரி கேள்வியெழுப்பிய நீதிபதிகள், "இந்த விவகாரம் தொடர்பாக பிப்ரவரி 2ம் தேதிக்குள் பதிலளிக்க வேண்டும் என ஆளுநர் தரப்புக்கு உத்தரவிட்டு வழக்கை ஒத்திவைத்தனர். மசோதாக்களை கிடப்பில் போட்ட ஆளுநர் ரவிக்கு எதிராக தமிழ்நாடு அரசு தொடர்ந்துள்ள 2 ரிட் மனுக்கள் மீதான விசாரணை உச்ச நீதிமன்றத்தில் நாளை வரவுள்ளது.

### வழக்கறிஞர் கே.எஸ்.ரவிச்சந்திரன் பங்கேற்பு!

# கழக சட்டத்துறை சார்பில் இளம் வழக்கறிஞர்களுக்கான பேச்சுப் போட்டி!

## வெற்றி பெற்றவர்களுக்கு பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பரிசுகள் வழங்கினார்!

திருவாரூர், டிச. 13 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக சட்டத்துறை சார்பில் மூன்றாண்டுகளுக்குட்பட்ட இளம் வழக்கறிஞர்களுக்கான 6வது மற்றும் இறுதி மண்டல பேச்சுப்போட்டி திருவாரூர் மாவட்டம் கலைஞர் கோட்டத்தில் உள்ள தயாளு அம்மாள் அரங்கத்தில் 09.12.2023 (சனிக்கிழமை) அன்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சட்டத்துறை இணை செயலாளர் கே.எஸ். இரவிச்சந்திரன் மற்றும் சு. ராதாகிருஷ்ணன், துணைச் செயலாளர் ஜெ.பச்சையப்பன், தலைமை கழக வழக்கறிஞர் கே. ஜே. சரவணன், ப. கணேசன் மற்றும் மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர். இப்போட்டிக்கு நடுவர்களாக தலைமைக் கழக வழக்கறிஞர்கள் சூர்யா வெற்றிக்கொண்டான் மற்றும் நன்மாறன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இப்போட்டியில் முதல் பரிசு பெற்ற மன்னார்குடி நீதிமன்ற வழக்கறிஞர் சந்தோஷ்குமாருக்கு ரூபாய் 50,000/, தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்;

இரண்டாம் பரிசு பெற்ற திருச்சி நீதிமன்ற வழக்கறிஞர் அமுதினியனுக்கு ரூபாய் 25,000/ வெள்ளிப்பதக்கம், சான்றிதழ்;

மூன்றாம் பரிசு பெற்ற திருச்சி நீதிமன்ற வழக்கறிஞர் கோகுலசாமிக்கு ரூபாய் 15,000/தாமிரப் பதக்கம், சான்றிதழ்;

ஆறுதல் பரிசு பெற்ற திருச்சி நீதிமன்ற வழக்கறிஞர் விவேக்குக்கு, தஞ்சாவூர் நீதிமன்ற வழக்கறிஞர் அஜித்க்கு தலா ரூபாய் 5,000/ வெண்கலப்பதக்கம் மற்றும் சான்றிதழையும் திருவாரூர் மாவட்ட கழக செயலாளரும் திருவாரூர் சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி கே. கலைவாணன் வழங்கினார்.

இப்பேச்சு போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் சென்னையில் நடைபெறவுள்ள மாநில அளவிலான போட்டியில் கலந்து கொள்வார்கள்.

### காஷ்மீருக்கான சிறப்புத் தகுதி செல்லும் என்ற தீர்ப்பு

# கூட்டாட்சிக் கட்டமைப்பின் மீது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்!

## சி.பி.எம். அரசியல் தலைமைக்குழு விமர்சனம்!

புதுதில்லி, டிச. 13 -

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்திற்கான சிறப்பு அந்தஸ்து ரத்து செல்லும் என்ற உச்சநீதிமன்ற தீர்ப்பு நம் அரசமைப்புச் சட்டத்தில் இருந்திடும் கூட்டாட்சி கட்ட மைப்பின் மீது மோசமான விளைவுகளை ஏற்படுத்திடும் என்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கூறியுள்ளது.

தீர்ப்பு குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழு மேலும் கூறியிருப்ப தாவது:

உச்சநீதிமன்ற தீர்ப்பில், ஜம்மு - காஷ்மீர் மாநிலம் இறையாண்மை தொடர்பாக எவ்விதமான கூறுகளையும் தக்க வைத்துக்கொண்டு கையெழுத்திடவில்லை என்றும், எனவே ஜம்மு - காஷ்மீருக்கு என்று தனி அரசியலமைப்புச் சட்டம் உரு வாக்கிய விதிகள் தேவைக்கு அதிகமான ஒன்று என்றும் குறிப்பிட்டிருக்கிறது. ஆனால், ரத்து செய்யப்பட்டுள்ள 370ஆவது பிரிவைத் தக்க வைத்திட, இணைப்பு உடன்பாட்டில் கையெழுத்திடுவது நிபந்தனை யாக இல்லையா?

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பில், ஜம்மு - காஷ்மீர் இந்திய ஒன்றியத்தில் உள்ள இதர மாநிலங்களைப் போலவே ஒன்று என்று கூறியிருப்பதன் மூலம், வட கிழக்கு மாநி லங்களுக்கும் மற்றும் சில மாநிலங்களுக்கு அரசமைப்புச் சட்டத்தின் 371ஆவது பிரிவின்கீழ் வழங் கப்பட்டுள்ளது போன்ற சலுகைகளையும் கூட ஜம்மு - காஷ்மீர் இழக்கிறது.

உச்சநீதிமன்றத் தீர்ப்பு, மாநில அந்தஸ்து திருப்பி அளிக்கப்படும் என்று சொலிசிட்டர் ஜெனரல் உறுதிமொழி கூறியதை ஏற்றுக் கொண்டு, ஜம்மு - காஷ்மீர் மாநிலம் இரு யூனியன் பிரதேசங்களாக தரமிறக்கப்பட்டது குறித்து எதுவும் கூறாமல் தவிர்த்திருக்கிறது. அதே சமயத்தில், தனி லடாக் யூனியன் பிரதேசம் உருவாக்கப் பட்டிருப்பது செல்லத்தக்கது என்றும் கூறி யிருக்கிறது. ஆகையால், மறுசீர மைப்பு என்பது முன்பிருந்த ஒரிஜினல் நிலைக்கு அல்ல. ஆனால் அதுவும் ஒரு பகுதி மட்டுமே. அதுவும்கூட காகிதத்தில் அளிக்கப் பட்டுள்ள ஓர் உத்தரவாதமேயாகும்.

**தேர்தல் நடத்துவதற்கான அவகாசம் விசித்திரமாக உள்ளது**

மேலும் உச்ச நீதிமன்றம், 2024 செப்டம்பர் 30க்கு முன்பு, எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக ஜம்மு - காஷ்மீரில் தேர்தலை நடத்திட வேண்டும் என்று தேர்தல் ஆணையத்திற்கு கட்டளை பிறப்பித்திருக்கிறது.

இவ்வாறு, இந்தத் தீர்ப்பு ஒன்றிய அரசாங்கத்திற்கு அது ஜம்மு - காஷ்மீர் மீது கட்டுப்பாட்டை வைத்துக்கொள்ள நீண்ட காலத்தை அளித் திருக்கி றது. இது மிகவும் விசித்திரமான தாகும். ஒரு மாநிலம் குடியரசுத் தலைவர் ஆட்சியின் கீழ் இருக்கும்போது, அதன் மாநில அந்தஸ்து கலைக்கப்படும் போது, தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றம் இல்லாத பட்சத்தில், குடியரசுத் தலைவர் நியமிக்கப் பட்ட ஆளுநரின் ஒப்புதலை மாற்றாகக் கொள்ள முடியுமா? மீண்டும், இது கடும் விளைவுகளை ஏற்படுத்திடும். இதர மாநிலங்களும்கூட இவ்வாறு குடியரசுத் தலைவர் ஆட்சிக்கு உட்படுத்தப்பட முடியும், அதன் எல்லைகள் மாற்றப்பட முடியும் அல்லது அதன் மாநில அந்தஸ்து கலைக்கப்படும்.

**மாநிலங்களின் கூட்டாட்சி தத்துவத்திற்கு ஆபத்து!**

அரசியலமைப்புச் சட்டத்தின் 3ஆவது பிரிவின் கீழ் உள்ள விலக்கக்கூறு (*proviso column*), குடியரசுத் தலைவர் எந்தவொரு மாநிலத்தையும் மறுசீரமைப்பதற்கான சட்டமுன்வடிவை சம்பந்தப்பட்ட மாநிலத்தின் சட்டமன்றத்திற்கு அதன் கருத்தைப் பெறுவதற்காக அனுப்பிட வேண்டும் என்று கூறுகிறது. ஆனால் இந்தத் தீர்ப்பு, புதிய மாநிலங்களை உருவாக்குதல், பகுதிகள், எல்லைகள் அல்லது இருக்கும் மாநிலங்களின் பெயர்களை மாற்றுதல் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கு ஒன்றிய அரசாங்கத்திற்கு அனுமதி அளித்திருக்கிறது. இது கூட்டாட்சித் தத்து வத்தையும், சட்டமன்றங்களின் உரிமைகளையும் ஆழமான முறையில் அரித்து வீழ்த்திடும்.

ஐந்து நீதிபதிகள் அடங்கிய அமர்வாயத்தில் பிரதான தீர்ப்பும், மற்றும் அதற்கு இணக்கமான இரு தீர்ப்புகளுடன், முழுமையாக ஆய்வு செய்த பின்னரே விவரமாக இத் தீர்ப்பு குறித்து தெரிவித்திட முடியும்.

எனினும், இந்தத் தீர்ப்பானது நம் அர சமைப்புச் சட்டத்தின் கூட்டாட்சி அமைப் பின்மீது கடும் விளைவுகளை ஏற்படுத்தும் என்பதும், ஒருமைப்பாடு ("*integration*") என்ற பெயரில் "தேசப் பாதுகாப்பை" (*national security*")ப் பிரயோகிப்பதன் மூலம் ஓர் ஒற்றையாட்சிக் கட்டமைப்பை வலுப்படுத்தவே முனைகிறது என்பது தெளிவாகிறது.



இராயபுரம் தொகுதி, மேற்கு பகுதி மூலக்கொத்தளம், போஜராஜநகர், அட்டில் கிரவுண்ட், தர்மராஜா கோவில் தெரு, கிழக்கு பகுதிக்குட்பட்ட பனைமரத்தொட்டி, ஜி.எம்.பேட்டை மற்றும் ஆண்டியப்பன் தெரு, (ஜி.ஆர்.டி. அருகில்) உள்ளிட்ட இடங்களில் 11.12.2023 12.12.2023 ஆகிய இரு தினங்களில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ் இராஜகண்ணப்பன் ஏற்பாட்டில் மிக்ஜாம் புயலில் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு சுமார் 10,000 நிவாணரப் பைகள், நலத்திட்ட உதவிகளை வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி, சென்னை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தா.இளைய அருணா ஆகியோர் முன்னிலையில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் இராயபுரம் மேற்குப் பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், கிழக்குப் பகுதிச் செயலாளர் இரா.செந்தில்குமார், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### மக்கள் அதிகார மாவட்டச் செயலாளருக்கு கொலை மிரட்டல் விடுத்த

# பா.ஜ.க. மாவட்ட தலைவரை கைது செய்யக் கோரி ஆர்ப்பாட்டம்!

சிவகங்கை, டிச. 13 -

சிவகங்கை மாவட்ட மக்கள் அதிகாரத்தின் செயலாளராக காளையார் கோவிலைச் சேர்ந்த வைகை சரவணன் உள்ளார். இவரது அமைப்பான மக்கள் அதிகாரத்தின் சார்பில் காளையார் கோவிலில் பா.ஜ.க. ஆட்சி குறித்து குறைபாடுகளை சுவரில் விளம்பரமாக எழுதப்பட்டுள்ளது .

இது குறித்து சிவகங்கை மாவட்ட பா.ஜ.க. தலைவர் மேப்பல் சக்தி மற்றும் கருப்பையா ஆகியோர் வைகை சரவணனை தொலைபேசியில் தொடர்பு கொண்டு உடனடியாக பா.ஜக.வை பற்றி எழுதிய சுவர் விளம்பர த்தினை அரைமணி நேரத்தில் அழித்துவிட வேண்டும். இல்லை என்றால் கொலை செய்து விடுவோம் என்று மிரட்டியுள்ளார்கள். இது குறித்து காளையார்கோவில் போலீசில் மக்கள்அதிகார மாவட்ட பொதுச் செயலாளர் வைகை சரவணன் புகார் செய்துள்ளார். கொலை மிரட்டல் விடுத்த பா.ஜ.க. மாவட்டத்தலைவர் மேப்பல் சக்தி கருப்பையா ஆகியோர் மீது போலீசார் வழக்குப் பதிவு செய்து உடனடியாக கைது செய்ய வலியுறுத்தி சிவகங்கையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, மார்க்சீய கம்யூனிஸ்ட்கட்சி, மக்கள் அதிகாரம் சார்பில் கலெக்டர் ஆபிஸ் முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக சட்டத்துறை சார்பில் மூன்றாண்டுகளுக்குட்பட்ட இளம் வழக்கறிஞர்களுக்கான 6வது மற்றும் இறுதி மண்டல பேச்சுப்போட்டி திருவாரூர் மாவட்டம் கலைஞர் கோட்டத்தில் உள்ள தயாளு அம்மாள் அரங்கத்தில் 09.12.2023 (சனிக்கிழமை) அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சட்டத்துறை இணை செயலாளர் கே.எஸ். இரவிச்சந்திரன் மற்றும் சு.ராதாகிருஷ்ணன், துணைச் செயலாளர் ஜெ. பச்சையப்பன், தலைமைக் கழக வழக்கறிஞர் கே. ஜே. சரவணன், ப.கணேசன் மற்றும் மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், வழக்கறிஞர்கள் கலந்துகொண்டனர். இப்போட்டிக்கு நடுவர்களாக தலைமைக் கழக வழக்கறிஞர்கள் சூர்யா வெற்றிக்கொண்டான் மற்றும் நன்மாறன் ஆகியோர் கலந்துகொண்டனர். இப்போட்டியில் கலந்து கொண்டு வெற்றிபெற்ற இளம் வழக்கறிஞர்களுக்கு திருவாரூர் மாவட்டக் கழக செயலாளரும் திருவாரூர் சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி கே. கலைவாணன் பரிசுகளை வழங்கினார்.



கடம்பத்தூர் மேற்கு ஒன்றியம் மப்பேடு, உளுந்தை, இருளஞ்சேரி, குமாரசேரி, கொண்டஞ் சேரி, சத்தரை ஊராட்சிகளில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் மப்பேடு தனியார் திருமண மண்டபத்தில் வெள்ள நிவாரண உதவி பொருட்களை வழங்கினார். நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர் மோ.இரமேஷ், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சரஸ்வதி, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வி.எஸ். நேதாஜி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வரதராஜன், வேதநாயகி ,ஒன்றிய கழக நிர்வாகிகள் ஆர். கோபால், கீதா முனுசாமி, தேவ ஆரோக்கியம், டி.காமராஜ், ஏகாம்பரம், மாணிக்கம், காஞ்சிப்பாடி பி. சரவணன், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் ஜெயவேல் ராஜா, தட்சிணாமூர்த்தி, கருணாநிதி, மணிகண்டன், நீலாவதி ராஜேந்திரன், தமிழ்மணி, ஒன்றிய குழு உறுப்பினர் தயாளன், ஊராட்சி மன்ற தலைவர்கள் தேவி பிரபாகரன், தேவி கலா ஆரோக்கியசாமி , மாணவரணி ஆர்.மனோஜ், பிஞ்சிவாக்கம் உதயா மற்றும் கிளை கழக நிர்வாகிகள் மப்பேடு சண்முகம், முரளி, சரவணன், சாரதி, உள்ளிட்ட பயனாளிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



சென்னை மேற்கு மாவட்டம் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுக்குட்பட்ட திருவல்லிக்கேணி உள்ளிட்ட பகுதிகளில் "மிக்ஜாம் புயல் மழையால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு பி.வி.நாயக்கன் தெருவில் அமைச்சர் உதயநிதிஸ்டாலின், தயாநிதிமாறன் எம்.பி., ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கினர். அருகில் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, இம்ரான் ஹாரூன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி, 116 ஆவது வட்டம், அயோத்தி குடியிருப்பில் வசித்து வருகின்ற பொதுமக்கள் 1000 பேருக்கு அரிசி, மளிகை பொருட்கள், போர்வை உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தயாநிதிமாறன் எம்.பி., ஆகியோர் வழங்கினர். மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு மற்றும் நிர்வாகிகள் உடனுள்ளனர்.

### இ. கருணாநிதி எம்.எல்.ஏ. ஏற்பாட்டில்

# பல்லாவரம் தொகுதியில் 10 ஆயிரம் குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள்!

## டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர்கள் க.பொன்முடி- தா.மோ அன்பரசன் - அர.சக்கரபாணி வழங்கினர்!

பல்லவபுரம், டிச. 13 -

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தாம்பரம் மாநகராட்சி பகுதிகளில் மிக்ஜாம் புயல் கனமழை வெள்ளத்தால் பல்லாவரம் தொகுதிகளில் பல்வேறு குடியிருப்பு பகுதிகள் முழுவதுமாக மழை நீரில் மூழ்கியது.

இதில் தொகுதிக்குட்பட்ட ராதா நகர், நெமிலிச்சேரி, பல்லாவரம் குன்றத்துார் சாலை, பத்மாவதி நகர், பம்மல் முத்தமிழ் நகர், அனகாபுத்தூர், சீனிவாசபுரம், சரஸ்வதி நகர், பாரி நகர், அருள் நகர், காயத்ரி நகர், சாந்தி நகர், சுற்றுவட்ட பகுதிகளில் குடியிருப்பு பகுதிகள் முழுவதும் மழைநீர் சூழ்ந்ததால் பெரும்பாலான வீடுகள், கார்கள், இருசக்கர வாகனங்கள் என அனைத்தும் நீரில் மூழ்கின.

இதனால் பொதுமக்கள் வீட்டில் இருந்து வெளியே வர முடியாத நிலை ஏற்பட்டது.மழை வெள்ளநீர் சூழ்ந்த பகுதிகளில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி அப்பகுதிகளில் இருந்து அனகாபுத்தூர் அடையார் ஓரமாக உள்ள பகுதிகளில் வெள்ள நீர் சூழ்ந்து இருந்ததால் அப்பகுதிகளில் படகுமூலம் சென்று மக்களுக்கு குடி தண்ணீர் பால் ரொட்டி மூன்று வேலை உணவு வழங்கி அப்பகுதியிலே காலை 7 மணி முதல் இரவு பத்து மணி வரை அப்பகுதியிலே தங்கி இருந்து பணியாற்றினார். அதைத் தொடர்ந்து அனகாபுத்தூரில் பாதிக்கப்பட்ட. 500 குடும்பங்களுக்கு அரிசி பருப்பு, மளிகை சாமான்கள் பாய் போர்வை நிவாரண பொருட்கள் மாண்பு மிகு அமைச்சர் தா.மோ அன்பரசன் தலைமையில் நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆறுதல் கூறி வழங்கினார்கள்

அதைத் தொடர்ந்து குரோம்பேட்டை பகுதியில்வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 2 ஆயிரத்துக்கும் மேற்பட் குடும்பங்களுக்கு கழக நாடாளுமன்ற தலைவரும் கழகப் பொருளாளருமான டி. ஆர். பாலு வழங்கினார்.

அதைத் தொடர்ந்து குரோம்பேட்டை ஜிஎஸ்டி ரோடு அருகில் 2ஆயிரம் குடும்பங்களுக்கு மாண்பு மிகு உயர்கல்வித்துறை அமைச்சர் க. பொன்முடி அவர்கள் வழங்கினார்கள் அதைத்தொடர்ந்து 3000 மேற்பட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு குரோம் பேட்டை பல்லாவரம் பம்மல் ஆகிய பகுதிகளில் அமைச்சர்கள் தாமோ.அன்பரசன் அர.சக்கரபாணி ஆகியோர்கள் வழங்கினார்கள்

மேலும் நெமிலிச்சேரி பழைய பல்லாவரம் ஆகிய பகுதிகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் கருணாநிதி வழங்கினார் மேலும் சட்டமன்ற உறுப்பினர் கூறுகையில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட நலத்திட்ட உதவி பொருட்கள் தயார் செய்யப்பட்டுள்ளன தற்போது வரை 8000குடும்பங்களுக்கு நமது முதலமைச்சர் அவர்கள் எம். பி. அமைச்சர்கள் அவர்கள் நேரில் வருகை தந்து பாதிக்கப்பட்டுள்ள ஆறுதல் கூறி நலத்திட்ட உதவிகளை வழங்கி உள்ளார்கள் மேலும் 2000 குடும்பங்களுக்கு இன்றைக்குள் வழங்கப்படும் என தெரிவித்தார் மேலும் 10,000 க்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் தயார் செய்யப்பட்டு இந்த வாரத்துக்குள் வழங்கி முடிக்கப்படும் என சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்தார் மேலும் தொகுதி பொதுமக்கள் நல்வாழ் சங்க நிர்வாகிகள் சமூக ஆர்வலர்கள் கூறுகையில் கன மழை தொடங்கிய காலத்தில் இருந்து இன்று வரை களத்தில் நின்று மழைநீர் தேங்கிய பகுதிகளில் மழை நீரை வடிய வைத்தது மரங்களை வெட்டி மழை நின்ற உடனே மின்சாரம் வழங்கியது பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக உணவுகள் வழங்கி அவர்களை ஆறுதல் கூறியது நலத்திட்ட உதவிகள் போன்ற பணிகளை மிகச் சிறப்பாக பணியாற்றிய சட்டமன்ற உறுப்பினர் பணிகள் பாராட்டுக்கு உரியது என தெரிவித்தார்கள் இந்நிகழ்ச்சியின் போது மண்டல தலைவர்கள் வே. கருணாநிதி இ. ஜோசப் அண்ணாதுரை மாநகராட்சி அதிகாரிகள் பகுதி கழகச் செயலாளர்கள் த. ஜெயக்குமார் இ. எஸ். பெர்னார்ட் ஏ. கே. கருணாகரன் மாமன்ற உறுப்பினர்கள் வட்டக் கழக செயலாளர் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தார்கள்

### அகில இந்திய குடிமைப் பணி தேர்வு பயிற்சி மையம் நடத்திய

# முதன்மைத் தேர்வில் - 39 தேர்வர்கள் தேர்ச்சி!

## ஆளுமைத் தேர்வில் பங்கேற்கின்றனர்!

தமிழ்நாடு அரசால் நிர்வகிக்கப்படும் அகில இந்திய குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மையத்தில் மத்திய தேர்வாணையத்தால் நடத்தப்படும் அகில இந்திய குடிமைப் பணிகளுக்கான தேர்வுகளை எதிர்கொள்ளும் ஆர்வலர்களுக்கு முதல்நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு, மாதிரி ஆளுமைத் தேர்வுகளுக்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இனவாரியாகவும் கிராமப்புறங்களில் உள்ள ஏழை எளிய குடும்பங்களைச் சார்ந்த ஆர்வலர்கள் பயனடையும் வகையிலும் இப்பயிற்சி மையம் கடந்த 57 ஆண்டுகளாக திறம்படச் செயல்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, இப்பயிற்சி மையத்தில் 2023-ஆம் ஆண்டில் முதன்மைத் தேர்வுக்கு பயின்ற 149 தேர்வர்களில், 15 மகளிர் மற்றும் 22 ஆண்கள் ஆகமொத்தம் 37 தேர்வர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். இவர்களில், 5 ஆர்வலர்கள் தமிழை விருப்பப் பாடமாகத் தேர்வு செய்தவர்கள்; அதிகபட்சமாக 6 ஆர்வலர்கள் புவியியல் பாடத்தைத் தேர்வு செய்தவர்கள். இவர்களுக்கு, 2023 ஜூன் 23-ம் தேதி முதல் செப்டம்பர் 24-ஆம் தேதி வரை உண்டு உறைவிடத்துடன் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

தேர்வினைச் சிறந்த முறையில் எழுதுவதற்கு பயிற்சி மையத்திலிருந்து, தேர்வு மையத்திற்கு சென்று வர சிறப்புப் பேருந்து வசதி செய்து தரப்பட்டது. மேற்குறித்த காலத்திற்கு ஊக்கத் தொகையாக 'நான் முதல்வன்' திட்டத்தின் மூலம் தேர்வர் ஒருவருக்கு தலா ரூ.25,000/- வீதம் வழங்கப்பட்டது.

தற்போது, இம்மையத்தில் தேர்ச்சி பெற்றுள்ள தேர்வர்களுக்கு இப்பயிற்சி மையத்தின் மூலம் மாதிரி ஆளுமைத் தேர்வுப் பணியில் உள்ள மற்றும் ஓய்வு பெற்ற அகில இந்திய குடிமைப் பணி அலுவலர்களாலும், தலைசிறந்த வல்லுநர்களாலும் நடத்தப்பட உள்ளது. இது, தேர்ச்சி பெற்றுள்ள தேர்வர்கள், தங்களது மாதிரி ஆளுமைத் தேர்வை மிகச் சிறப்பான முறையில் எதிர்கொள்ள ஏதுவாக அமையும்.

இப்பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்று தேர்ச்சி பெற்ற தேர்வர்கள் தவிர, முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ள தமிழ்நாட்டைச் சார்ந்த பிற தேர்வர்களும், இம்மையத்தால் நடத்தப்பட உள்ள மாதிரி ஆளுமைத் தேர்வில் பங்கு பெற அனுமதிக்கப்படுவர். இதற்கென கட்டணம் ஏதும் செலுத்தத் தேவையில்லை.

அவ்வாறு பங்கு பெற விரும்பும் தேர்வர்கள், தங்களது விருப்பத்தினை, aicscc.gov@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது 9345766957 என்ற புலன் எண்ணிற்கோ (வாட்ஸ்-அப்) அல்லது 044--24621475 என்ற தொலைபேசி எண்ணிற்கோ தொடர்பு கொண்டு விவரங்களைத் தெரிவிக்கலாம்.

மாதிரி ஆளுமைத் தேர்விற்கான தேதி குறித்த விவரங்கள். இம்மையத்தின் www.civilservicecoaching.com என்ற இணைய தளத்தில் விரைவில் அறிவிக்கப்படும்.

இம்மையத்தில் மாதிரி ஆளுமைத்தேர்வில் பங்கேற்கும் தேர்வர்களுக்கு, டெல்லியில் நடைபெறும் ஆளுமைத் தேர்வுக்குச் சென்றுவர பயணச் செலவுத் தொகையாக ரூ.5,000/- ஆண்டு தோறும் இம்மையத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு இம்மையத்தின் பயிற்சித்துறைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

### மிக்ஜாம் புயல் பேரிடரால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில்

# கழக மருத்துவ அணி சார்பில் சிறப்பு மருத்துவ முகாம்கள்!

## அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் உத்தரவுப்படி தி.மு.க. மருத்துவ அணி சார்பில் மிக்ஜாம் புயல் பேரிடரால் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும், 16.12.2023 சனிக்கிழமை அன்று "சிறப்பு மருத்துவ முகாம்கள்" நடைபெறும் என தி.மு.க. மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன், எம்.எல்.ஏ., அறிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் உத்தரவுப்படி, தி.மு.க. மருத்துவ அணிச் சார்பில், மிக்ஜாம் புயல் பேரிடர் பாதித்த சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும், 16.12.2023 சனிக்கிழமை அன்று "சிறப்பு மருத்துவ முகாம்கள்" நடைபெறுகிறது.

பொது மருத்துவ பரிசோதனைகள், காலரா தடுப்பு சிகிச்சைகள், டெட்டனஸ் தடுப்பூசிகள், பூஞ்சை தொற்று தடுப்பு சிகிச்சைகள், சேற்றுப்புண் தடுப்பு மருந்துகள், வயிற்றுப்போக்கு தடுப்பு சிகிச்சைகள், பருவ மழைக்கால காய்ச்சல், தொற்று மற்றும் தொற்றா நோய் சிகிச்சைகள் இம்முகாமில் வழங்கப்படும்.

கீழ்க்காணும் பொறுப்பாளர்கள் சிறப்பு மருத்துவ முகாம்களை ஒருங்கிணைப்பாளர்கள்.

| மாவட்டம் | சட்டமன்ற தொகுதி | பொறுப்பாளர் | ஒருங்கிணைப்பாளர் |
|---|---|---|---|
| சென்னை மேற்கு | சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி | கா.சீனிவாசன் | ஜீவகன் அய்யாநாதன் |
| | ஆயிரம் விளக்கு | க.மோ. ஸ்ரீராம் | |
| | அண்ணாநகர் | மா.நக்கீரன் | |
| சென்னை கிழக்கு | அம்பத்தூர் | அன்பு வேலுசாமி | ஜி.சாந்தகுமாரி |
| | கொளத்தூர் | எஸ்.ஷரவன் குமார் | |
| | வில்லிவாக்கம் | சி.என்.தருண்குமார் | |
| | திரு.வி.க நகர் | இ. பிரியதர்ஷினி | |
| | எழும்பூர் | சி.தயாபிரசாந்த் | |
| | துறைமுகம் | ஆர்.கார்த்திகேயன் | |
| சென்னை தெற்கு | சைதாப்பேட்டை | ஏ.துரைராஜ் | அனீஷ் |
| | வேளச்சேரி | விக்னேஷ் புஷ்பராஜ் | |
| | மதுரவாயல் | இரா.மு.முபாரக் | |
| | சோழிங்கநல்லூர் | கணேஷ் வேலுசாமி | |
| | விருகம்பாக்கம் | வே.ராஜாராஜன் | |
| சென்னை வடக்கு | பெரம்பூர் | எஸ்.கார்த்திக் | வி.கலைவாணன் |
| | ராயபுரம் | டி.சுரேந்தர் | |
| | டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் | என்.ஷாமிலி | |
| சென்னை தென் மேற்கு | மைலாப்பூர் | இ.ஜனனி | கோ.சக்தி விக்னேஷ் |
| | தியாகராயநகர் | பி.லட்சுமணன் | |
| சென்னை வடகிழக்கு | மாதவரம் | ஏ.நிவேதித்தா | து.கோபால் |
| | திருவொற்றியூர் | ம.கிஷோர் | |
| காஞ்சிபுரம் வடக்கு | திருப்போரூர் | பி.அதித்தியன் | டி.பி.செந்தில்குமார் |
| | ஆலந்தூர் | கே.ஷர்மிளா | |
| | பல்லாவரம் | என். கண்ணன் | |
| | தாம்பரம் | எம்.எஸ்.லலித்ராஜா தீபன் | |
| | செங்கல்பட்டு | எஸ்.சுஹாஷினி கர்ணன் | |
| காஞ்சிபுரம் தெற்கு | உத்திரமேரூர் | எம். சந்தியா | திவாகர் வாசுதேவன் |
| | செய்யூர் | சி. புகழேந்தி | |
| | காஞ்சிபுரம் | அன்புசெல்வன் | |
| | மதுராந்தகம் | எஸ்.அன்பழகன் | |
| திருவள்ளூர் மத்திய | ஆவடி | சி.கிஷோர் குமார் | ஜி.ராஜேஷ் குமார் |
| | பூந்தமல்லி | எஸ்.விஜயலட்சுமி | |
| திருவள்ளூர் மேற்கு | திருத்தணி | இரா.ராஜேந்திரன் | எ.சாம் ஜெபராஜ் |
| | திருவள்ளூர் | எஸ்.சதீஷ் மணிகண்டன் | |
| திருவள்ளூர் கிழக்கு | பொன்னேரி | வி. சூரிய பிரகாஷ் | என். வில்சன் |

பேரிடர் காலத்தில் தொடர் பணியாற்றிய தூய்மை பணியாளர்கள், சுகாதார பணியாளர்கள், அரசு மற்றும் அரசு சாரா களப்பணியாளர்கள், தன்னார்வலர்கள், பாதிப்படைந்த பகுதிகளை சேர்ந்த பொதுமக்களை முகாமிற்கு அழைத்து, பயனடையச் செய்ய வேண்டும் என மருத்துவ அணி நிர்வாகிகளை கேட்டுக்கொள்கிறோம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 27.11.2023

மருத்துவர் **எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ.,**
செயலாளர்,
தி.மு.க. மருத்துவ அணி.

### தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் சார்பில்

# பெண்களுக்கு எதிரான வன்முறையில் உலகளாவிய போக்குகள்!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - பி.கீதாஜீவன் - கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்பு!

சென்னை, டிச.13-

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் சார்பாக 11.12.2023 அன்று சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள தாஜ் கோரமண்டலில் "பெண்களுக்கு எதிரான வன்முறையில் உலகளாவிய போக்குகள்" என்ற தலைப்பின் கீழ் சர்வதேச மாநாடு நடத்தப்பட்டது. இதில் அமைச்சர்கள் மற்றும் கனிமொழி கருணாநிதி எம்.பி. உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இம்மாநாட்டில் 20 நாடுகள் மற்றும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து தேசிய மற்றும் சர்வதேச வல்லுநர்கள் மற்றும் பங்கேற்பாளர்கள், பேச்சாளர்கள் கலந்து கொண்டனர். சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சமூகநலம் - மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி.கீதா ஜீவன், பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் அரசு முதன்மை செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் தலைவர் திருமதி ஏ.எஸ்.குமரி, சமூக நல ஆணையர்/தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் உறுப்பினர் செயலர் திருமதி வே.அமுதவல்லி மற்றும் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டின் தொடக்கமாக, பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்களால் தமிழ்நாடு அரசின் மகளிர் குறித்த திட்டங்கள், தமிழ்நாடு மாநில மகளிர் ஆணைய செயல்பாடுகள் மற்றும் மீட்டெடுக்கப்பட்ட கொத்தடிமை தொழிலாளர்கள் குறித்த திட்ட விளக்கப்பட கண்காட்சி திறந்து வைக்கப்பட்டது.

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணைய தலைவர் திருமதி ஏ.எஸ்.குமரி அனைவரையும் வரவேற்று பேசினார். டாக்டர்.காளிராஜ், இயக்குநர், NCSRC, திருமதி. பிரியங்கா அனூன்சியா, உலக அழகி, சிங்கப்பூர், கிறிஸ்டோபர் ஹாட்ஷஸ், அமெரிக்க ஐக்கிய தூதரக ஜெனரல் மற்றும் திருமதி. கிளைர் வில்கின்சன், துணை தலைவர், IJM ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் அரசு முதன்மை செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சமூக நலத் துறையில், மகளிர் உரிமைகளை மேம்படுத்த செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விளக்கி கூறினார்.

சமூகநலம் - மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன், தமிழ்நாட்டில் பெண்களின் உரிமைகளை பாதுகாக்கும் திட்டங்கள் குறித்தும், சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி தமிழகத்தில் பெண்களின் உரிமை காக்கும் நடவடிக்கைகளை குறித்தும் பேசினார்கள். மேலும், பெண்ணே இதோ உன் சட்ட உரிமைகள் என்ற புத்தகம் சட்டத்துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. கனிமொழி கருணாநிதி அவர்கள் மகளிரின் உரிமைகள் குறித்து தமிழ்நாடு அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளைப் பற்றி விரிவாக பேசினார்.

பெண்களை முன்னேற்றுவதற்கான தமிழ்நாடு மாநில மகளிர் ஆணைய செயல் திட்டங்கள் என்ற புத்தகம் மாண்புமிகு சமூகநலம் - மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன் அவர்களால் வெளியிடப்பட்டது.

பின்னர், தினந்தோறும் உலக அளவில் பெண்கள் எதிர் கொள்ளும் வன்முறைகள், அதனை தடுக்கும் முறைகள், காரணங்கள் குறித்து வல்லுநர்களால் கருத்துரைகள் வழங்கப்பட்டது.

மேலும், சர்வதேச சட்ட வழிமுறைகள், சட்டங்களை அமல்படுத்துதல், சமூகத்தை பயன்படுத்தி குற்றங்களை குறைத்தல், அரசியல் மற்றும் வழிமுறைகளை வலுப்படுத்துதல், குற்றங்களை தடுப்பதற்கான சிறந்த நடைமுறைகள், திருநங்கையர்களை பாதிக்கும் குற்றங்கள், ஆன்லைன் மற்றும் சைபர் கிரைம் குற்றங்கள், தடுப்பதற்கான வழிமுறைகள், பாலியல் கடத்துதல், தடுப்பதற்கான வழிமுறைகள், பாலியல் வியாபாரம், குற்றங்களை தடுத்தல் ஆகியவை வல்லுநர்களால் கருத்துகள் பரிமாறப்பட்டது.

பின்னர் நிறைவு விழா, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் எம்.எஸ். ராமேஷ், திருமதி. பவானி சுப்பராயன், திருமதி. ஆர். என்.மஞ்சுளா ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது. மேலும் துறையில் சிறப்பாக பணியாற்றிய பெண்களுக்கு விருதுகள் வழங்கி பாராட்டப்பட்டது. தேசிய அளவில், மாநில அளவில் மகளிர் அதிகாரம் அளித்த தில் சாதனை புரிந்தவர்கள் கௌரவிக்கப்பட்டனர். இவ்விழாவில் மாநில மனித உரிமை ஆணைய தலைவர், மாநில சட்ட நிறுவன இயக்குநர், கூடுதல் அட்வகேட் ஜெனரல், வழக்கறிஞர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (12.12.2023) பெருநகர சென்னை மாநகராட்சி, 6வது மண்டலம், 68வது வார்டு, 70 அடி சாலை, சிவ இளங்கோ சாலையில் மிக்ஜாம் புயல் கனமழையால் பாதிக்கப்பட்ட கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் 1000 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் மற்றும் நிதியுதவிகள் வழங்கினார். இந்நிகழ்வின் போது ஐ.சி.எப்.முரளி, பி.டி.சி.ரவி மற்றும் மாமன்ற உறுப்பினர் திருமதி.அமுதா ஆகியோர் கலந்து கொண்டனர்.



கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் திருத்தணியில் உள்ள கே தளபதி விநாயகம் கல்லூரி விளையாட்டுத் திடலில் மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர் பி.எல்.ஆனந்தன் ஏற்பாட்டில் நடைபெற்ற மாபெரும் கைப்பந்து போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ ஊக்கத்தொகை, கேடயம், சான்றிதழ் வழங்கினார். உடன் ஒன்றிய கழக செயலாளர் ஆர்த்தி ரவி, மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் சித்திக் அலி, மாவட்ட விளையாட்டு அணி துணை அமைப்பாளர்கள் ஜெ.கலைவாணன், என்.ஆர்.ஜெயேந்திரன், கே.ஈ.சபரிகுமார் உள்பட பலர் உள்ளனர்.



மிக்ஜாம் புயல் – கன மழையைத் தொடர்ந்து கழக அரசு பல்வேறு நிவாரணப் பணிகளை இடைவிடாது மேற்கொண்டு வருகிறது. அரசின் இந்த முயற்சிக்கு துணை நிற்கிற விதமாக, நிறுவனங்கள் – இயக்கங்கள் – தனிநபர்கள் என பலரும் முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதிக்கு நிதியளித்து வருகின்றனர். இந்நிலையில், நேற்று முன்தினம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, நடிகர் சிவகார்த்திகேயன் சந்தித்து ரூ.10 லட்சத்துக்கான காசோலையை முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்காக வழங்கினார்.



சென்னை காஞ்சிபுரம் திருவள்ளூர் செங்கல்பட்டு மாவட்டங்களில் கடந்த வாரம் பெய்த கன மழையால் ஏற்பட்ட பாதிப்புகளை கழக அரசு சீரமைத்து வருகிறது. இந்நிலையில், தமிழ்நாடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு ரூ.10 லட்சத்துக்கான காசோலையை, ஈரோடு அன்னை இன்ஃப்ரா ப்ராஜக்ட்ஸின் நிறுவனர் எஸ்.அசோக்குமார் , அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார். கழக இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் ஈரோடு கே.ஈ.பிரகாஷ் உடன் உள்ளார்.



சென்னை உள்ளிட்ட நான்கு மாவட்டங்களில் மிக்ஜாம் புயல் மற்றும் கனமழை ஏற்படுத்திய பாதிப்பினைச் சீர்செய்வதோடு, பொதுமக்களுக்கு நிவாரண உதவிகளையும் கழக அரசு வழங்கி வருகிறது. அரசின் இந்தப்பணிகளுக்கு துணை நிற்கும் விதமாக, முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதிக்கு எம்.எஸ்.எம். மூவி டிரேடர்ஸ் சார்பில் ரூ.5 லட்சத்திற்கான காசோலையை, தயாரிப்பாளர் செண்பக மூர்த்தி, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார்.



மிக்ஜாம் புயல் கன மழை வெள்ளத்தைத் தொடர்ந்து கழக அரசு மேற்கொண்டு வரும் சீரியப் பணிகளால், இயல்பு நிலை திரும்பி வருகிறது. அரசுக்கு பக்கபலமாகத் துணை நின்றிடும் வகையில், தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணியின் மாநிலத் துணைச் செயலாளர் சி.எச்.சேகர் , ரூ.2 லட்சத்துக்கான காசோலையை 'முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார்.



புயல் கன மழையைத் தொடர்ந்து நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வரும் தமிழ்நாடு அரசின் பணிகளுக்கு மேலும் வலுச் சேர்க்கின்ற வகையில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு ஐ.என்.எம்.ஸ்டுடியோஸ் நிறுவனரும், திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் நகர்மன்றத் தலைவர் பாத்திமா பஷீரா அவர்களின் புதல்வருமான முகமது சாதிக் ரூ.1 லட்சத்துக்கான காசோலையை, நேற்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார். தயாநிதி மாறன் எம்.பி. உடன் உள்ளார்.



தி.மு.கழக மகளிரணித் தலைவர் – தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் – செயலர் விஜயா தாயன்பன், கழக அரசின் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக ரூ.1 லட்சத்துக்கான காசோலையை 'முதலமைச்சரின் பொது நிவாரண நிதி'க்கு நேற்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார்.

## சைதை - அடையாறு ஆற்றங்கரையோரம் வசிக்கும்

# 40,000 குடும்பங்களுக்கு நிவாரண - உதவிகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்!

சென்னை, டிச.13-

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, சைதை தொகுதி அடையாற்றங்கரையோரம் வசிக்கும் 40,000 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளை அமைச்சர் மா.சுப்பிரமணி யன் வழங்கினார்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மிக்ஜாம் புயலினால் கடுமையாக பாதிக்கப்பட்ட சென்னை - சைதாப்பேட்டை தொகுதி, அடையாற்றங்கரையோரம் வசிக்கும் சைதை மேற்கு மற்றும் கிழக்கு பகுதிகளைச் சார்ந்த 40,000 குடும்பங்களுக்கு உணவுப்பொருட்கள், நிவாரணப் பொருட்கள், நடமாடும் மருத்துவ வாகனங்கள், மருத்துவ முகாம்கள் உள்ளிட்டவற்றை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரும் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் கடந்த டிசம்பர் 5ஆம் தேதி முதல் அந்தந்த பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரடியாக சென்று பணியாற்றி வருகிறார்.

அந்த வகையில் சைதை மேற்கு மற்றும் கிழக்கு பகுதிகளைச் சார்ந்த குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கிய விவரம் பின்வருவமாறு.

### சைதை மேற்கு பகுதி

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட சைதை மேற்கு பகுதியில் 09.12.2023 அன்று திடீர் நகர், சலைவையாளர் காலனி, கோதாமேடு பகுதிகள் மற்றும் சாமியார் தோட்டம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் 4000 குடும்பங்களுக்கும், 10.12.2023 அன்று வ.உ.சி தெரு, துரைசாமி தோட்டம், கொத்தவால் சாவடி தெரு, குடிசை மாற்று வாரிய குடியிருப்பு ஆகிய பகுதிகளில் வசிக்கும் 1600 குடும்பங்களுக்கும், சாரதி நகரில் 1100 குடும்பங் களுக்கும், ஜோதி ராமலிங்கம் நகர், முத்துரங்கம் பிளாக்கில் 1750 குடும்பங்களுக்கும், 12.12.2023 அன்று சேகர் நகர், வி.எஸ்.எம். கார்டன், வ.உ.சி பிளாக், பாரதி பிளாக், வீதி மாரியம்மன் கோவில் தெருக்களில் வசிக்கும் 3750 குடும்பங்களுக்கும், கட்ட பொம்மன் பிளாக், ஆர்.வி நகர், அண்ணாமலை நகரில் வசிக்கும் 4900 குடும்பங்களுக்கும் ஆக மொத்தம் சுமார் 17,100 வீடுதோறும் சென்று தலா 5 கிலோ அரிசி, பெட்சீட், பால், பிஸ்கட், பிரட் மற்றும் தண்ணீர் பாட்டில்கள் போன்ற நிவாரணப் பணிகள் வழங்கப்பட்டுள்ளது.

### சைதை கிழக்கு பகுதி

சைதை கிழக்கு பகுதியில் 08.12.2023 அன்று சித்ரா நகரில் வசிக்கும் 1000 குடும்பங்களுக்கும், ஸ்ரீநகர், சத்யாநகரில் வசிக்கும் 800 குடும்பங்களுக்கும், சின்னமலை ஆரோக்கியமாதா குடியிருப்வில் வசிக்கும் 600 குடும்பங்களுக்கும், 09.12.2023 அன்று நெருப்புமேடு, செட்டித்தோட்டம், விநாயகபுரம், ஜோதியம்மாள் தோட்டம் ஆகிய பகுதிகளில் 2500 குடும்பங்களுக்கும், 10.12.2023 'அன்று லேபர்காலனி 1 முதல் 7 தெருக்கள், நாகிரெட்டி தோட்டம், பார்த்தசாரதி கோவில்தெரு, அருளாயம் மன்பேட்டை ஆகிய பகுதிகளில் வசிக்கும் சுமார் 4000 குடும்பங்களுக்கும், 11.12.2023 அன்று மடுவின் கரை, மசூதி காலனி, நரசிங்கபுரம், ஐந்து பர்லாங் சாலை, சாத்தானி பேட்டை, மாந்தோட்டம், அங்காளம்மன்கோவில் தெரு, செங்கேணி யம் மன்கோவில் 1வது மற்றும் 2வது தெரு, உமாபதி தோட்டம், பாரதிநகர், கன்னிகாபுரம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் சுமார் 5000 குடும்பங்களுக்கும், உணவு இடைவேளைக்குப் பிறகு அப்பாவு நகர், ரயில்வே பார்டர் தெரு, காந்திபுரம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் 2500 குடும்பங்கள் ஆக மொத்தம் சுமார் 15,000 வீடு வீடாக சென்று தலா 5 கிலோ அரிசி, பெட்சீட், பால், பிஸ்கட், பிரட் மற்றும் தண்ணீர் பாட்டில்கள் போன்ற நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இது வரை சைதைப்பேட்டை சட்டமன்ற தொகுதியில் சைதை மேற்கு மற்றும் சைதை கிழக்கு பகுதியில் 40,000 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் வழங்கியுள்ளார்.

இந்நிகழ்வுகளில் உயர் கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மகேஷ்குமார், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்க பாண்டியன், மண்டலக்குழுத் தலைவர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் வழக்கறிஞர் எம்.ஸ்ரீராம், த.மோகன் குமார், த.சுப்பிரமணி மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.





தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரும் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளருமான மா.சுப்பிரமணியன் நேற்று (12.12.2023) மிக்ஜாம் புயலினால் கடுமையாக பாதிக்கப்பட்ட சென்னைசைதாப்பேட்டை தொகுதி, அடையாற்றங்கரையோரம் வசிக்கும் சைதை மேற்கு பகுதியில் சேகர் நகர். வி.எஸ்.எம். கார்டன். வ.உ.சி பிளாக். பாரதி பிளாக். வீதி மாரியம்மன் கோவில் தெருக்களில் வசிக்கும் 4000 குடும்பங்களுக்கு தலா 5 கிலோ அரிசி, பெட்சீட், பால், பிஸ்கட், பிரட் மற்றும் தண்ணீர் பாட்டில்கள் போன்ற நிவாரணப் பொருட்களை வழங்கினார். இந்நிகழ்வில் மண்டலக்குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மற்றும் மாமன்ற உறுப்பினர் த.சுப்பிரமணி உள்ளிட்ட திமு கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## கொளத்தூர் - துறைமுகம் - எழும்பூர் தொகுதிகளில்

# 7,500 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்!

சென்னை, டிச.13-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி, நேற்று (12.12.2023) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு அவர்கள் மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் 3,000 குடும்பங்களுக்கும், துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் 3,500 குடும்பங் களுக்கும், எழும்பூர் சட்டமன்ற தொகுதியில் 1,000 குடும்பங்களுக்கும் ஆகமொத்தம் 7,500 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் மற்றும் உதவித்தொகையினை வழங்கினார்.

மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் உணவு மற்றும் நிவாரண உதவிகள் வழங்குதல், நோய்தொற்று பரவாமல் தடுக்க மருத்துவ முகாம்கள் அமைத்தல் போன்ற பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் நேற்று (12.12.2023) எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி, 58வது வார்டில் மிக்ஜாம் புயல் கனமழையால் பாதிக்கப்பட்ட நடேசன் நகர், காலத்தியப்பன் தெரு, ஏ.பி. சாலை, வேப்பேரி பிரதான சாலை ஆகிய பகுதிகளில் வசிக்கும் 500 குடும்பங்களுக்கும் மற்றும் பெரியமேடு நேவல் மருத்துவமனை சாலையில் வசிக்கும் 500 குடும்பங்களுக்கும் நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, சென்னை, இராஜா அண்ணாமலை மன்றத்தில் துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாநகராட்சி 59வது வார்டு, டி.என்.பி. எஸ்.சி சாலை, நாராயணப்பா சாலை, என்.எஸ்.சி.போஸ் சாலை, தேவராஜ் முதலியார் தெரு, மெமோரியல் ஹால் ஆகிய பகுதிகளில் வசிக்கும் 3,500 குடும்பங் களுக்கும், கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாநகராட்சி 64வது வார்டு, ஜெயந்தி நகரைச் சேர்ந்த 1,000 குடும்பங்களுக்கும், 66வது வார்டை சேர்ந்த ஸ்ரீ நகர் காலனியில் 1,000 குடும்பங்களுக்கும், 68வது வார்டை சேர்ந்த பெரியார் நகர் மற்றும் 70 அடி சாலை ஆகிய பகுதிகளில் வசிக்கும் 1,000 குடும்பங்களுக்கும் நிவாரணப் பொருட்கள் மற்றும் நிதி உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.ரவிச்சந்திரன், மண்டலக் குழுத்தலைவர் பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர் திருமதி.ராஜேஸ்வரி ஸ்ரீதர், நாகராஜன், திருமதி யோகப்ரியா, திருமதி அமுதா மற்றும் சுதாகர், பாபு, முரளி, ராஜசேகர், ஜெகதீஷ், பிரபாகரன், ஐ.சி.எப்.முரளி, பி.டி.சி.ரவி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அமைச்சர் மா.மதிவேந்தன் தலைமையில்

# வனத் துறை வளர்ச்சிப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

சென்னை, டிச. 13 -

வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தலைமையில் "வனப் பாது காப்பிற்காக வனத்துறை மூலம் மேற்கொள்ளப் பட்டு வரும் வளர்ச்சி பணிகள் முன்னேற்றம்" குறித்தான மாதாந்திர ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தலைமையில் நேற்று (12.12.2023) வனப்பாது காப்பிற்காக வனத்துறை மூலம் மேற்கொள்ளப் பட்டு வரும் வளர்ச்சி பணிகள் முன்னேற்றம் குறித்தான மாதாந்திர ஆய்வுக் கூட்டம் கிண்டி முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது.

வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் முன்னிலையில் துறை ரீதியான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. வனத்துறையின் உயர் அலுவலர்கள் வனத்துறை மூலம் செயல்படுத்தப்படும் முன்னேற்ற அறிக்கையினை அமைச்சர் அவர்களுக்கு விளக்கிக் கூறினார்கள்.

இவ்வாய்வு கூட்டத்தில் கலந்து கொண்டு பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் மற்றும் பாதுகாப்பு பணிகளை ஆய்வு செய்த வனத்துறை அமைச்சர் அவர்கள், வன உயிரினங்களால் ஏற்படும் பயிர் சேதங்களுக்கு விரைந்து இழப்பீடு வழங்கும்படி அறிவுரைகள் வழங்கினார். மனித - விலங்கு உயிரின மோதல்களைத் தடுக்கத் தேவையான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி சம்பந்தப்பட்ட அலுவலர்களைக் கேட்டுக் கொண்டார்.

மேலும், நிலுவையில் உள்ள "முதல்வரின் முகவரி" சார்ந்த மனுக்கள் மீது துறை சார்ந்த அலுவலர்கள் அனைவரும் தனிக்கவனம் செலுத்தி விரைந்து முடிக்குமாறும் வனத்துறையின் வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும் தொய்வின்றி செயல்பட அனைத்து நிலை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களை வனத்துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

இவ்வாய்வு கூட்டத்தில் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்) சுப்ரத் முஹ பத்ர முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வன உயிரின காப்பாளர்

ஸ்ரீனிவாஸ் ரா. ரெட்டி, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (நிர்வாகம்) தெபாசிஸ் ஜானா, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (புலிகள் திட்டம்) ராகேஷ்குமார் டோக்ரா, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனப்பாதுகாப்புச்சட்டம்) யோகேஷ் சிங், கூடுதல் முதன்மை தலைமை வனப் பாது காவலர் (வன உயிரினம்) நாகநாதன், இணை இயக்குநர் (விளம்பரம்) த. தமிழ்மொழி அமுது மற்றும் அனைத்து மண்டல வனப்பாதுகாவலர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் சட்டமன்ற தொகுதி 58 அ வட்டம், சூளை அவதன பாப்பையர் சாலையில் புயல் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண பொருட்களை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்பி.வழங்கினர். மாமன்ற உறுப்பினர் ராஜேஸ்வரி ஸ்ரீதர், உள்ளாட்சிப் பிரதிநிதிகளை சேர்ந்த சுதாகர், பாபு உள்ளிட்டோர் உடன் உள்ளனர்.

# 'மிக்ஜாம்' புயல் ஏற்படுத்திய பாதிப்பு: தொடரும் கழகத்தினர் நிவாரண உதவிகள்!





தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தலின்படி, வேளச்சேரியில் புயல் – பெரும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 177–வது வார்டில் மாமன்ற உறுப்பினர் வேளச்சேரி பி.மணிமாறன் ஏற்பாட்டில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு 5000 குடும்பங்களுக்கு அரிசி, கோதுமை, பெட்ஷீட், பிஸ்கட், பிரட் உள்ளிட்ட பொருட்களை வழங்கினார். உடன் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, வேளச்சேரி மேற்குப் பகுதிச் செயலாளர் அரிமா சு.சேகர் உள்ளிட்ட, மாவட்ட, பகுதி கழக நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், முன்னணியினர் கலந்து கொண்டனர்.



மிக்ஜாம் புயல் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்ட திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி 7வது வட்டம் ராஜாஜி நகரில் மொத்தம் உள்ள 36 தெருவில் வசிக்கும் 3500 குடும்பங்களுக்கு கழக மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. தலைமையில் மீட்புப் பணிகளை துரிதப்படுத்தவும், நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் சிறப்பு பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர்கள் எஸ்.எஸ்.சிவசங்கர், மா.மதிவேந்தன் நாமக்கல் மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.என்.ராஜேஷ் குமார் எம்.பி., நாமக்கல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் ஆகியோர் மக்களுக்குத் தேவையான அரிசி, இருவகை பருப்பு, எண்ணெய் என 25 வகையான மளிகைப் பொருட்கள் குடிநீர், பிரட், பெட்ஷீட் போன்ற அத்தியாவசிய பொருட்களை வழங்கினர். இதில்திருவொற்றியூர் கிழக்கு பகுதி கழக செயலாளர், மண்டல குழு தலைவர் தி.மு. தனியரசு, வட்டக் கழக செயலாளர்கள் கே.கார்த்திகேயன், கே.பி.சொக்கலிங்கம் எம்.சி., மாவட்ட பிரதிநிதி எஸ்.மகேந்திரன், எம்.கார்த்திக், உசிலைவேந்தன் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், பொதுமக்கள்கள் கலந்து கொண்டனர்.




எழும்பூர் தொகுதி, 99 (அ) வட்டத்தைச் சேர்ந்த ஓசான்குளம் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பைச் சேர்ந்த 300 குடும்பங்களுக்கு, தமிழ்நாடு செஞ்சிலுவை சங்கத்துடன் இணைந்து எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் நிவாரண உதவிகளை வழங்கினார்.



சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 72 வது வட்டத்தில் கடந்த வாரம் பெய்த மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கழக துணை அமைப்பு செயலாளர் திரு.வி.க நகர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி நிவாரண பொருட்களை வழங்கினார். உடன் வழக்கறிஞர் சரவணன் வட்ட கழக நிர்வாகிகள் இருந்தனர்.



திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட எல்லாபுரம் ஒன்றியத்தில் மழையால் பாதிக்கப்பட்ட பழங்குடியினர் மக்கள் மற்றும் பொதுமக்களுக்கு தாமரைப்பாக்கத்தில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி அரிசி எண்ணெய் உள்ளிட்ட நிவாரண பொருட்களை வழங்கினார். அருகில் ஒன்றிய கழக செயலாளர் கோடுவெளி தங்கம்முரளி, மாவட்டத் துணைச் செயலாளர் வெங்கல் வி.ஜெ.சீனிவாசன், முன்னாள் மாவட்ட நிர்வாகி கொடுவெளி எம்.குமார், தாசில்தார் சுரேஷ்குமார், வருவாய் அலுவலர் சரவணன், வட்டார வளர்ச்சி அலுவலர் சத்தியமூர்த்தி, ஊராட்சி மன்ற தலைவர் கீதா துளசிராமன், ஒன்றிய கழக நிர்வாகிகள் டி.பாஸ்கர், பி.ஜி.முனுசாமி, வெங்கல் ஜி.பாஸ்கர், இ.சுப்பிரமணி, ஆர்.லோகநாதன், வி.நாகலிங்கம், உமாசீனிவசன், நாராயணசாமி, ஏ.சுப்பிரமணி, எஸ்.ராகு, வெங்கடேசன் தங்கராஜ், கண்ணன், அச்சுதன், எம்.சரத்குமார், என்.எம். விஜயகுமார், செம்மேடு வி.செல்வம், தமிழமூர்த்தி, சத்தியா, ராஜேஷ், ஜெகன், கே.கணேசன், எம்.ரஞ்சித், உள்பட பலர் உள்ளனர்.

'இம்ப்காப்ஸ்' சார்பாக மிக்ஜாம் புயலினால்

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு 50 வாகனங்களில் நிலவேம்பு குடிநீர்!

**தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்திற்கு ஒன்றிய அரசின் "Best Performing State" விருது- அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல் !**

சென்னை, டிச.13-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன் நேற்று (12.12.2023) மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இம்ப்காப்ஸ் நிறுவனத்தின் சார்பில் நிலவேம்பு குடிநீர் மற்றும் நிலவேம்பு குடிநீர் பாக்கெட்கள் 50 ஆட்டோக்கள் மூலம் சென்னை முழுவதும் பொது மக்களுக்கு வழங்குவதற்கான நிகழ்வினை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட சென்னை பொது பொதுமக்களுக்கு 50 ஆட்டோக்களில் நிலவேம்பு குடிநீர் வழங்குதல்

இந்திய மருத்துவர்கள் மற்றும் கூட்டுறவு மருந்து செய் நிலையம் பண்டகசாலை என்பது இம்ப்காப்ஸ் (IMPCOPS) ஆகும். 1944 ஆம் ஆண்டு சென்னை திருவான்மியூரில் தொடங்கப்பட்ட இம்ப்காப்ஸ் என்கின்ற அமைப்பில் ஏறத்தாழ 17,500 பதிவு பெற்ற மருத்துவர்களை கொண்டிருக்கின்ற மிகப்பெரிய நிறுவனமாகும். இதில் 1300 வகையான சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஹோமியோபதி போன்ற பல்வேறு மருந்துகள் தயாரிக்கப்பட்டு வருகின்றது. இந்த அமைப்பின் சார்பில் புயல் மற்றும் வெள்ள பாதிப்புகளுக்குள்ளான மக்களுக்கு உதவுகின்ற வகையில் 50 ஆட்டோக்களில் நிலவேம்பு

குடிநீர், இலவச நிலவேம்பு குடிநீர் பாக்கெட்டுகளும் விநியோகிக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நேற்று மக்கள் நல்வாழ்வுத் துறையின் அனைத்து அமைப்புகளும், இந்த பணியில் தங்களை அர்ப்பணித்துக்கொண்டு செயலாற்றிக் கொண்டிருக்கின்றனர். குறிப்பாக வெள்ளம் அதிகம் பாதித்த தென் சென்னை பகுதிகளில், சைதாப்பேட்டை அடையாற்றங்கரையோரம் இருக்கின்ற குடியிருப்பு தாரர்களுக்கு, விருகம்பாக்கம் அடையாற்றங்கரையோரம் இருக்கின்ற குடியிருப்புதாரர்களுக்கு, வேளச்சேரியில் அடையாற்றங்கரையோரம் இருக்கின்ற குடியிருப்புதாரர்களுக்கு, சோழிங்கநல்லூரில் செங்கல்பட்டு மாவட்டத்தில் இருந்து 60க்கும் மேற்பட்ட ஏரிகளில் இருந்து திறந்து விடப்பட்ட மழைநீரால் பாதிக்கப்பட்ட பள்ளிக்கரனை, மடிப்பாக்கம், உள்ளகரம், புழுதிவாக்கம் போன்ற பல்வேறு பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, மதுரவாயல் பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் 50 ஆட்டோக்களின் மூலம் நிலவேம்பு குடிநீர், நிலவேம்பு குடிநீர் பாக்கெட்டுகள் விநியோக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

சைதாப்பேட்டையில் 10 ஆட்டோக்களும், விருகம்பாக்கத்திற்கு 10 ஆட்டோக்களும், சோழிங்கநல்லூர், வேளச்சேரி, மதுரவாயல் ஆகிய பகுதிகளுக்கு தலா 10 ஆட்டோக்களிலும் நிலவேம்பு குடிநீர் விநியோக்கும் பணியும், நிலவேம்பு பாக்கெட் விநியோக்கும் பணிகளும் தற்போது நடைபெற்று வருகிறது.

மேலும் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை சார்பில் தமிழ்நாட்டில் 1542 சித்த மருத்துவ மையங்கள் இருக்கின்றது. இதில் 772 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், 770 வட்டார மருத்தவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகள், மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள் ஆக மொத்தம் 1542 மருத்துவமனைகளில் இந்த நிலவேம்பு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அதோடுமட்டுமல்லாமல் இன்று அனைத்து மருத்துவமனைகளிலும் மழைக்கால நோய்களான சளி, காய்ச்சல், இருமல், தொண்டை வலி, சேற்றுப்புண் போன்ற பல்வேறு உபாதைகளுக்கு சித்த மருத்துவம் என்கின்ற வகையில் தாளிசாதி சூரணம், தாளிசாதி வடகம், தயிர்சுண்டி சூரணம், ஆடாதொடை மணப்பாகு, வங்கவிரணக்களிம்பு ஆகிய மருந்துகள் அனைத்து மருத்துவமனைகளிலும் இருப்பு வைக்கப்பட்டு சிகிச்சைக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆக இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறையும், இம்ப்காம்ப்ஸ் நிறுவனமும் இணைந்து மழைக்கால நோய்களுக்கு சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி போன்ற மருந்துகளை தருகின்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றன. மேலும் 1542 மருத்துவமனைகளில் உள்ள சித்த மருத்துவ மையங்களுக்கு ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் மருந்துகள் விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம்

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் தொடங்கப்பட்ட நாள்முதல் தற்போது அதன் செயல்பாடுகள் என்பது அனைவராலும் கூர்ந்து கவனிக்கும் ஒன்றாக இருக்கின்றது. அந்த அமைப்பின் சார்பில் எச்ஐவி மற்றும் எய்ட்ஸ் தடுக்கும் சேவைகள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் தொடங்கப்பட்டது 1994ஆம் ஆண்டு ஆகும். அது தொடங்கப்பட்ட நாள்முதல் மிகச்சிறந்த சேவைகளுக்காக ஒன்றிய அரசின் சார்பில் விருதுகள் வழங்கப்பட்டு வந்தன. ஆனால் இந்த முறை ஒன்றிய அரசின் சார்பில் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்திற்கு Best Performing State என்கின்ற விருது ஒன்றிய அரசு அறிவித்து வழங்கியிருக்கிறார்கள். இன்னும் இரண்டு நாட்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் காண்பித்து சம்பந்தபட்ட அலுவலர்கள் வாழ்த்து பெற இருக்கிறார்கள் என்று மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை ஆணையர் திருமதி. மைதிலி கே.ராஜேந்திரன், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்க திட்ட இயக்குனர் ஹரிஹரன், மண்டல குழுத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, இம்ப்காப்ஸ் மருத்துவர்கள் கண்ணன், காதர் முகைதீன், சுரேஷ் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

மாநகராட்சியில் 4-வது மண்டலத்திற்குட்பட்ட 7 வார்டுகளில்

# கன மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார்!

சென்னை, டிச. 13 -

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 4 பகுதிகளில் உள்ள 7 வார்டுகளிலும் "மிக்ஜாம்" புயல் காரணமாக ஏற்பட்ட கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை, கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் வழங்கினார்கள்.

மிக்ஜாம் புயல் காரணமாக, தொடர்ந்து பெய்த கனமழையினால் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்கள் பெரிதும் பாதிப்படைந்தது. முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின்படி. கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 4 பகுதிகளில் உள்ள வார்டு எண்.34, 35, 36, 37, 44, 45 மற்றும் 46 ஆகிய வார்டுகளிலும் "மிக்ஜாம்" புயல் காரணமாக ஏற்பட்ட கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை, தொடர்ந்து 3வது நாளாக நேற்றும் (12.12.2023) வழங்கினார்.

ஒரு நாளைக்கு ஒரு வார்டில் 1000 குடும்பங்களுக்கு என மொத்தம் 7000 குடும்பங்களுக்கு வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. 10.12.2023 அன்று நிவரணப் பொருட்கள் வழங்கும் பணி தொடங்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதன்படி 3வது நாளாக நேற்றும் நிவாரணப் பொருட்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இது வரை ஒவ்வொரு வார்டுகளிலும் 3000 குடும்பங்கள் வீதம் 7 வார்டுகளில் 21,000 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி, இதுவரை 3000 அரிசி மூட்டைகள் (5கிலோ பேக்) 3000 ரவை பாக்கெட்டுகள், 3000 ஆட்டா பாக்கெட்டுகள், 3000 சேலைகள், 3000 லுங்கிகள், 3000 போர்வைகள் மற்றும் 3000 வாட்டர் பாட்டில் ஆகிய அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய தொகுப்பு நிவாரணப் பொருட்களை வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் பெரம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர் உட்பட அந்தந்த பகுதி மாமன்ற உறுப்பினர்கள், பகுதிச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

'மிக்ஜாம் புயல்' ஏற்படுத்திய பாதிப்பு: தொடரும் கழகத்தினர் நிவாரண உதவிகள்!



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 பகுதிகளில் மிக்ஜாம் புயல் கனமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு குரோம்பேட்டை ஜி.எஸ்.டி ரோடு அருகில் அரிசி போர்வை பாய் தலையணை பிஸ்கட் போன்ற நலத்திட்ட உதவி பொருட்களை பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி ஏற்பாட்டிலும் தலைமையிலும் உயர் கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி அவர்கள் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் மண்டலத் தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, பகுதி செயலாளர் இ.எஸ்.பெர்னார்ட் , மாமன்ற ரேணுகாதேவி மற்றும் வட்ட கழக செயலாளர் பரமசிவம் கருணாமூர்த்தி உடன் இருந்தனர்.



காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியம், நடுவீரப்பட்டு ஊராட்சியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நிவாரண உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வபெருந்தகை, மாவட்ட வருவாய் அலுவலர் செ.வெங்கடேஷ், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன் ஆகியோர் உள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி தொகுதிக்குட்பட்ட திருவேற்காடு நகராட்சி சுந்தர்சோழவரம், சண்முகா நகர பகுதியில் மழை மழையால் பாதிக்கப்பட்ட 1000 நபர்களுக்கு வெள்ள நிவாரண பொருட்களை முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சாமு. நாசர் எம்.எல்.ஏ வழங்கினார் உடன் நகராட்சி மன்ற தலைவர் என்.இ.கே.மூர்த்தி, கடலூர் மாநகர செயலாளர் கே.எஸ்.ராஜா, ஆவடி மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ் கவுன்சிலர் எஸ்.சங்கர், சாந்திராஜா, வட்ட செயலாளர் குமார், பன்னீர் செல்வம், நிர்வாகிகள் குமாரசாமி, சாது, என்.ராஜி, உள்பட பலர் உள்ளனர்.



திருவாலங்காடு கிழக்கு ஒன்றியம் லட்சுமி விலாசபுரம், குப்பம் கண்டிகை ஊராட்சிகளில் கொசஸ் தலை ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள தரைப்பாலம் நிஜாம் புயல் மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டதையடுத்து திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் துறை அலுவலர்கள் உடன் சென்று பார்வையிட்டு பாலத்தினை சீரமைத்து மக்கள் பயன்பாட்டிற்கு விரைந்து வழங்கிட வேண்டுமென அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். உடன் திருவாலங்காடு கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ். மகாலிங்கம், ஒன்றிய செயலாளர் மோ. ரமேஷ் , மாவட்ட குழு உறுப்பினர் சரஸ்வதி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செல்வகுமார், காளியம்மாள், பொறியாளர் பாலகிருஷ்ணன்,மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் களாம் பாக்கம் எம். பன்னீர்செல்வம், வி.எஸ். நேதாஜி, ஒன்றிய கழக நிர்வாகிகள் சண்முகம், நீலாவதி சீனிவாசன், செந்தில்குமார், ஜெகதீசன், வழக்கறிஞர் தினகரன், காஞ்சிப்பாடி பி.சரவணன், கிளை கழக நிர்வாகிகள் ஸ்ரீதர், பூபாலன், தாஸ், முனுசாமி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



திரு.வி.க நகர் சட்டமன்ற தொகுதி 71வது வார்டில் அமைந்துள்ள மேட்டுப்பாளையம் அருந்ததியர் நகர் பகுதியில் உள்ள கோவிந்தன் தெரு, செங்கன் தெரு, கந்தன் தெரு, தாசரி தெரு, பங்காரு தெரு, எலிகன் தெரு, ரங்கப்பன் தெரு, பெரியபாளையத்தம்மன் கோயில் தெரு, போலேரி அம்மன் கோயில் தெரு, உள்ளிட்ட அனைத்து தெருக்களிலும் மழையினால் பாதிக்கப்பட்டு அதன் மூலம் ஏற்பட்ட கழிவுகளை சுத்தம்செய்யும் பணிகளை மாநகராட்சி தூய்மைபணியாளர்களை கொண்டு திரு.வி.க நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம்கவி தூய்மை செய்யும் பணியினை மேற்கொண்டார். மேலும் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார். மாமன்ற உறுப்பினர் புனிதவதி எத்திராசன், வட்டச்செயலாளர் : மா.ருத்ரமூர்த்தி சென்னை மாநகராட்சி அதிகாரி தினேஷ் தூய்மை பணி மேற்பார்வையாளர் மற்றும் அதிகாரிகள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பில்.அதன் மாநிலத் தலைவர் ரெ.தங்கம் ஏற்பாட்டில். சென்னையில் பெரும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெரும்பாக்கம், கண்ணகி நகர், துரைப்பாக்கம், மேடவாக்கம் பள்ளிக்கரணை பகுதி வாழ் மாற்றுத்திறனாளிகளுக்கு நிவாரணப் பொருட்களை சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ் வழங்கியதுடன்,தனது சொந்த நிதியில் பங்கேற்ற அனைவருக்கும் ரூ.500/ வழங்கினார். உடன் சங்க மாநில பொருளாளர் டாக்டர் எஸ்.நசீம்.மேடவாக்கம் எஸ்.பூபதி.டாக்டர் அம்பிகாபூபதி.கழக நிர்வாகி வேதகிரி. சங்க மக்கள் தொடர்பு அலுவலர் வீர.சரவணன். ஆர்.சீனிவாசன். கி.பத்மநாபன். தாமலிங்கம்.விவேக். பிடிசி. ரமேஷ். கோதண்டராமன் பங்கேற்றனர்.



நேற்று (12.12.2023) தமிழ்நாட்டிற்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்திய மிக்ஜாம் புயல் வெள்ளச் சேதங்களை ஒன்றிய குழு இணை இயக்குநர் டாக்டர் எ.கே. சிவ் கேர், துணை இயக்குநர் பாவ்யா பாண்டே, தலைமைப் பொறியாளர் எஸ்.விஜயகுமார் ஆகியோர் ஸ்டீபன் ஸன் பாலம் பகுதியில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். ஆய்வின் போது பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

### காவிரி – வைகை – குண்டாறு

# இணைப்புக்கு விரிவான திட்ட அறிக்கை தயார்!

## மாநிலங்களவையில் டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்விக்கு அமைச்சர் பதில்!

புதுடெல்லி, டிச. 13 - உள்நாட்டு ஆறுகள் மற்றும் மாநிலத்துக்குள்ளேயே பாயும் ஆறுகளை இணைக்க மத்திய அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றி மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி., டாக்டர் கனிமொழி என். வி. என். சோமு கேள்வி எழுப்பியிருந்தார்.



இதற்கு மத்திய ஜல் சக்தி துறை இணையமைச்சர் பிஷ்வேஸ்வர்டு அளித்த பதில் வருமாறு:-

ஆறுகளுக்கிடையே நீரைப்பரி மாறும் வகையில் 1980ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட திட்டத்தின்படி தேசிய நீர்வள அமைப்பு 16 தீபகற்ப ஆறுகள் மற்றும் 14 இமாலயப் பிரதேச ஆறுகளை ஒன்றுக்கொன்று இணைக்கும் சாத்தியக்கூறுகளை கண்டறிந்து அறிக்கை தயாரிக்க முடிவெடுத்தது.

இதில் மொத்தமுள்ள 30 இணைப்புகளுக்கும் முன்சாத்தியக்கூறு அறிக்கைகளும், 24 இணைப்புகளுக்கு சாத்தியக்கூறு அறிக்கைகளும், 11 இணைப்புகளுக்கு விரிவான திட்ட அறிக்கையும் தயாரிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

பேச்சுவார்த்தைகள் மற்றும் விரிவான கலந்தாலோசனைகள் மூலம் ஆறுகளை இணைப்பதற்கு மத்திய அரசு உச்சபட்ச முன்னுரிமையை அளித்து வருகிறது. இதற்காக 2014ல் ஒரு சிறப்புக்குழுவும், 2015 ஒரு செயல்திட்டக்குழுவும் தனித்தனியே அமைக்கப்பட்டு, இதுவரை சுமார் 20 கூட்டங்களை அவை நடத்தியுள்ளன.

திட்டமிட்டபடி இந்தமுப்பது திட்டங்களும் அமலாகி சம்பந்தப்பட்ட ஆறுகள் இணைக்கப்பட்டால் இரண்டரை கோடி ஹெக்டேர் நிலத்தில் ஆற்றுப் பாசனம் மூலமாகவும், ஒரு கோடி ஹெக்டேர் நிலத்தில் நிலத்தடி நீர் உயர்வதன் மூலம் பாசனம் செய்வதன் மூலமும் விவசாயம் செய்ய முடியும். இதுதவிர 34 மில்லியன் கிலோவாட் அளவுக்கு நீர்மின்சக்தியை உற்பத்தி செய்ய முடியும்.

அதுமட்டுமின்றி, இந்த ஆறுகள் இணைப்பின் மூலம் வெள்ளத் தடுப்பு, மீன் வளர்ச்சி, சுற்றுச் சூழல் மாசடையாமல் காப்பது, வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்துவது போன்ற நன்மைகளும் கிடைக்கும்.

இந்தத்திட்டங்களை முழுமையாக அமல்படுத்தினால் 166 பில்லியன் கன அடி நீரை தேவையான இடங்களுக்கும டைமாற்ற முடியும். 2015-16 ம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட பட்ஜெட்படி இந்தத்திட்டங்களை செயல்படுத்த 8.45 லட்சம் கோடி ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

திட்ட அறிக்கை தயாரான 16 திட்டங்கள் மூன்று தமிழ்நாட்டோடு தொடர்புடையவை. முதலாவது, பெண்ணாறு (சோமசீலா) - காவிரி (கிராண்ட் அனைக்கட்டு) இணைப்புத் திட்டம். இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுவிட்டது.

இரண்டாவது, பம்பை- அச்சன்கோவில்-வைப்பாறு ஆறுகளை இணைக்கும் திட்டம். இதற்கான சாத்தியக்கூறு அறிக்கை தயாராகி இருக்கிறது. மூன்றாவது தமிழ்நாட்டுக்குள் ஓடும் ஆறுகளான காவிரி (கட்டளை) வைகை - குண்டாறு இணைப்புத் திட்டம். இந்தத்திட்டத்திற்கும் விரிவான திட்ட அறிக்கை தயாராகிவிட்டது. அடுத்த கட்ட பணிகள் இனிமேல் தொடங்கப்பட வேண்டும்.

ஆறுகள் இணைப்புத்திட்டத்திற்காக சாத்தியக்கூறு மற்றும் திட்ட அறிக்கைகள் தயாரிப்பது உள்ளிட்ட முதற்கட்டப்பணிகளுக்காக கடந்த ஐந்தாண்டுகளில் சுமார் 350 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் பிஷ்வேஸ்வர்டு தெரிவித்தார்.

# கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும்!

## மக்களவையில் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச.13- மக்களவையில் கழக உறுப்பினர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி பேசுகையில் கல்வியை மாநில பட்டியலுக்கு மாற்றவேண்டும் என்று வலியுறுத்தினார். இது குறித்து அவர் பேசியது வருமாறு:-

கல்வியும் மருத்துவமும் தன் இரண்டு கண்களாக பாவித்து திராவிட மாடல் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பாக இந்த பழங்குடி மற்றும் மலைவாழ் மக்கள் உயர் கல்வி பல்கலைக்கழக சட்ட மசோதாவை நான் மனதார வரவேற்கிறேன். இந்த கல்வி ஒன்று தான் நம்மிடமிருந்து பிரிக்க முடியாத சொத்து. அனைவருக்கும் கல்வி, அதுவும் தரமான கல்வி கிடைத்திட வேண்டும் என்பதுதான் தந்தை பெரியாரால் ஆரம்பித்து பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் அவர்களின் வழியே திராவிட மாடல் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார் எங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அதனால் தான் தொடக்க பள்ளியிலேயே மாணவர்கள் எல்லாம் தரமான கல்வி பெற வேண்டும் என்பதற்காக காலை உணவு திட்டத்தை அறிமுகப்படுத்தினார். அது மட்டுமல்ல பெண்கள் உயர்கல்வி படிக்க வேண்டுமென்பதற்காக மாதம் 1000 ரூபாய் வழங்கும் திட்டங்களை அறிவித்து மிக சிறப்பாக கல்வியில் முன்னேறிய ஒரு மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிக் கொண்டிருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இது போல பல்கலைக் கழகங்கள் இந்தியாவிலேயே தொடங்கப்படுவதை அவர் சார்பாக நாங்கள் வரவேற்கிறோம். வெறும் பல்கலைக்கழகங்களை தொடங்குவது எண்ணிக்கையில் மட்டுமல்லாமல் தரத்திலும் சிறந்த பல்கலைக்கழகமாக அது இருந்திட வேண்டும் என்பதுதான் எங்களுடைய வேண்டுகோள். ஏனென்றால் கிட்டத்தட்ட 1000கும் மேற்பட்ட பல்கலைக்கழக இந்தியாவில் இருந்தா லும், ஆனால் உலக தரம் பட்டியலில் நாம் அந்த பல்கலைக்கழக எண்ணிக்கையிலேயே 300க்கு மேல் தான் நம் இந்திய பல்கலைக்கழகங்கள் வருகிறது என்றால் நம்முடைய தரத்தை நாம் ஆய்வு செய்திட இது ஒரு முக்கியமான தருணமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.



அதேபோல்தான் GER என்கிற (Gross Enrollment Ratio) உயர் கல்வி படித்தவரின் எண்ணிக்கை இந்தியாவிலேயே வெறும் 27சதவீதம் தான் இருக்கிறது. ஆனால் எங்கள் தமிழ் நாட்டில் அந்த உயர்கல்வி GER ratio கிட்டத்தட்ட 47 சதவீதத்துக்கு மேல் என்றால் இதற்கெல்லாம் காரணம், தொடக்கப்பள்ளியிலிருந்து எங்களுடைய திராவிட மாடல் அரசாங்கம் கவனம் செலுத்தி கொண்டிருப்பதால் தான். எப்படி உண்ண உணவு, இருக்க இடம், உடுக்க உடை அவசியமோ, அதேபோல் ஒவ்வொரு மனிதனுக்கும் கல்வி அதன் தொடக்க கல்வி எவ்வளவு அவசியம் என்பதை உணர்ந்ததால் தான் இது போல இந்த GER கிட்டத்தட்ட தமிழகம் 47% எடுத்து இப்போது முன்னோடி மாநிலமாக இருக்கிறது. இதை நான் பெருமையாக இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்த அரசாங்கம் மிக முக்கியமான கவனம் செலுத்த வேண்டிய ஒரு நிகழ்வாக ஏறத்தாழ ஐந்து ஆண்டுகளில் 19,000 எஸ் சி, எஸ் டி, ஓ பி சி, மாணவர்கள் ஒன்றிய பல்கலைக்கழகங்களில் இருந்து தங்களது படிப்பை தொடர முடியாமல் விட்டுச் சென்றிருக்கிறார்கள். அது மட்டுமல்ல அதில் 2622 மாணவர்கள் பழங்குடியின மாண வர்கள். கிட்டத்தட்ட 35க்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்களுடைய உயிரை மாய்த்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திலேயே சென்னையில் இருக்கிற ஐஐடிலயே அவ்வப்போழுது இதுபோல பல நிகழ்வுகள், மாணவர்கள் உயிரை மாய்த்துக் கொள்கிற பல நிகழ்ச்சி கள் நடைபெற்றுக் கொண்டிருக் கிறது. இதுக்கெல்லாம் காரணம் அங்கே ஜாதியை வைத்துக்கொண்டு ஏற்றத்தாழ்வுகளால் அங்கே இருக்கிற பேராசிரியர்லால் அவருக்கு இதெல்லாம் நடைபெறுகிறது என்று பலமுறை எடுத்துச் சொல்லியும், இந்த அவையிலேயே பல முறை இதற்கான முறையிட்டு இருக்கிறோம். ஆனால் இதுவரை எந்த ஒரு பெரிய பலனும் இதுவரை கிடைக்க வில்லை. அதனால், அதையும் இந்த நேரத்துல இந்த அவையில் பதிவு செய்ய விரும்பு கிறேன். தரமான கல்வி அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்று அனைவரும் சேர்ந்து பாடுபட வேண்டும்.

இந்த கல்வி மத்திய பட்டியலில் இருந்து மாநில பட்டியலுக்கு மாற்றினால் தான் அனைத்து பகுதி மக்களும் அதாவது, தாழ்த்தப்பட்ட மக்களிருந்து, பிற்படுத்தப்பட்ட மக்களும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களும் அனைவருக்கும் கல்வி போய் சேர வேண்டும் என்றால் இது கண்டிப்பாக மாநிலப்பட்டியலுக்கு இந்த கல்வியை மாற்ற வேண்டும் என்ற ஒரு முக்கியமான கோரிக்கையாக வைக்கிறேன்.

அதேபோல அனைவருக்கும் தெரியும்

நீட் தேர்வால் இதுவரை 40க்கும் மேற்பட்ட மாணவர்கள். தமிழகத்திலேயே உயிரை மாய்த்திருக்கிறார்கள். இது தமிழ்நாட்டிற்கு மட்டு மான பிரச்சனை அல்ல. ராஜஸ்தான் மாநிலத்தில் கோட்டா மாவட்டத்தில் இதுவரை 20க்கும் மேற்பட்ட மாணவர்கள் இறந்தி ருக்கிறார்கள். இவர்களெல்லாம் இது போல தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் தான் இவர்களெல்லாம் உயர்கல்வி படிக்க வரும் பொழுது இதுபோல அவர்களின் தரத்தை சோதிப்பதற்காக தேர்வுகளை வைத்து உயர்கல்வி படிப்பதற்கு தடுப்புதனால் அவர்கள் மன உளைச்சலில் தற்கொலை செய்து கொள்கிறார்கள். இதையெல்லாம் தடுக்க வேண்டும் என்றால் இது போல நுழைவுத் தேர்வுகளையும் ரத்து செய்ய வேண்டும். அப்போது தான் தாழ்த்தப்பட்ட மாணவர்கள், பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் உயர் கல்வி பெறுவார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் வலியுறுத்துகிறேன்.

என கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். பொன். கௌதமசிகாமணி எம்.பி. அவர்கள் நாடாளு மன்றத்தில் உரையாற்றினார்.



கூட்டுறவுத் துறை அமைச்சர்கேஆர். பெரியகருப்பன் பெரம்பூர், சர்மா நகரில் உள்ள மாலதி மஹாலில் வார்டு எண் 36க்கு உட்பட்ட பகுதிகளில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நிவாரண பொருட்களை வழங்கினார்கள். உடன் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., 36வது வார்டு மாமன்ற உறுப்பினர் .ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி அகியோர் உள்ளனர்.

---

**இதுவரை ரூ.5 கோடியே 89 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!**

**2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்**

**2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!**

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

## நலிந்தோர் மருத்துவம் - கல்வி உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர்–பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 5 கோடியே 89 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவ உதவி நிதியாக மொத்தம் 8 பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/-**(இரண்டு லட்சம்) **12-12-2023** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | |
|---|---|
| 1.கே.மணியரசன் (எ) சுப்பிரமணியன், ந.கோவில்பட்டி, நத்தம், திண்டுக்கல் | 25,000/– |
| 2.ச.தங்கவேல், கோவிலாங்குளம், கமுதி வட்டம், இராமநாதபுரம் மாவட்டம். | 25,000/– |
| 3.எஸ்.செல்வம், வார்டு–5, சுப்பாராயர் தெரு, வத்திராயிருப்பு, விருதுநகர் | 25,000/– |
| 4.எஸ்.மாரிமுத்து, பீச் ரோடு, அன்னைசிவகாமி நகர், எண்ணூர், சென்னை–57 | 25,000/– |
| 5.எஸ்.வி.சிவலிங்கம், ஏ.ஜே.பிளாக், பல்லக்குமாநகர், மயிலாப்பூர், சென்னை–4 | 25,000/– |
| 6.ஏ.சி.மணி, ஊராட்சி செயலாளர் பட்டாபிராமாபுரம், திருத்தணி, திருவள்ளூர். | 25,000/– |
| 7.திருமதி ச.ஜோதி, சுந்தரம்பள்ளி கிராமம், திருப்பத்தூர் – 635 654. | 25,000/– |
| 8.திருமதி வி.மல்லிகா,மெயின் ரோடு, வீரஞ்சேரி, துரும்பூர்,பாபநாசம், தஞ்சை | 25,000/– |
| **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |

### கடலில் மீன்பிடித்தபோது ராட்சத அலைமோதி தவறிவிழுந்து

# உயிரிழந்த ஆலந்தலை ரவிஸ்டன் குடும்பத்திற்கு ரூ.3 லட்சம் நிதிஉதவி!

## அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் வழங்கி ஆறுதல்!

திருச்செந்தூர், டிச.13- திருச்செந்தூர் ஆலந்தலை தெற்கு தெருவைச் சேர்ந்த ஜூலியஸ் மகன் ரவிஸ்டன் (30). கடந்த டிச. 9ம் தேதி கடலில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் போது ராட்சத அலை மோதி தவறி விழுந்து உயிரிழந்தார். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது.

இந்நிலையில் மீன் வளம், மீனவர் நலன் மற்றும் கால் நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ராதா கிருஷ்ணன் உயிரிழந்த மீனவர் குடும்பத்திற்கு நேற்று முன்தினம் மாலை நேரில் சென்று ஆறுதல் கூறினார்.

அப்போது மீன்வளத் துறை சார்பில் ரூ. 2 லட்சம், தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ரூ. 1 லட்சம் என ரூ. 3 லட்சம் நிதி உதவியை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் வழங்கினார்.

நிகழ்வின் போது ஆலந்தலை பங்குத்தந்தை சில்வஸ்டர், திருச்செந்தூர் வட்டாட்சியர் வாமனன், மீன்வளத்துறை உதவி இயக்குனர் புஸ்ரா, ஆய்வாளர் ஜெகன், சார் ஆய்வாளர் ராமகிருஷ்ணன், ஆலந்தலை ஊர் நலக்கமிட்டி தலைவர் ஆசைதம்பி, பொருளாளர் சுவைக்கின், உறுப்பினர் லெவி, கவுன்சிலர்கள் மஞ்சுளா தொம்மை, ஆனந்த ராமச்சந்திரன், தினேஷ் கிருஷ்ணா, திமுக வர்த்தக அணி இணைச் செயலாளர் உமரிசங்கர், திருச்செந்தூர் ஒன்றிய செயலாளர் செங்குழி ரமேஷ், ஒன்றிய பொருளாளர் பரிசமுத்து, மாவட்ட கவுன்சிலர் செல்வகுமார், நகர செயலாளர் வாள் சுடலை, மீனவர் நலவாரிய உறுப்பினர்கள் ஜெபமாலை, லெனின், மீனவரணி மாவட்ட துணை அமைப்பாளர் ரெம்சியூஸ், அமலிநகர் வார்டு செயலாளர் சந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## துறையூர் ந.குணசீலன்

### டிசம்பர் 13 (2015)




**இளமைக் காலம் தொட்டு கழகத்தில் தீவிரமாகப் பணியாற்றியவர்.**

**தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையுடன் இறுதிவரை வாழ்ந்தவர்.**

**1993ஆம் ஆண்டு முதல் திருச்சி மாவட்ட பொறுப்புக் குழு உறுப்பினராகவும், 1997ஆம் ஆண்டு முதல் திருச்சி மாவட்ட துணைச் செயலாளராகவும், 2000ஆம் ஆண்டு முதல் பெரம்பலூர் மாவட்டக் கழகச் செயலாளராகவும், 2005ஆம் ஆண்டு முதல் திருச்சி மாவட்ட துணைச் செயலாளராகவும், 2010ஆம் ஆண்டு முதல் இறுதி வரை பொதுக்குழு உறுப்பினராகவும் கழகத்தில் பதவி வகித்தவர்.**

**கழகம் அறிவித்த பல்வேறு அறப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



சென்னையில் நேற்று (12.12.2023) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் பேரறிஞர் அண்ணா நினைவிடத்தை புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருவதை ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் மரு.இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வரி வருவாய் பகிர்வது உட்பட

# பல விஷயங்களில் தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது ஒன்றிய அரசு!

### மக்களவையில் கதிர் ஆனந்த் பேச்சு!



புதுடெல்லி, டிச.13-

மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் பேசியதாவது

வேலைவாய்ப்பு நெருக்கடி, மையத்திலிருந்து வரி வருவாய் பகிர்வு, விவசாய நெருக்கடி, பொதுத்துறை வங்கிகளின் ஆபத்தான நிலை, ஜவுளித்துறை நெருக்கடி மற்றும் MSMEதுறையில் உள்ள சிக்கல்கள் மற்றும் பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்த விரும்புகிறேன்

இந்தியாவில் வேலை வாய்ப்பின்மை நிலை 2014 முதல் 2022 வரை மொத்த வேலை வாய்ப்பில் "முன்னோடியில்லாத" வீழ்ச்சியைக் காட்டுகிறது பல காரணங்களால் 50 மில்லியன் வேலைகள் இழக்கப்பட்டுள்ளன. முக்கிய மூன்று காரணங்கள் 1 2016ல் பணமதிப்பு நீக்க நடவடிக்கை, 2.ஜிஎஸ்டி அமலாக்கம் 2017, 3.கோவிட் தொற்றுநோய் 2020-21.

**வேலையில்லாத் திண்டாட்டம் உயர்வு!**

ஒன்றிய, மாநில அரசுகள் மற்றும் நாடு முழுவதும் உள்ள பொதுத்துறை நிறுவனங்களில் 40 லட்சம் பணியிடங்கள் காலியாக உள்ளன நமது இளைஞர்களுக்கு அரசு வேலைகளை வழங்குவதற்கு அரசு எந்த ஒரு முன்முயற்சி நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால், பெரும் பேரழிவு காத்திருக்கிறது வேலையில்லாத் திண்டாட்டம் 103% ஆக உயர்ந்துள்ளது 18 மற்றும் 26 வயதிற்குட்பட்டவர்களுக்கு 30% வரை அதிகமாக உள்ளது அதாவது நாட்டில் மூன்றில் ஒரு பங்கு இளைஞர்கள் வேலையில்லாமல் உள்ளனர். மேலும் மூன்றில் ஒரு பகுதியினர் வேலையில் உள்ளனர்.

நாட்டின் நேரடி வரி வருவாயில் தமிழகம் தொடர்ந்து மிகப்பெரிய பங்களிப்பாளராகத் திகழ்கிறது. தரவுகளுடன் வரி வருவாயைப் பகிர்வது உட்பட பல விஷயங்களில் தமிழகத்தை வஞ்சிக்கும் ஒன்றிய அரசு, வரி வருவாயின் பங்களிப்பில் தமிழகத்திற்கு உரிய பங்கு கிடைக்கவில்லை எடுத்துக் காட்டாக, தமிழகம் ஒன்றிய அரசுக்கு அளிக்கும் ஒவ்வொரு ஒரு ரூபாய்க்கும் 29 பைசா திரும்பப் பெறுகிறது மற்றும் தற்செயலாக அனைத்து பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள் அல்லது அவர்களின் தேர்தல் மாநிலங்களில் பெரும் பங்கைப் பெறுகின்றன இது நியாயமற்றது

கடந்த 10 ஆண்டுகளில் மத்திய நிதிக் கமிஷன் பரிந்துரைகளால் தமிழகம் பெரும் நிதி இழப்பை சந்தித்து வருகிறது 12வது நிதிக்குழுவில் 5305% ஆக இருந்த ஒதுக்கீடு 15வது நிதிக்குழுவில் 4079% ஆக குறைந்துள்ளது தமிழகத்தில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை நேர்மையாக அமல்படுத்தியதால் பல திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீட்டிலும் தமிழகம் வஞ்சிக்கப்படுகிறது.

**அதிக நிதி ஒதுக்குவீர்!**

தமிழகம் ஒன்றிய அரசுக்கு வரி வருவாயாக அளித்து வரும் தொகையை ஒப்பிடும் போது, திரும்ப பெறுவது மிகவும் குறைவு ஒன்றிய அரசு மாநிலத்தின் வரிப் பங்கைத் தவிர வேறு எதையும் மாநிலத்திற்கு வழங்கவில்லை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழகம் 916 சதவீதத்தை ஒன்றிய அரசுக்கு வழங்கி வருகிறது. ஆனால் ஒன்றிய அரசு தமிழகத்திற்கு 607% வரி வருவாயை மட்டுமே பங்கிட்டுள்ளது மாநிலங்களுக்கான ஜி.எஸ்டி. இழப்பீட்டு வரிக்கான காலம் கடந்த ஆண்டு ஜூன் 30 ஆம் தேதியுடன் முடிவடைந்த தால். தமிழகம் பெரும் வருவாய் இழப்பை சந்தித்துள்ளது நாட்டின் நேரடி வரி வருவாயில் தமிழகம் ரூ516 லட்சம் கோடியை பங்களித்துள்ளது. ஆனால் அதற்கு ஈடாக ரூ208 லட்சம் கோடி மட்டுமே தமிழகத்துக்கு கிடைத்துள்ளது நான் மாண்புமிகு நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தமிழகத்திற்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும். ஏனெனில் தமிழகத்திற்கு அதிக தகுதி உள்ளது

**ஜவுளித் துறைக்கு நிதியுதவி!**

தமிழக அரசின் தென்பகுதியில் 1,500 ஏக்கர் பரப்பளவில் ஜவுளிப் பூங்காவும், சென்னையில் ஜவுளிப் பூங்காவும் அமைக்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது மாநிலத்தில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில் புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கையும் அறிமுகப்படுத்தப்படும் என மாநில முதல்வர் முகஸ்டாலின் தெரிவித்துள்ளார் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள குமரலிங்கபுரம் கிராமத்தில் மெகா ஜவுளிப் பூங்கா அமைப்பதற்காக 1,500 ஏக்கருக்கு மேல் சிப்காட் (தமிழ்நாடு லிமிடெட் மாநில தொழில்கள் மேம்பாட்டுக் கழகம்) கையகப்படுத்தியுள்ளது

மாநிலத்தின் ஜவுளி ஏற்றுமதியை அதிகரிக்க கரூர், திருப்பூர் மற்றும் காஞ்சிபுரத்தில் "ஏற்றுமதி மையங்களை" மாநில அரசு நிறுவுகிறது. இது தற்போது இந்தியாவின் மொத்த ஜவுளி ஏற்றுமதியில் 12 சதவீதத்தைக் கொண்டுள்ளது தமிழ்நாட்டின் ஜவுளித் துறையானது புதிய தொழில் நுட்பங்களை ஏற்றுக்கொள்வதில் முன்னணியில் உள்ளது மற்றும் உலக சந்தைகளுக்கு சேவை செய்ய பல்வேறு வகையான ஆடைகளை உற்பத்தி செய்கிறது.

**ஒன்றிய அரசின் தோல்வி!**

நான்கு ஆண்டுகளில் 1,480 கோடி செலவில் தேசிய தொழில்நுட்ப ஜவுளி இயக்கத்தின் (NTTM)கீழ்-ஜவுளி அமைச்சகம் 2024-25 ஆம் ஆண்டிற்குள் $40 பில்லியன் சந்தை அளவையும் $10 பில்லியன் ஏற்றுமதியையும் அடைய திட்டமிட்டுள்ளது ஆனால் சமீப காலமாக நமது நாட்டின் ஏற்றுமதியை வங்க தேசம் கைப்பற்றி, வங்கதேசத்தில் இருந்து ஜவுளி ஆடைகளை இறக்குமதி செய்கிறோம் இது ஒன்றிய அரசின் மிகப்பெரிய தோல்வி

பொதுத்துறை வங்கிகளின் செயல்பாடு மிகவும் விரும்பத்தகாததாக இருப்பதைப் பார்ப்பது வருத்தமளிக்கிறது. பெரும்பாலானவை மிக வேகமாக மூழ்கி வருகின்றன ரிசர்வ் வங்கியின் 2023 அறிக்கை 2020-21 ஆம் ஆண்டில் 7338 மோசடிகள் ரூ 132389 கோடியாகவும் 2021-22ல் 9097 மோசடிகள் ரூ. 59819 கோடியாகவும், 2022-23ல், இதுவரை இல்லாத அளவுக்கு 13,530 மோசடிகள் பதிவாகியுள்ளன. இதன் தொகை ரூ 30252 கோடி

**குளிர்காயும் வங்கிக் கொள்ளையர்கள்!**

ரூ 5 லட்சம் வரை மட்டுமே டெபாசிட் தொகை உத்தரவாதம் என்பது உலகிலேயே மிகக் குறைவான ஒன்றாகும் ரிசர்வ் வங்கியின் 2023 ஆண்டு அறிக்கை 463% டெபாசிட்கள் மட்டுமே பாதுகாக்கப்பட்டுள்ளது என்று கூறுகிறது இந்த வைப்புத்தொகைகள் ரூ 5 லட்சத்துக்கு மேல் இருப்பதால் வைப்புத் தொகையில் 54% பாதுகாக்கப்படவில்லை வங்கிப் பணத்தைக் கொள்ளையடிப்பவர்கள் வெளிநாட்டில் குளிர்காய்கிறார்கள். அரசாங்கத்தால் எதுவும் செய்ய முடியவில்லை

கடந்த 10 ஆண்டுகளில் வங்கிகள் ரூ. இருப்புநிலைகளை சுத்தம் செய்ய ரூ.15 லட்சம் கோடி இது யாருடைய பணம்?

வங்கிகள் தள்ளுபடி செய்த தொகைகள் மற்றும் பெருகிவரும் NPAகள் காரணமாக விரைவில் கடுமையான சிக்கலுக்கு உள்ளாகும் 100 கோடி ரூபாய்க்கு மேல் கடன் பெற்ற 599 கார்ப்பரேட் நிறுவனங்கள் 5%க்கும் குறைவாகக் கடன் பெறும் போது கல்விக் கடன் வாங்கியவர் 1112% செலுத்துகிறார் MSMEகள் வாங்குபவர்களும் அப்படித்தான்! ஏன் இந்த விபரீதம்?

30% வங்கிக் கடன்கள் வங்கி அல்லாத நிதி நிறுவனங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. அவை வங்கிகளில் இருந்து 1011% கடன்களைப் பெற்று 36% வரையிலான விகிதத்தில் கடன் அளிக்கின்றன இப்போது இந்த உச்சவரம்பு கூட நீக்கப்பட்டுள்ளது!

**வெற்றுக் கோஷங்கள்!**

ரூ3 லட்சம் கோடி திட்டங்களின் கீழ் MSMEகளுக்கு 925% சலுகை விகிதத்தில் 100% உத்தரவாதத் திட்டம் மே 2020 இல் அறிவிக்கப்பட்ட ரூ20 லட்சம் கோடி தொகுப்பின் இரண்டாவது பெரிய அங்கமாகும் ஆனால் எதுவும் நடக்கவில்லை எளிதாக தொழில் செய்ய முடியும், 59 நிமிடங்களில் ஒரு கோடி கடன் என்ற கோஷங்களில் மட்டுமே கேட்டோம் வெறும் கோஷங்கள் தான். குறு-சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு எளிதாக கடன் வழங்குவதை உறுதி செய்ய பொதுத்துறை வங்கிகளை நிதியமைச்சர் தூண்டிவிட்டு, செயல்முறைகளை எளிதாக்குமாறு கேட்டுக் கொண்டார் வங்கியாளர்கள் இந்த தேசத்தின் நிதி அமைச்சரின் வார்த்தைகளுக்கு செவி சாய்க்க தயங்குகிறார்கள்

MSMEகளுக்கு கூடுதல் கடன்களை விரைவாக வழங்க வேண்டிய அவசியம் உள்ளது.மேலும் செயல்முறை-வடிவங்கள் மற்றும் ஆவணங்களை எளிதாக்க வங்கியாளர்களை வலியுறுத்தியது ஆனால் தரை மட்டத்தில் இது மிகவும் வித்தியாசமானது வங்கிகள் பல கேள்விகளைக் கேட்டு பல நிபந்தனைகளை விதித்து கடைசியாக கடன் திட்டத்தை நிராகரிக்கின்றன 100ல்99 SMBக்களுக்கு இது நடக்கிறது அரசு இதை தீவிரமாகக் கவனித்து அதன்படி செயல்பட வேண்டும்

தற்போது MSMEகளுக்கு வங்கிகள் வழங்கும் கடனுக்கான வட்டி விகிதம் ஆபத்துக் கருத்துகளைப் பொறுத்து 95% முதல் 17% வரை மாறுபடுகிறது ஆனால் யாரும் 95% வட்டியில் கடன் பெறுவதில்லை இது பொதுவாக அதிகபட்சமாக 14 முதல் 15% முதல் 17% வரை செல்லும் இது மீண்டும் ஒரு பொறியாகும். குறிப்பாக கோவிட்19 தொற்றுநோய்களின் போது ஏற்பட்ட பேரழிவிற்குப் பிறகு எவரும் தங்கள் வணிகத்தை நிலைநிறுத்துவதற்கு உண்மையில் சாத்தியமற்றது அனைத்துSMBகளுக்கும்குறைந்த வட்டி விகிதத்தில் தொந்தரவில்லாத கடன்களை வழங்குமாறு நான் அரசாங்கத்தை வலியுறுத்துகிறேன்

**தமிழக முதல்வரின் திராவிட மாதிரி!**

நமது மாபெரும் திராவிடத் தலைவர்களான தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் மற்றும் நமது அன்புக்குரிய முதலமைச்சர் முகஸ்டாலின் திராவிட நிர்வாக மாதிரி என்ற புதிய அரசியல் கோட்பாட்டை உருவாக்கியுள்ளார் .

ஜவுளித் தொழில் சூரிய உதயத் துறையாக இருப்பதால், சர்வதேச மற்றும் உள்நாட்டு நிறுவனங்களின் முதலீடுகள் அதிகரித்துள்ளன. இது மிகவும் ஊக்கமளிக்கிறது வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதிலும், ஏற்றுமதியிலும் தமிழகம் தற்போது 3வது இடத்தில் உள்ளது

தமிழ்நாடு முதலமைச்சர் முகஸ்டாலின், ஜப்பானிய தொழிலதிபர்கள் மாநிலத்தில் தங்கள் முதலீடுகளை விரிவுபடுத்தவும், மாநிலத்தில் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களில் முதலீடு செய்யவும், இது உற்பத்தித் துறையில் அவர்களின் திட்டங்களை நிறைவுசெய்யும் கைடன்ஸ் தமிழ்நாடு மற்றும் ஜப்பானிய நிறுவனங்களுக்கு இடையே மாநிலத்தில் 8189 கோடி முதலீடு செய்வதற்கான ஆறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoUs) கையெழுத்தானது மேற்கண்ட 82 திட்டங்களில் செய்யப்பட்ட மொத்த முதலீடு ரூ52,549 கோடி மற்றும் 92,420 நபர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கும்

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், ராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், சேலம், திருச்சி ராப்பள்ளி, புதுக்கோட்டை, கரூர், ஈரோடு, கோவை, திருப்பூர், மதுரை, திண்டுக்கல், விருதுநகர்,தூத்துக்குடி,திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி என 22 மாவட்டங்களில் இத்திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

பெரும்பாலான மாநிலங்களுடன் ஒப்பிடும்போது பல சமூகபொருளாதார குறிகாட்டிகளில் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது இதுவரை பள்ளிக்குச் சென்ற பெண்களின் பங்கு, குறைந்த குழந்தை இறப்பு விகிதம் மற்றும் குன்றிய குழந்தைகளின் குறைந்த பங்கு ஆகியவற்றின் அடிப்படையில் மூன்று சிறந்த மாநிலங்களில் இது இடம்பெற்றுள்ளது 51% உடன் உயர்கல்வியில் மொத்த சேர்க்கை விகிதத்தின் அடிப்படையில் நாட்டிலேயே முன்னணியில் உள்ளது.

**மானியங்களைக் குறைக்கும் அரசாங்கம்!**

தமிழ்நாட்டின் வெகுஜனப் பிரச்சினையான ஒரு முக்கியமான விஷயம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டம் MGNREGA

5 டிசம்பர் 2023 அன்று மக்களவையில் ஒன்றியஅரசு அளித்த பதிலின்படி அரசாங்கம் ரூ 2000 கோடி மாநிலங்களுக்கு ஊதியப் பொறுப்பு நிலுவையில் உள்ளது மற்றும் ரூ 4300 கோடி ரூபாய் நிலுவையில் உள்ளது. கூடுதல் கோரிக்கைகளில் அரசு ரூ கூடுதல் மானியமாக 16142 கோடிகள் மூன்று கேள்விகள் உள்ளன தற்போது மொத்தம் ரூ6000 கோடி நிலுவையில் உள்ளது மற்றும் எம்.ஜி.என். ஆர்.இ.ஜி.ஏ. பணிகள் 4 மாதங்களாக நிலுவையில் உள்ளன ரூ16000 கோடி சிறிய ஒதுக்கீட்டில் தனது கோரிக்கைகளை எப்படி நிர்வகிக்க அரசு திட்ட மிட்டுள்ளது இதுவரை ஒதுக்கப்பட்ட ரூ60,000 கோடியில் எவ்வளவு செலவு செய்யப்பட்டுள்ளது? மேலும் திருத்தப்பட்ட மதிப்பீடு ரூ76,000 கோடியாக இருக்கும் எம்.ஜி.என். ஆர்.இ.ஜி.ஏ. கடந்த ஆண்டு ரூ89000 கோடியாக இருந்த 2022 திருத்திய மதிப்பீட்டை விட 166% குறைவாக இருக்கும் கடந்த ஆண்டை விட பயனாளிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் போது திருத்தப்பட்ட மதிப்பீடு ஒதுக்கீடு குறைவாக இருப்பது எப்படி?

எனது வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் நான்கு மேம்பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது 21 கோடி செலவில் பெருமுகை மேம்பாலம் பணி நடைபெற்று வருகிறது கந்தனேரி-வெட்டுவானம் மேம்பால பணிகள் ரூ75 கோடியில் டெண்டர் விடப்பட்டும் இதுவரை பணிகள் தொடங்கவில்லை ஆம்பூர் ரெட்டித் தோப்பு பாலம் பணி நிறுத்தப்பட்டுள்ளது LC81 RoBஇல் ஆம்பூர் புதிய நகரப் பாலம் தேவை பயணிகளுக்கு பிரச்சினையாக இருக்கும் என்பதால் மக்கள் RuBயை விரும்பவில்லை கிரீன் சர்க்கிளில் பாலம் 78 கோடி ரூபாய் செலவில் துரிதப்படுத்தப்பட வேண்டும்.

எனது உரையை முடிக்கும் முன், இந்த அரசுக்கு நல்லெண்ணச் சைகையாக இந்த திருக்குறளைச் சொல்ல விரும்புகிறேன்

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்

கெடுப்பாரிலானுங் கெடும்.

இவ்வாறு கதிர்ஆனந்த் எம்.பி. பேசினார்.




சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்கு பகுதி துணைச் செயலாளர் எம்.ஏ.செந்தில்சுரேஷ் தலைமையில் 92 வது வட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வட்டக் கழகச் செயலாளர் எம்.எம்.ஜெயரத்தினம், கே.நீலகண்டன், கே.குமரேசன், எம்.சி.எழிலரசு, எ.ஜி. வேலன் ஆகியோர் வரவேற்பில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, மதுரவாயல் வடக்கு பகுதிச் செயலாளர், 11–வது மண்டலக்குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன் ஆகியோர் மாபெரும் மாரத்தான் போட்டியை துவக்கி வைத்தனர். உடன் 92 வது வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணியின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மூத்த முன்னோடிகள், பொதுமக்கள், சிறுவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### தேசியவாத காங்கிரஸ் தலைவர்

## சரத்பவாருக்கு பிறந்தநாள் வாழ்த்துகள்

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு



**சென்னை, டிச.13-**

**தேசிய வாத காங்கிரஸ் கட்சித் தலைவர் சரத்பவார் அவர்களின் பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பான தேசியவாத காங்கிரஸ் கட்சித் தலைவர் சரத் பவார் அவர்களின் பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

தேசியவாத காங்கிரஸ் கட்சித் தலைவர் சரத் பவார் அவர்களுக்குப் பிறந்தநாள் நல்வாழ்த்துகள்.

தங்களது கூர்த்த மதி நுட்பம் சவாலான இக்கால கட்டங்களில் எங்களுக்கு வழி காட்டட்டும். துடிப்பான இந்தியாவுக்கான உங்களது ஆதரவைத் தொடர்ந்து நாடுகிறோம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### தா.இளையஅருணா, ஐட்ரிம்ஸ்.மூர்த்தி பங்கேற்பு ! இராயபுரம் 48வது வார்டில்

## 3000 பேருக்கு உணவு! வெள்ள நிவாரண நிதியாக மாமன்ற உறுப்பினர் 3 மாத ஊதியம்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபுவிடம் விஜயலட்சுமி விஜயகுமார் எம்.சி. வழங்கினார் !

சென்னை,டிச.13

மிக்ஜாம் புயல் மழையில் பாதிக்கப்பட்ட மக்கள் 3 ஆயிரம் பேருக்கு அசைவ உணவு வழங்கியதுடன் மாமன்ற உறுப்பினரின் மூன்று மாத ஊதியத்தையும் விஜயலட்சுமி விஜயகுமார் எம்.சி.வெள்ள நிவாரண நிதிக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர் பாபுவிடம் வழங்கினார்.

சென்னை, வண்ணாரப் பேட்டை, பகுதிகளில் மக்கள் மிக் ஜாம் புயலில் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.இந்த நிலையில் 48 வது வார்டு தி.மு.க. கவுன்சிலர் விஜயலட்சுமி விஜயகுமார், ரெயின்போ விஜயகுமார் ஆகியோர் ஏற்பாட்டில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு தினமும் மூன்று வேளை உணவு தொடர்ந்து ஆறு நாட்கள் வழங்கி வந்தனர்.

பார்த்தசாரதி (3,4,5,6,7 வது தெரு) சுப்பம்மாள் தெரு, முத்தையா முதலி தெரு, முனிராம் பாண்டி தெரு, தட்டாங்குளம் தெரு, ஷேசலா கிராமினி தோட்டம்,தங்கவேல் தெரு,புத்தா தெரு, முத்துமாரியம்மன் தெரு அகிய பகுதிகளில் உள்ள மக்கள் 3 ஆயிரம் பேருக்கு ஞாயிற்றுக்கிழமை அன்று மதிய அசைவ உணவு வழங்கினார்.

மேலும் மிக்ஜாம் புயல் முதல் இன்று வரையில் மூன்று வேலையும் உணவுகள் அங்குள்ள மக்களுக்கு காலையில் சப்பாத்தி, பொங்கல் சாம்பார். மதிய நேரத்தில்: பிரிஞ்சி,சாம்பார் சாதம், பூலாவு சாதமும், இரவு நேரத்தில் கிச்சடி, உப்புமா,என ஒரு வேலைக்கு 3 ஆயிரம் பேருக்கு வழங்கி வந்தனர். ஞாயிற்றுக்கிழமை 3 ஆயிரம் பேருக்கு பிரியாணி வழங்கும் நிகழ்ச்சியில்,இந்து சமயம் மற்றும் அற நிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மாவட்டச் செயலாளர் தா. இளையஅருணா, சட்டமன்ற உறுப்பினர் ஐடிரீம்ஸ் இரா.மூர்த்தி, பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், வட்டசெயலாளர் இரா.பாலன், உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மேலும் கவுன்சிலர் வி. விஜயலட்சுமி விஜயகுமார் முதல்வர் வெள்ள நிவாரண நிதியாக தனது மூன்று மாத சம்பளத் தொகை ரூ.30 ஆயிரத்துக்கான காசோலையை, அமைச்சர் பி.கே. சேகர் பாபுவிடம் வழங்கினார்.



சென்னை, தலைமைச் செயலகத்தில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் முன்னிலையில், "நவீன தமிழ்நாட்டின் சிற்பி கலைஞர் குழுவின் ஆலோசனை கூட்டம் நேற்று (12.12.2023) நடைபெற்றது. இக்குழுக் கூட்டத்தில், குழுவின் உறுப்பினர் செயலர், பொதுப்பணித்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் பி.சந்திரமோகன், பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி, பொதுப்பணித்துறை சிறப்பு அலுவலர் இரா. விஸ்வநாத், குழு உறுப்பினர்கள் ஆர்.சுப்பிரமணியன், திருமதி ரூப்மதி, ஓவியர் மருது, கவிஞர் ஏர்வாடி எஸ்.ராதாகிருஷ்ணன், ஸ்தபதி செல்வநாதன் உட்பட பொதுப்பணித்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஜோதி பழனிசாமி

### டிசம்பர் 13 (2010)



**இருபத்தைந்து ஆண்டுகள் தாராபுரம் நகரக் கழகச் செயலாளராக சிறப்பாகப் பணியாற்றியவர்.**

**தாராபுரம் நகர்மன்ற உறுப்பினராகவும், தாராபுரம் நகர கூட்டுறவு வங்கித் தலைவராகவும், நிலவள வங்கித் தலைவராகவும் பணியாற்றி மக்கள் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**நெருக்கடி நிலை காலத்தில் 'மிசா' கைதியாக ஓராண்டு சிறையில் இருந்தவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

# மிக்ஜாம் புயல்: முதல்வரின் வேண்டுகோளை ஏற்று கட்சித் தலைவர்கள் - அரசு அதிகாரிகள் - தொழிலதிபர்கள் நிவாரண நிதி!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (12.12.2023) முகாம் அலுவலகத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் அவர்கள் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் ஒருமாத சம்பளத் தொகைக்கான காசோலையும் வழங்கினார். உடன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர்கள் மு.வீரபாண்டியன், நா.பெரியசாமி ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (12.12.2023) தலைமைச் செயலகத்தில், புதுச்சேரி தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.சிவா, வி.ஏ. கென்னடி, செந்தில், சம்பத், நாகதியாகராஜன், நாஜிம், முன்னாள் அமைச்சர் சிவக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கோபால், கார்த்திகேயன், ஏ.கே.குமார், சக்திவேல், முகிலன் ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 11 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (12.12.2023) தலைமைச் செயலகத்தில், வேலூர் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் வேந்தர் டாக்டர் ஜி.விஸ்வநாதன் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 1.25 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் வேலூர் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் துணைத் தலைவர்கள் சங்கர் விஸ்வநாதன், டாக்டர் சேகர் விஸ்வநாதன், டாக்டர் ஜி.வி. செல்வம் ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (12.12.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு இந்திய வனப் பணி சங்கத்தின் தலைவர் ஸ்ரீநிவாஸ் ஆர்.ரெட்டி, சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தமிழ்நாடு இந்திய வனப் பணி சங்க உறுப்பினர்களின் ஒருநாள் ஊதியத்தை வழங்குவதற்கான ஒப்புதல் கடிதத்தை வழங்கினார். உடன் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் வனத்துறை தலைவர் சுப்ரத் மொஹபத்ரா, திருமதி ஆர்.காஞ்சனா, இ.பிரசாந்த் ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (12.12.2023) தலைமைச் செயலகத்தில், போத்தீஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் எஸ்.ரமேஷ் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 1 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

## பயன் தூக்கார் செய்த உதவிக்கு அன்பை விட நன்றியேது?

### தூய்மைப் பணியாளருக்கு ஊக்கத்தொகை வழங்கி - முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, டிச. 13-**

**மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குப்பைகளை அகற்றிட களம் கண்ட 3449 தூய்மைப் பணியாளர்கள்உள்ளிட்டபிறபணியாளர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கியது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த சமூக வலைதளப் பதிவில், “பயன் தூக்கார் செய்த உதவிக்கு அன்பை விட நன்றியேது?” என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

கண்ணுக்கு ஒரு இடர் என்றால் நொடிப்பொழுதில் காக்க வரும் கை போல, தலைநகர் சென்னையிலும், புறநகர் மாவட்டங்களிலும் மிக்ஜாம் புயல் பாதிப்பைப் போக்கக் களம் கண்ட 3449 தூய்மைப் பணியாளர்கள்உள்ளிட்டபிறபணியாளர்களுக்கு 4000 ரூபாய் ஊக்கத் தொகை வழங்கினேன்.

பயன்தூக்கார் செய்த உதவிக்கு அன்பைவிட நன்றியேது?

இவ்வாறு அவர் தனது வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தயாநிதி மாறன் எம்.பி., நே.சிற்றரசு பங்கேற்பு!

## 119வது வட்டத்தில் புதிய நியாய விலைக்கடை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

### க.வே.மோகன் வேண்டுகோள்!

சென்னை, டிச. 13-

திருவல்லிக்கேணி பகுதி 119 வது வட்டத்தில் இன்று (13.12.2023) மாலை 5 மணியள வில் பொதுமக்களின் கோரிக் கையை ஏற்று சி.ஐ.டி. காலனியில் புதியதாக நியாய விலைக் கடை திறந்து வைக்கப்படுகிறது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், காட்டுக் கோயில் மக்களின் வேண்டு கேளின்படி அந்த நியாய விலைக் கடையை திறந்து வைக்கிறார்.

இதில், தயாநிதி மாறன் எம்.பி., நே.சிற்றரசு (மாவட்டச் செயலாளர்) ஏ.ஆர்.பி. எம்.காமராஜ் ( பகுதிச் செயலாளர்) ஆர்.என்.துரை (மாவட்ட துணைச் செயலாளர்) வே.கமலாசெழியன் (மாமன்ற உறுப்பினர்) உள்ளிட்டோர் பங்கேற்கிறார்கள்.

எனவே, பகுதி வட்டக் கழ கத்தினர், நிர்வாகிகள் தவறா மல் வருகை தருமாறு வட்டச் செயலாளர் க.வே. மோகன் கேட்டுக் கொண்டுள்ளார்.

ரூ.41 லட்சம் லஞ்சம் வாங்கி கைதான

## அமலாக்கத்துறை அதிகாரிக்கு 2 நாள் போலீஸ் காவல்!

### திண்டுக்கல் நீதிமன்றம் அனுமதி!

மதுரை, டிச.13-

41 லட்சம் ரூபாய் லஞ்சம் வாங்கி கைதான அமலாக்கத் துறை அதிகாரி அங்கித் திவாரியை 2 நாள் காவலில் எடுத்து விசாரிக்க லஞ்ச ஒழிப்புத் துறைக்கு திண்டுக்கல் நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

மதுரை அமலாக்கத்துறை அலுவலகத்தில் பணியாற்றி வந்த அதிகாரி அங்கித் திவாரி, திண்டுக்கல் மருத்துவரிடம் வழக்கு ஒன்றில் இருந்து விடுவிப்பதாகக் கூறி, 2 தவணைகளாக 41 லட்சம் ரூபாய் லஞ்சம் பெற்றார். முதல் தவணையாக 20 லட்சம் ரூபாய் லஞ்சம் பெற்ற அவர், 2வது தவணையாக 21 லட்சம் ரூபாய் லஞ்சம் வாங்கியபோது தமிழ்நாடு காவல்துறையின் லஞ்ச ஒழிப்புத்துறையினரால் கைது செய்யப்பட்டார். இதனை அடுத்து அங்கித் திவாரியை திண்டுக்கல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புத் துறை யினர் பின்னர் சிறையில் அடைத்தனர். இந்நிலையில், நீதிமன்ற காவலில் சிறையில் இருந்த அங்கித் திவாரியை 2 நாள் காவலில் எடுத்து விசாரிக்க லஞ்ச ஒழிப்புத்துறைக்கு திண்டுக்கல் நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.



# திராவிடப் போராளிகள்

46

■ வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

## சிவகங்கையைச் சீர்திருத்திய கிருஷ்ணம்மாள்!


ஓவியம் : ரவி பேலட்

‘பெண்களுக்குக் கல்வி வேண்டும் கல்வியைப் பேணுதற்கே!’ என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கவிதைக்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்தவர், திராவிடப் போராளி கிருஷ்ணம்மாள். சிவகங்கைச் சீமையை, கல்வி வளர்ச்சி நோக்கித் திருப்பிய ஒரு வரலாற்றுக்குச் சொந்தக்காரர்.

கிருஷ்ணம்மாளின் தந்தை முத்துராமலிங்கம் அவர்கள் தமிழ்ப் பேராசிரியர். முற்போக்குச் சிந்தனைகொண்டவர். அவரது உடன்பிறந்த தங்கை தன் கணவரை இழந்தபோது அவருக்குத் துணிவுடன் மறுமணம் செய்துவைத்தவர். தன் சொந்தக் குடும்பத்தினர் மட்டுமன்றி, உறவினர் பிள்ளைகளும் கல்வி கற்க உதவிய கல்வியாளர்.

கிருஷ்ணம்மாள் இளம்பெண்ணாக இருந்தபோது அவரது தந்தை இறந்துவிட்டார். தன் தந்தையினும் மூத்த வயதுடைய உறவினர் ஒருவர் கிருஷ்ணம்மாளை திருமணம் செய்வதென உறுதியாகிவிட்டது. அந்த நிலையில், எதிர்ப்புகளை மீறி, சிவகங்கை இராமச்சந்திரனாரை மணந்தார் கிருஷ்ணம்மாள்.

### வாராது வந்த இராமச்சந்திரன்

கிருஷ்ணம்மாளின் தந்தை முத்துராமலிங்கத்தின் தங்கை மகன்தான் சிவகங்கை இராமச்சந்திரன் என்ற புகழ்பெற்ற வழக்கறிஞர். தன் மாமா முத்துராமலிங்கத்தின் உதவியால் பள்ளிக்கல்வியைக் கற்றவர். இளம்வயதிலேயே நீதிக்கட்சியில் ஈடுபாடு கொண்டு தீவிரமாகச் செயல்பட்டவர். தந்தை பெரியாரின் தோழராக சுயமரியாதை இயக்கத்தின் மதிப்புமிக்கத் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர்.

அன்றைய ஒருங்கிணைந்த இராமநாதபுரம் மாவட்டத்தில், தேவஸ்தான கமிட்டியின் தலைவராகப் பணியாற்றி “சகல ஆலயங்களிலும் ஹிந்து மதத்தைச் சேர்ந்த எல்லா வகுப்பினருக்கும் ஆலய நுழைவு உரிமை வேண்டும்” என்ற தீர்மானத்தை முன்மொழிந்து நிறைவேற்றியவர். ஆதிதிராவிடர் குழந்தைகள் கல்வி கற்பதற்காக, தன் சொந்தச் செலவில் பள்ளிகளை உருவாக்கி நடத்தியவர்.

காங்கிரசு இயக்கத் தலைவர்களில் ஒருவரான கக்கன் அவர்களின் துணைவியார் பார்வதி அவர்கள் அந்தப் பள்ளியில் படித்தவர். பிறகு, அந்தப் பள்ளியிலேயே ஆசிரியராகப் பணியாற்றியவர்.

### சாதிப் பெயர் துறந்த முதல்வர்

தனது சுயமரியாதைச் செயல்பாடுகளால் சொந்த ஜாதியினரின் எதிர்ப்புக்கு ஆளான போதும், இராமச்சந்திரனார் கொள்கையில் பின்வாங்கவில்லை. 1929-ஆம் ஆண்டு செங்கல்பட்டில் நடைபெற்ற முதல் சுயமரியாதை மாநாட்டில் தங்கள் பெயருக்குப் பின்னால் சாதிப் பெயரையோ பட்டத்தையோ போடக்கூடாது என்ற தீர்மானத்தை முன்மொழிந்து, இனி நான் இராமச்சந்திர சேர்வை அல்ல, இராமச்சந்திரன் மட்டுமே என்று அறிவித்த முதல் தலைவர் என்ற பெருமையைப் பெற்றவர்.

அவர் பெயரில், ஒரு நினைவுப் பூங்காவை சிவகங்கையில் திறந்து வைத்து இராமச்சந்திரனார் திராவிட இயக்கத்தின் **‘வைர விழுது’** என்று பாராட்டினார் பேரறிஞர் அண்ணா.

இத்தகைய சுயமரியாதைக் கொள்கை வீரரை மணந்தது முதல் அவரது இயக்கத் தொண்டுக்குத் துணையாகவும் பொதுவாழ்வுக்கு ஆதரவாகவும் குடும்பப் பொறுப்பினையும் ஏற்று நடத்திவந்தார் கிருஷ்ணம்மாள். ஏழு பிள்ளைகளைப் பெற்று (அதில் ஒன்று இரட்டைப் பிரசவம்) அவர்களை திராவிட இயக்க உணர்வோடு வளர்த்தனர்.

### சிவகங்கையில் குழந்தைகள் மருத்துவமனை

ஆண்களின் குடும்பப் பொறுப்புகள், அவர்களது பொது வாழ்க்கைப் பணிகளுக்கு இடையூறாக இருப்பதில்லை. ஆனால், பெண்கள் நிலை அப்படியில்லை. ஒரு நூற்றாண்டுக்கு முன்னால் பெண்கள் பொதுவெளியில் செயலாற்றுவதே பெரும்பாடு. அதிலும் சமூகச் சீர்திருத்தம் , பெண்ணுரிமை குறித்துப் பேசுவதற்கு பெண்கள் முன்வருவது எவ்வளவு கடினம்? அந்தக் கால கட்டத்தில் ஏழு பிள்ளைகளின் தாயான கிருஷ்ணம்மாள் அவர்கள் சிவகங்கை தாலுகா நிர்வாகக் குழு, ராமநாதபுரம் மாவட்ட நிர்வாகக் குழு இரண்டிலும் உறுப்பினராக இருந்தார். ராமநாதபுரம் மாவட்டக் கல்வி மன்றக் குழுவிலும் உறுப்பினராக இருந்தார்.

**நாட்டுக்கே அதிர்ச்சியளித்த இராமச்சந்திரனாரின் மரணம் ஏழு பிள்ளைகளின் தாயான கிருஷ்ணம்மாள் அவர்களை, எப்படி நிலைகுலையச் செய்திருக்கும் என்பதை விளக்க வேண்டியதில்லை.**

நீதிமன்றப் பணிகளிலும், நீதிக்கட்சியின் செயல்திட்டங்களிலும் சுயமரியாதை இயக்கத்திலும் இடையறாது செயல்பட்டு அனைவரின் மதிப்பையும் பெற்றுயர்ந்த நிலையில் இராமச்சந்திரனார் அவர்கள் திடீரென 1933-ஆம் ஆண்டு காலமானார். அப்போது அவருக்கு வயது 49. அவரது இறப்பு, தமிழ் மக்களுக்கும் சுயமரியாதை இயக்கத்துக்கும் எத்தகைய இழப்பு என்பதைக் ‘குடிஅரசு’ ஏட்டில் தன் துயரம் தோய்ந்த இரங்கலுரையில் வெளிப்படுத்தினார் தந்தை பெரியார்.

நாட்டுக்கே அதிர்ச்சியளித்த இராமச்சந்திரனாரின் மரணம் ஏழு பிள்ளைகளின் தாயான கிருஷ்ணம்மாள் அவர்களை, எப்படி நிலைகுலையச் செய்திருக்கும் என்பதை விளக்க வேண்டியதில்லை.

ஆனால், இயற்கையாகவே துணிவுகொண்ட கிருஷ்ணம்மாள் அவர்களை, திராவிட இயக்கம் ஊட்டிய அறிவும் தெளிவும் மேலும் உறுதி கொண்டு செயல்படவைத்தன. பெண்கள் மற்றும் ஆதிதிராவிடர்களுக்கான கல்வி வளர்ச்சித் திட்டங்களைத் தொடர்ந்து நடத்தினார். தன்னைப்போல் தான் பிறந்த சமூகப் பெண்களும் முன்னேற வேண்டும், மூடநம்பிக்கைகளில் இருந்து விடுபட வேண்டும் என்ற கருத்துகளை அகம்படியர் பெண்கள் சங்க மாநாடுகளில் எடுத்துரைத்தார். மாவட்ட நிர்வாகக் குழுவில் தொடர்ந்து, வாதாடி சிவகங்கையில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக ஒரு தனி மருத்துவ நிலையம் அமைக்கச் செய்தார்.

### திராவிட இயக்கக் குடும்பம்

பொது வாழ்க்கையைப் போலவே தனிவாழ்வையும் உறுதியுடன் எதிர்கொண்டு தன் பிள்ளைகளை, திராவிட இயக்கத்தின் பாதுகாப்பு அரண்களாக உருவாக்கினார். இராமச்சந்திரனார்- கிருஷ்ணம்மாள் அவர்களின் மூத்தமகன் இராமசுப்ரமணியம் அவர்கள் சார்பு நீதிபதியாகப் பணியாற்றிவந்தார். அவர் பணியாற்றிய பகுதிக்கு பிரச்சாரத்துக்காக வந்த தந்தை பெரியாரை அவர் நேரில் சென்று பார்த்தது குறித்து விசாரணை எழுந்தது.

‘தந்தை பெரியார் என் ஞானத்தந்தை. அவரைச் சந்திப்பது என் பணிக்கு இடையூறாகாது’ என்று அவர் பதில் கூறினார். 1971-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, இராமசுப்ரமணியம் அவர்களை தமிழ்நாடு பணியாளர் தேரவாணையத்தின் தலைவராக நியமித்தார். அந்தப் பதவிக்குப் பெருமை சேர்த்த இராமசுப்பிரமணியம் அவர்கள் மறைந்தபோது அவரது விருப்பப்படி அவரது உடல் பெரியார் திடலில் மரியாதைக்காக வைக்கப்பட்டது.

கிருஷ்ணம்மாள் அவர்களின் இரண்டாவது மகள் இராமலட்சுமி அவர்கள் சிறந்த பகுத்தறிவாளர். திராவிடர் கழக மகளிர் அணியின் அமைப்பாளராகப் பணியாற்றியவர். சிறந்த போராளி. திராவிடர் கழகம் நடத்திய போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். அவரது வாழ்க்கைத் துணைவர் வழக்கறிஞர் சிவகங்கை சண்முகநாதன் அவர்கள். பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் தலைவராகப் பொறுப்பேற்றுப் பெருமை சேர்த்தவர். அவர்கள் மகன் வழக்கறிஞர் இன்பலாதன் திராவிடர் கழகத்தின் மாவட்டத் தலைவராகப் பணியாற்றினார்.

கிருஷ்ணம்மாள் அவர்களின் மற்றொரு மகனான தியாகராஜன் அவர்கள், சிவகங்கைப் பகுதியின் திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளராகச் செயலாற்றியவர்.

இன்னும் திராவிட இயக்கத்தின் தொண்டுக்கும் சாதனைக்கும் சாட்சியாகக் குறிப்பிட்டு, சொல்லப்பட வேண்டிய புகழ்பெற்ற மருத்துவர்கள், பேராசிரியர்கள், வழக்கறிஞர்கள், நீதிபதிகள், பொறியாளர்கள் எனக் கிளைவிட்டுப் பரவிய பெருமரத்தை வளர்த்தெடுத்த திராவிடப் போராளியான கிருஷ்ணம்மாள்-இராமச்சந்திரனாரின் உழைப்பு வரலாற்றில் நிலைபெறத்தக்கதாகும்.

(வருவார்கள்...)

---

## ஃபிரான்ஸ் நாட்டில் வள்ளுவர்!




திருவள்ளுவருக்கு பிரெஞ்சு நாட்டில் சிலை வைத்து கொண்டாடுவது கண்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த சிலையை ஃபிரெஞ்சு தமிழ்ப் பண்பாட்டு அமைப்புக் கொடையாக வழங்கியுள்ளது என்பதை அறிந்து மகிழ்கிறேன்.

காலம், இடம், சமயம் என்ற அடையாளங்களைக் கடந்து நிற்கும் அற்புதனாகிய திருவள்ளுவர் சிலையில் உடையில் நெற்றியில் நிறம் எதனையும் பூசாத நேர்மையைப் போற்றுகிறேன்.


நமது திருவள்ளுவர் நமக்கானவர் மட்டும் அல்ல. உலகத்திற்கானவர். அதனால்தான் மொழி, இனம், நிலப்பரப்பு பேரரசுகளின் பெயர்கள் ஆறுகள், நகரங்கள் என்ற எந்தப் பெயரையும் அடையாளம் காட்டாதவர். அவரது இந்தத் தெளிவை நினைத்துப் பெருமிதம் கொள்கிறேன்.

இந்திய உச்சநீதிமன்றம், நாடாளுமன்றம், ஐக்கிய நாடுகள் சபை ஆகிய இடங்களில் திருவள்ளுவரின் சிலையையும் அவரது காலத்தை வென்ற கருத்துக்கள் சிலவற்றையும் பொறிப்பது பொருத்தமாக இருக்கும்.

**-தொல்லியல் ஆய்வாளர்**
**ஆர்.பாலகிருஷ்ணண் ஃபேஸ்புக் பதிவு**

---

## ஃப்ளாஷ்பேக்



### தோளோடு தோளாக!

1986-ஆம் ஆண்டு ஈரோட்டில் தி.மு.க விவசாயிகள் அணி மாநாடு நடைபெற்றது. இன்றைய தமிழ்நாடு முதலமைச்சரும் அன்றைய இளைஞர் அணி செயலாளருமான தளபதி அவர்கள் அந்த மாநாட்டுக்கு வருகை தந்திருந்தார். அப்போது அன்றைய பெரியார் மாவட்ட தி.மு.க இளைஞர் அணி அமைப்பாளர் மு.கணேசன் அவர்கள் தளபதி அவர்களோடு புகைப்படம் எடுத்துக்கொண்டிருந்த சமயத்தில், ஓரமாக நின்று கொண்டிருந்த என்னையும் அழைத்து அருகில் நிற்கவைத்து, என் தோள் மீது கை போட்டுக் கொண்டு புகைப்படம் எடுக்கச் சொன்னார். வாழ்நாளில் எனக்குக் கிடைத்த மிகவும் மகிழ்ச்சியான தருணம்.


சுப்பிரமணியம்

**-மு.சுப்பிரமணியம்,**
**கிராமடை, ஈரோடு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---

## கருவூலம்

### திராவிட நாடு திராவிடருக்கே...

**1939-ஆம் ஆண்டு, இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்ட நடராசன், தாளமுத்து ஆகிய இருவரும் உயிர்நீத்தனர். இந்தி எதிர்ப்புப் போராட்டம் காரணமாக, பெரியாருக்கு விதிக்கப்பட்ட கடுங்காவல் தண்டனையில் இருந்து விடுதலை ஆனார் . பெரியார் நடத்திய இந்தி எதிர்ப்புப் போரை எதிர்கொள்ள இயலாத நிலையில் வேறு காரணங்களைக் காட்டி இராஜாஜி பதவி விலகிய ஆண்டு.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 327




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131